Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு : 9-6-2014 Issued : 9-6-2014

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, பிப்ரவரி 17, 2014—தொகுதி 61—எண் 2**

**Monday the 17th February 2014—Volume 61—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

**17–2–2014**

**உள்ளடக்கம்**


| | | பக்கங்கள் |
|---|---|---|
| **1.** | **வினாக்கள்—விடைகள்—** | |
| | *(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்* | 75-121 |
| | *(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 1)* | 122-212 |
| **2.** | **அறிக்கை அளித்தல்—** | 213 |
| | உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் திரு. துரைமுருகன் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை | 213 |
| **3.** | **அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** | 213-214 |
| | *சென்னை மாநகர காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு நீட்டிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014* | |
| | மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 213-214 |
| **4.** | **அரசினர் தீர்மானங்கள்—** | 214-216 |
| | உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் திரு. துரைமுருகன் மீதான அவை உரிமைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளுதல் | |
| | மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 214-215 |
| **5.** | **வரவு-செலவுத் திட்டம், 2014-2015, பொது விவாதம்—** | 216-319 |
| | *திரு. எல். வெங்கடேசன் | 216-219 ,221, 225, 227-236 |
| | *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 216-219, 222-223 285,287 |
| | *மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 219-221, 227-229, 297 |

பக்கங்கள்

**5. வரவு-செலவுத் திட்டம், 2014-2015, பொது விவாதம்—**
தொடர்ச்சி


| | |
|---|---|
| மாண்புமிகு திரு. ப. மோகன் | 220 |
| மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் | 221, 223, 224, 262 , 285, 286-287 |
| *திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் | 222-224, 226 241,242, 284-285 287,313 |
| மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் | 222,286,288 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 224-226,272, 283,284,288, 291-292,294 |
| திரு. வி.சி. சந்திரகுமார் | 226 |
| மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் | 230-233 |
| *மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 233-235 |
| திரு. க. கோபால்சாமி | 236-247 |
| *திரு. க. பாலகிருஷ்ணன் | 247-257 |
| திரு. சு. குணசேகரன் | 257-261,263, 265-271,315 |
| திரு. ஜே.ஜி. பிரின்ஸ் | 262 |
| *திரு. அ. சவுந்தரராசன் | 264,269,289 |
| திரு. எம். ஆறுமுகம் | 264 |
| செல்வி கே. பாலபாரதி | 264,282,286 |
| மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர் | 268-269 |
| திரு. ஆர்.என். கிட்டுசாமி | 271-281 |




பக்கங்கள்

**5. வரவு-செலவுத் திட்டம், 2014-2015, பொது விவாதம்—**
தொடர்ச்சி


| | |
|---|---|
| *திருமதி எஸ். விஜயதரணி | 281-284, 288-290,292, 294-298, 301-307 |
| *மாண்புமிகு திருமதி பா. வளர்மதி | 290 |
| *மாண்புமிகு திரு. செ. தாமோதரன் | 293-294, 317 |
| *மாண்புமிகு திரு. பி.வி. ரமணா | 295, 296 |
| *மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் | 298-299 |
| *திருமதி ம. சக்தி | 299,300, 307-312 |
| திரு. ஆர். அருள்செல்வன் | 315-318 |
| *மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா | 316-319 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 319-320 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விஜய, மாசி 5, திருவள்ளுவர் ஆண்டு—2045

## 2014 பிப்ரவரி 17, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை."

செல்வங்களுள் எல்லாம் சிறப்பானது செவியால் கேட்டறியும் செவிச் செல்வம்தான். அது அனைத்துச் செல்வங்களிலும் முதன்மையான செல்வம் ஆகும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**48—**

### தூர் வாருதல்

***30649—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மேட்டுப்பாளையம் தொகுதியிலுள்ள பில்லூர் அணையைத் தூர் வார அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதியிலுள்ள பில்லூர் அணையின் தூர் வாரும் பணிகளை, உலக வங்கியின் நிதி உதவியுடன் அணைப் பாதுகாப்பு, மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2014-2015 மற்றும் 2015-2016 ஆம் ஆண்டுகளில் நிலை 2-ல் எடுத்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. வனத் துறையின் அனுமதி பெறுவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வனத் துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர், பில்லூர் அணையின் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை வளங்கள் கொட்டிக் கிடக்கின்ற இந்தியத் திருநாட்டில் நாளை அமைதியை நிலைநாட்டி 'பாரினிலே சிறந்த நாடு, எங்கள் பாரதத் திருநாடு' என்னும் பாரதியின் கனவினை நனவாக்க இருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) 'நாளைய பாரதம்', எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

*மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி வருகிற பவானி ஆற்றின் குறுக்கே பில்லூர் என்ற இடத்திலே கட்டப்பட்டிருக்கின்ற பில்லூர் நீர் மின் திட்ட அணைக்கட்டில், தற்போது 100 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அது தவிர, கோவை மாநகருக்கு, மிகப் பெரிய குடிநீர்த் திட்டமான 575 குக்கிராமங்களை உள்ளடக்கிய ஒரு திட்டம், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலே, 1985-லே துவக்கப்பட்டு, இடையிலே கிடப்பிலே கிடந்து அந்தத் திட்டத்தை மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நேரத்திலே,*





*1991 ஆம் ஆண்டிலிருந்து வேகமாக அந்தப் பணியைச் செய்து, 1995 ஆம் ஆண்டிலே பொது மக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு, இன்று இலட்சக்கணக்கான மக்கள் பயன்படுத்துகிற திட்டமாக பில்லூர் குடிநீர்த் திட்டம் நிலை-1 இயங்கி வருகிறது.*

*அதற்குப் பின்னாலே மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்திலே, கோவை மாநகராட்சிக்குத் தனி குடிநீர்த் திட்டம் வேண்டுமென்று ரூ.117 கோடி மதிப்பீட்டில் ஏறத்தாழ 125* m.l.d. *அளவில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டு, அதற்கான ஆய்வுப் பணிகளெல்லாம் முடிக்கப்பட்டதற்குப் பின்னாலே, இடையிலே வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய மெத்தனப் போக்கால் அந்தத் திட்டம் பயன்பாட்டுக்கு வராமல் இருந்தது.*

*மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இன்றையதினம் அந்தத் திட்டம் முழுமை பெற்றிருக்கிறது. அந்த வகையிலே இந்த அணைக்கட்டின்மூலம் மிகப் பெரிய ஜீவாதாரத் திட்டமான, குடிநீர்த் திட்டம் மற்றும் நீர் மின் திட்டம் மூலம் இன்றையதினத்திலே அந்த மக்கள் பயன்பெற்று வருகிறார்கள்.*

*மழைக் காலங்களிலே அடித்துவரப்படும் சேறு, சகதி, மணலெல்லாம் பில்லூர் அணையின் கொள்ளளவு குறைகிற அளவிற்குப் படிந்து, பல ஆண்டுகளாக அணையினுடைய கொள்ளளவு வெகுவான அளவிற்குக் குறைந்து, அது மூடப்பட்டிருக்கிறது. ஆகவே, வருகிற காலங்களிலே, வனத் துறையின் அனுமதியை விரைவில் பெற்று, அந்த இரண்டு ஜீவாதாரத் திட்டங்களையும் நிறைவேற்றி, தொடர்ந்து எந்தவிதமான இடையூறும் இல்லாமல் நடக்கும் வகையிலும், மின் உற்பத்தியினுடைய அழுத்தம் குறையாமல் இருக்கிற வகையிலும், நீர்மின் திட்டம் சிறப்பாகச் செயல்படுகிற வகையிலும், போர்க்கால அடிப்படையிலே அந்த அனுமதியைப் பெற்றுத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

[2014 பிப்ரவரி 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பில்லூர் அணையில் தூர் வாருவதால் ஏற்படக்கூடிய பலன்களையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். மின்சார உற்பத்திற்கு மட்டுமல்லாமல் கோயம்புத்தூர் பெருநகரத்திற்கு வேண்டிய குடிநீர் ஆதாரமாகவும் அந்த அணை விளங்குகிறது. எனவேதான் அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி, அந்த அணையைத் தூர் வாருவதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஏற்கெனவே முடிவு செய்து, அதற்கான அரசாணைகளும் வெளியிட்டுள்ளன. 2014-2015 ஆம் ஆண்டுகளில் அந்தத் திட்டமானது உலக வங்கி நிதியுதவியுடன் அணைப் பாதுகாப்பு மறுசீரமைப்பு மேம்பாட்டுத் திட்டம் நிலை II-ன்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. வனப் பகுதியிலே இந்த அணை அமைந்திருப்பதால், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு வனத் துறையினுடைய அனுமதி பெற வேண்டியிருக்கிறது. வனத் துறை அனுமதி பெறுவதற்காக, வனத் துறை அதிகாரிகளுடன் நம்முடைய மின்சார வாரிய அதிகாரிகள் கலந்து பேசி, அதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். வனத் துறை அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், மிக விரைவிலே, — 60 கோடி ரூபாய் செலவில் அந்த அணையைத் தூர் வாரும் பணி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. —60 கோடி ரூபாய் செலவில் பில்லூர் அணை தூர் வாரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற 2014-2015 ஆம் ஆண்டில் உலக வங்கியின் உதவியோடு பில்லூர் அணையைத் தூர் வாரித் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

அதேபோல், வனத் துறையின் அனுமதியையும் வெகு விரைவிலே பெற்று, அந்தத் திட்டத்தைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்



2014 பிப்ரவரி 17]

தெரிவித்திருக்கிறார்கள். வாழும் மனித தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்த நேரத்திலே வணங்கி, இந்த அறிவிப்பு தந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக்குட்பட்ட பவானி ஆறானது மேற்குத் தொடர்ச்சி மலையிலே உற்பத்தியாகி, ஏறத்தாழ 90, 100 கிலோ மீட்டர் தொலைவு கடந்து மேட்டுப்பாளையம் வழியாகச் செல்லுகின்ற ஒரு ஜீவாதார நதி. இதன் குறுக்கேதான் ஏறத்தாழ ஐந்து இடங்களிலே அணைகளைக் கட்டி, அதன் மூலமாக 600 மெகாவாட் மின் உற்பத்தி செய்கிற திட்டங்கள் தற்போது பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் வாழும் மனித தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, தமிழகத்தை மின் மிகை மாநிலமாக உருவாக்க வேண்டுமென்று இந்த பவானி ஆற்றினுடைய மேற்கு பகுதியில்தான் சில்லஹல்லா என்ற இடத்திலே 500 மெகாவாட் மின் உற்பத்தியாகிற ஒரு திட்டத்தைத் தந்து, போர்க்கால அடிப்படையிலே ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோல மேட்டுப்பாளையத்திலிருந்து கீழ்ப்பள்ளத்திற்கு செல்லுகின்ற இடங்களிலே, புரட்சித் தலைவி அம்மாவினுடைய கடந்த கால ஆட்சியில் போடப்பட்ட இரண்டு கதவணைகள் கட்டும் திட்டம் கிடப்பிலே இருந்தது. மீண்டும் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, போர்க்கால அடிப்படையில் அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, இன்று பயன்பாட்டிற்கு வந்து ஒரு கதவணை 8 மெகாவாட்; அதனுடைய திறன் 10 மெகாவாட், ஆனால், 8 மெகாவாட் மின் உற்பத்தியை இன்று எட்டியிருக்கிறது. அதேபோல், இரண்டாவது கதவணை திட்டமும் இன்றையதினத்திலே சோதனை ஓட்டத்திற்கு வருகிற அளவிற்கு இந்தப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில், ஜீவாதார நதியாக விளங்குகின்ற பவானி ஆற்றின் குறுக்கே, பில்லூர் அணையிலிருந்து மேட்டுப்பாளையம் வரை உள்ள பகுதிகளிலே, பல்வேறு இடங்களிலே இதுபோன்ற கதவணைகள் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடங்களைக் கண்டறிந்து, அந்தப் பகுதிகளில் தடுப்பணைகளைக் கட்டி, அதன் மூலமாக மின்சார உற்பத்தி

[2014 பிப்ரவரி 17

செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்பதற்கு முன்பாக, அம்மாவினுடைய அரசால் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற பல்வேறு நீர்மின் திட்டங்களையெல்லாம் பட்டியலிட்டுச் சொன்னார்கள், நன்றி.

அதேபோல், மேட்டூர் அணையிலிருந்து கதவணைத் திட்டங்களின் மூலமாக புதிய மின் உற்பத்தி கொண்டுவரப்படுமா என்று கேட்டிருக்கிறார். ஏற்கெனவே இருக்கின்ற கதவணைத் திட்டங்களின்மூலம் பெறுகின்ற மின் அளவை ஏற்கெனவே அவரே குறிப்பிட்டிருக்கின்றார். மேட்டூர் அணையிலிருந்து வருகின்ற நீரிலும் சரி, காவேரி ஆற்றிலிருந்து வருகின்ற நீரிலும் சரி, அதேபோல் வைகை அணையிலிருந்து வருகின்ற நீரிலும் சரி, அதேபோல முல்லைப் பெரியாறு அணையிலிருந்து வருகின்ற நீரிலும் சரி-எந்தெந்த இடங்களில் கதவணைத் திட்டங்கள், நீர்மின் திட்டங்கள் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கின்றதோ, அந்த இடங்களில் எல்லாம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ஏறத்தாழ அந்தப் பணிகள் செயல்படுத்தப்பட்டு, மின் உற்பத்தி தொடங்கப்பட்டிருக்கின்றது.

*முற்பகல் 10-10*

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இன்னும் கூடுதலாக பல்வேறு இடங்களிலே கதவணைத் திட்டங்கள் ஏற்படுத்த முடியுமா என்பது குறித்து உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பொருளாதார ரீதியாக சாத்தியக் கூறுகள் இருப்பின், நிதிநிலைக்கேற்ப புதிய கதவணைத் திட்டங்களை ஏற்படுத்துவதற்கு அரசு ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.



2014 பிப்ரவரி 17]

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார உற்பத்திக்கு மட்டுமல்லாமல் பல்வேறு வழிகளில் அணைகள் மக்களுக்கு உதவிபுரிகின்றன. குடிநீர், நீர்ப்பாசனம் போன்றவற்றிற்கு மட்டுமல்லாமல், தமிழகத்திலே பெரிய அளவில் ஏற்பட்டிருக்கிற வன விலங்குகளுக்கான குடிதண்ணீர்ப் பிரச்சினை, சுற்றுச்சூழல் பிரச்சினை போன்ற அனைத்தையும் தீர்க்கிற திட்டங்களாக இன்றைக்கு அணைக்கட்டுத் திட்டங்கள் இருக்கின்றன.

அந்த வகையில், தமிழகத்தில் மின் துறையின் கட்டுப்பாட்டில் எத்தனை அணைகள் இருக்கின்றன என்பதையும், அத்தனை அணைகளையும் தூர் வாருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன். மேலும், அணைகள் பெரும்பாலும் வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் இருக்கின்ற காரணத்தால், இந்தக் காரணங்களை முன்வைத்து ஒட்டுமொத்த அணைகளையும் தூர் வாருவதற்கு இப்பொழுதே வனத் துறையின் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமாக பில்லூர் அணையைத் தவிர வேறு அணைகள் எதுவும் இருக்கின்றனவா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். சிறு அணைகள், நீர்த்தேக்கங்கள் உட்பட தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமாக 38 அணைகள் இருக்கின்றன. அந்தப் பட்டியலைக்கூட நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். மோயார் நீர் முன்தேக்கம், பாபநாசம் நீர் முன்தேக்கம்— நீர் மின்தேக்கம் அல்ல—நீர் முன்தேக்கம். அதாவது நீர் மேலே தேக்கி வைக்கப்பட்டு, மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டு, பின்னர் விவசாயத்திற்காக கீழ் அணைக்கு வருவது; மோயார் நீர் முன்தேக்கம், பாபநாசம் நீர் முன்தேக்கம், கிளன்மார்கன், மேல்பவானி நீரேற்றுத் தடுப்பணை, வாண்டல், சின்னக்குட்டியாறு, நீராளப்பள்ளம், மறவக்கண்டி, பார்சன்ஸ் பள்ளத்தாக்கு, சண்டிநல்லா, பெரியார் நீர் முன்தேக்கம், குந்தா பாலம் நீர் முன்தேக்கம், மேற்கு வராகப் பள்ளம், கிழக்கு வராகப் பள்ளம், வென்னீரார் ஆறு, மேற்கு நீர்ப்பிடிப்புப் பகுதி தடுப்பணை-1,

[2014 பிப்ரவரி 17

மேற்கு நீர்ப்பிடிப்புப் பகுதி தடுப்பணை-2, குட்டியாறு, முக்கூர்த்தி, காடம்பாறை, போர்த்திமன்ட், எமரால்டு, சேர்வலாறு, பில்லூர், பைக்காரா புதிய நீர் முன்தேக்கம், பைக்காரா, மேல்பவானி, பங்கிஹல்லா, தாமிரபரணி, ஹைவேவிஸ், பெகும்பஹல்லா, மேல் ஆழியாறு, மேற்கு நீர்ப்பிடிப்புப் பகுதித் தடுப்பணை-3, கோதையாறு-1, கோதையாறு-2, மணலாறு, எரவங்கலாறு, அவலாஞ்சி ஆகிய 38 அணைகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கட்டுப்பாட்டிலே இருக்கின்றன.

இந்த அணைகளிலுள்ள நீரானது மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், குடிநீர் மற்றும் விவசாயத்திற்கும் பயன்படுகின்ற காரணத்தினாலும் அந்த அணைகளைத் தூர் வாருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். 2014-2015, 2015-2016, 2016-2017, 2017-2018 ஆகிய நான்கு ஆண்டுத் திட்டங்களில் ஏறத்தாழ 15 அணைகளைத் தூர் வாருவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட பில்லூர் அணையானது வனத் துறையின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், 2014-2015 ஆம் ஆண்டிலேயே தூர் வாரப்படும். இந்த 15 அணைகளையும் தூர் வாருவதற்காக ஏற்கெனவே அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அதாவது, மோயார் நீர் முன்தேக்கத்திற்கு 92 இலட்சம் ரூபாய்; பாபநாசம் நீர் முன்தேக்கத்திற்கு 2,400 இலட்சம் ரூபாய், அதாவது 24 கோடி ரூபாய்; வாண்டல், காடம்பாறை மற்றும் மேல் ஆழியாறு-90 இலட்சம் ரூபாய்; மறவக்கண்டி-200 இலட்சம் ரூபாய்; சாண்டிநல்லா-50 இலட்சம் ரூபாய்; குந்தா பாலம் நீர் முன்தேக்கம்-1,150 இலட்சம் ரூபாய்; குட்டியாறு-100 இலட்சம் ரூபாய்; முக்கூர்த்தி-50 இலட்சம் ரூபாய்; சேர்வலாறு-200 இலட்சம் ரூபாய்; பில்லூர்-6,000 இலட்சம் ரூபாய், அதாவது 60 கோடி ரூபாய்; பைக்காரா-500 இலட்சம் ரூபாய்; பெகும்பஹல்லா-300 இலட்சம் ரூபாய்; கோதையாறு-2 200 இலட்சம் ரூபாய்; மணலாறு-200 இலட்சம் ரூபாய்; எரவங்கலாறு 200 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான 15 அணைகளும் தூர் வாரப்படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

அதைப்போல, பொதுப் பணித் துறையைச் சார்ந்த நீர்ப் பிடிப்பு மேலாண்மை வாரியம் (Watershed Management Board) தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இந்த 15 அணைகளில் மண் படிவு ஆய்வுகளைச் செய்து வருகிறது. Sedimentation studies என்ற, மண் படிவு எவ்வளவு இருக்கிறது என்பதை ஆய்வு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கையை பொதுப் பணித் துறை செய்து வருகிறது. அந்த ஆய்வுகளின் அடிப்படையில் தொழில்நுட்ப வல்லுநர்கள் கொடுக்கின்ற அறிக்கையைப் பெற்று, இறுதி செய்யப்பட்ட பின்பு, இந்த 15 அணைகளையும் தூர் வாருகின்ற பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 பிப்ரவரி 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சூலூர் தொகுதிக்குட்பட்ட நொய்யல் ஆற்றுத் தண்ணீர் மாசுபட்டுள்ளதால், அந்தப் பகுதியில் இருக்கின்ற எல்லா மக்களுக்கும் மாசு படிந்த குடிநீர் வருகின்றது. அதன் காரணத்தினாலே அந்த நொய்யல் ஆற்றுத் தண்ணீர் முழுவதையும் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீராகக் கொடுத்தால் நிலத்தடி நீர் சுத்தமாகும். அந்தத் தண்ணீர் குடிப்பதற்கு அங்கே இருக்கின்ற மக்களுக்குப் பயன்படும். அதுமட்டுமல்லாமல் 1987 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் தீட்டப்பட்டது. இத்திட்டத்தை கிணத்துக்கடவு தொகுதியிலே இருக்கின்ற செட்டிபாளையம் பகுதிக்குக் கொண்டுவர வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாமல் கேள்வி கேட்கிறீர்கள். அதனால் தனியாகக் கேள்வி போடுங்கள்.

வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 பிப்ரவரி 17

**49—**

## புதிய கட்டடம்

*__6391—திரு. சு. குணசேகரன்__

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு ரூ.153.73 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்கான கட்டடப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இருந்தாலும் அந்தப் பணிகளைத் துரிதப்படுத்தி இந்தத் தேர்தல் முடிந்தவுடன் அந்தக் கட்டடத்தைத் திறந்து வைத்து, ஊராட்சி ஒன்றியப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.*

*காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியம் என்பது மிக அதிக அளவு பரப்பளவு கொண்ட ஓர் ஊராட்சி ஒன்றியம். 43 ஊராட்சிகள் இருந்தாலும், அதனுடைய பரப்பளவு கூடுதலாக இருக்கின்ற காரணத்தால்—ஏற்கெனவே நான் காளையார்கோவில் ஒன்றியத்தை தனி வட்டமாகப் பிரிக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருக்கிறேன்—அந்த அடிப்படையில், அதற்கு முன்னோடியாக காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்து இரண்டு ஒன்றியங்களாக உருவாக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*



2014 பிப்ரவரி 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் கட்டி முடிவுறும் தருவாயில் உள்ளதாகக் கூறினேன். தேர்தல் முடிந்தவுடனேயே அதைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோரினார். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தச் செயலுக்கும் ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயித்துவிட்டார்கள் என்று சொன்னால், அந்தக் காலத்திற்குள் முடிக்கின்ற அரசுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி கட்டடம் கட்டி முடித்தவுடனேயே அந்தக் கட்டடம் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணை வினா ஒன்றை எழுப்பியிருக்கிறார்கள். அதாவது காளையார்கோவில் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து மற்றொரு ஒன்றியம் உருவாக்கப்பட வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அதுகுறித்த கருத்துரு வருகின்றபோது அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

[2014 பிப்ரவரி 17

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன் என்னுடைய மதுராந்தகம் தொகுதியிலுள்ள அச்சரப்பாக்கம் ஒன்றியத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளது. மேலும், நிருவாகத்திற்கு அங்கு போதிய இடவசதி இல்லாத காரணத்தால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தைக் கட்டித் தருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்கள் பயன்படுத்தக்கூடிய அரசு அலுவலகங்களானாலும் சரி, வீடுகளானாலும் சரி, அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் கட்டடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால் பசுமை வீடுகள் திட்டத்தைப் பற்றிக் கூறலாம். ஏற்கெனவே நடைமுறையில் உள்ள இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டித் தரப்படும் வீடுகளில் மக்கள் சரியாக வாழ முடியவில்லை என்பதால்தான், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்கள் வசிக்கக்கூடிய அளவில் 300 சதுர அடியில் புதிதாக வீடுகள் கட்டித் தரும் மிகப் பெரிய திட்டமான பசுமை வீடுகள் திட்டத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல்தான் அலுவலகக் கட்டடங்கள். ஏற்கெனவே கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் எல்லாம் 1960, 1963 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டவை. நிறைய கட்டடங்கள் 400 சதுர அடி, 500 சதுர அடிகளில்தான் கட்டப்பட்டிருக்கும். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தற்போது புதியதாகக் கட்டப்படுகின்ற அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களும், அரசுத் துறை அலுவலர்கள் பயன்படுத்தக்கூடிய வகையிலும், அங்கு வருகின்ற பொது மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையிலும், அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலும் 16,364 சதுர அடியில் கட்டப்படுகின்றன. எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 பிப்ரவரி 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், 50 ஊராட்சிகளை உள்ளடக்கிய பெரிய ஊராட்சி ஒன்றியமாகும்; 1,650 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. அந்த ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, அஞ்செட்டியை மையமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்பட வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்தது. அந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், கடந்த ஆண்டு ஊரக வளர்ச்சி மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, அஞ்செட்டியை மையமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதியதாக அறிவிக்கப்பட்ட அஞ்செட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு எப்பொழுது புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்படும் என்பதையும், அது மக்களுடைய பயன்பாட்டிற்கு, நிர்வாக ரீதியாக எப்பொழுது செயல்பாட்டிற்கு வரும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2014 பிப்ரவரி 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை; நீண்டகாலமாக இருந்த கோரிக்கை. எப்பொழுதும் யாரும் நிறைவேற்ற முடியாத கோரிக்கையை, பணியைச் சவாலாக எடுத்து, எந்தப் பணியாக இருந்தாலும் நிறைவேற்றக்கூடிய ஒரே தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். எனவே, நீண்டகாலமாக இருந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அரசு முறையாக நடவடிக்கை எடுத்து, இரண்டாகப் பிரித்து, அது மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Mother of India என்று, இந்தியத் திருநாட்டின் அம்மாவாக, இந்திய மக்கள் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். ஈரோடு மாவட்டம், அந்தியூரிலுள்ள 50 ஆண்டுகளுக்கு மேலான மிகப் பழமையான ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குற்றச்சாட்டாக நான் இதைக் கூறவில்லை. ஆனால், நடைமுறையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எவ்வாறு செயல்பட்டிருக்கிறது என்பதை இங்கே கூறுவது என்னுடைய கடமை என்று கருதுகின்றேன்.



2014 பிப்ரவரி 17]

கடந்த ஆட்சியில், வெறும் 68 ஊராட்சிக் கட்டடங்கள்தான் கட்டப்பட்டன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், கடந்த மூன்று நிதியாண்டுகளில் 675 ஊராட்சிக் கட்டடங்கள் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல 70 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எந்தக் கோரிக்கை வந்தாலும், கோரப்படும் கட்டடங்கள் எந்த நிலையில் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்து, அனைத்துக் கட்டடங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அந்த ஆணையின்படி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் பழுதடைந்திருந்தால், நிச்சயமாகக் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வான் மழை பொய்த்தாலும் பொய்க்கும்; வள்ளல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணை மழை பொய்க்காது என்ற வகையில், வரிக்கு வரி, வரியே இல்லாத, வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையைத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) பசிப் பிணி போக்க ‘அம்மா உணவகம்’, தவித்த வாய்க்கு சுத்திகரிக்கப்பட்ட ‘அம்மா குடிநீர்’, ஏங்கி நிற்கின்ற ஏழையெளிய மக்களின் ஏக்கத்தைப் போக்கிட வருவாய்த் துறையில் ‘அம்மா திட்டம்’, நோய்ப் பிணியில் சுருண்டு கிடக்கின்ற தமிழக மக்களைக் காக்க புதிய திட்டமாக ‘அம்மா மருந்தகம்’ போன்ற அரும்பெரும் திட்டங்களை வழங்கிய இன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சர், நாளைய பாரதத்தினுடைய பிரதம அமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் திருவடிகளைப் பணிவோடு வணங்கி, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில், புதிதாக அறிவிக்கப்பட்ட ஸ்ரீமுஷ்ணம் ஊராட்சி ஒன்றியத்திற்குப் புதிய கட்டடம் கட்டுகின்ற பணி தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

[2014 பிப்ரவரி 17

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

**திரு. கோவி. சம்பத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலை கடலென ஆர்ப்பரித்து எழுகின்ற தமிழ் நெஞ்சத்தின் இதயங்களில் எல்லாம் நீக்கமற நிறைந்திருக்கின்ற, திராவிட இயக்கத்தின் ஒப்பாரும் மிக்காரும் இலா உலகப் பெரும் தலைவர்களின் ஒப்பற்ற தலைவி, 'இன்றைய தமிழகம், நாளைய பாரதம்' மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை பணிவுடன் வணங்குகிறேன்.

வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் 1961 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பழைய கட்டடத்திலே செயல்பட்டு வருகின்றது. அந்த அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னது போல, 1960-1963 ஆம் ஆண்டுகளில்தான் இதுபோன்ற ஒன்றியக் கட்டடங்கள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. நிச்சயமாக, அந்த ஒன்றியக் கட்டடங்கள் எல்லாம் பழமை வாய்ந்த கட்டடங்களாகவே இருக்கும். அதோடு மட்டுமல்லாமல், அங்குள்ள அலுவலர்களின் பயன்பாட்டிற்கு உகந்த கட்டடங்களாகவும் அவை



2014 பிப்ரவரி 17]

இருக்காது. காரணம், 500 சதுரடி, 1,000 சதுரடியில்தான் அந்தக் கட்டடங்கள் இருக்கும். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, அந்த ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது தொடர்பான மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை உடனடியாக ஆய்வு செய்து, கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**50—**

### வீடுகள்

***7707—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) முதுகுளத்தூர் தொகுதி, முதுகுளத்தூர் பேரூராட்சியிலுள்ள குடிசை வீடுகளுக்குப் பதிலாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

**திரு. மு. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தை ஆளுகின்ற ஆற்றல் பெற்றிருக்கும் இந்தியத் திருநாட்டின் இதய தெய்வம்; வாழும் மனித தெய்வம்; (மேசையைத் தட்டும்

ஒலி) இளைய சமுதாயத்தின் காவல் தெய்வம்; கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர்; தமிழ்நாடு முதலமைச்சர்; எல்லையில்லா கருணை, ஆழ்ந்த அறிவாற்றல், தளர்வுறாத துணிவு, அசையாத உறுதி கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி பாதம் தொட்டு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் தொகுதி, முதுகுளத்தூர், கமுதி மற்றும் சாயல்குடி பேரூராட்சிகளில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் நீண்ட, நெடு நாட்களாகவே குடிசை வீட்டில் வாழக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கின்றது. IAY திட்டத்திலோ அதாவது இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்திலோ அல்லது பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்திலோ வீடுகள் கட்டிக் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதால், அவர்களுக்குத் தனி வீடுகளோ அல்லது அடுக்குமாடிக் கட்டடங்களோ கட்டித் தர வேண்டுமென்பது அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையை கனிவோடு பரிசீலித்து, பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்திலாவது அந்தப் பகுதி மக்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக 12-வது நிதிக் குழு மற்றும் 13-வது நிதிக் குழு நிதியின் மூலமாகத்தான் பேரூராட்சிகளில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. உள்ளாட்சித் துறையின் மூலமாக பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் கிராமங்களில்தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. 13-வது நிதிக் குழு 300 கோடி ரூபாய் நிதி அனுமதி அளித்துள்ளது. அந்த நிதி பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்ட செலவிடப்பட்டிருக்கிறது. இப்போது 2015-2020 ஆம் ஆண்டுக்குள் வீடுகள் கட்டித் தருவதற்கு 14-வது நிதிக் குழுவில் 7,150 கோடி ரூபாய் நிதி கோரப்பட்டுள்ளது. கோரிய நிதி கிடைத்தவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

**திரு. மு. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை, ஏற்று 14-வது நிதிக் குழு நிதி கிடைத்தவுடன் வீடுகள் கட்டித் தரப்படும் என்று வாக்குறுதி அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

முற்பகல் 10-30

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதி, 37-வது வட்டம், எம்.கே.பி. நகரில் 6 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட ஒரு தீ விபத்தில் 175-க்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து நாசம் ஆயின. அதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதே இடத்திற்குப் பக்கத்தில், ஒரு சமூக நலக் கூடத்தில் தற்காலிகமாக இடம் ஒதுக்கப்பட்டு, அவர்கள் குடியிருந்து வருகிறார்கள். கிட்டத்தட்ட 6, 7 ஆண்டுகளாக எந்தவிதமான அடிப்படை வசதியும் இல்லாமல், கடுமையான சூழ்நிலையிலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இப்போது மீண்டும் தீ விபத்து அபாயம் அவர்களை விரட்டிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு மாற்று இடம் ஏதாவது ஒதுக்கப்பட்டு, அவர்களுக்கு விரைவில் கொடுக்கப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு, மகாகவி பாரதியார் நகரில் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான சுமார் 9 கிரவுண்ட் நிலத்தினை 175 குடும்பங்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தன. 2006-ல் அங்கு தீ விபத்து ஏற்பட்டது. அதனால் தற்காலிகமாக அவர்கள் வீட்டு வசதி வாரியத்தினுடைய சமூக நலக் கூடத்தில் தங்க வைக்கப்பட்டார்கள். அவர்கள் தங்களுக்கு வீடு வேண்டுமென்று சாலை மறியல் செய்தார்கள். குடிசை மாற்று

[2014 பிப்ரவரி 17

வாரியத்தில் தற்போது குடியிருப்புகள் J.N.N.U.R.M. திட்டத்தின்கீழ், துரைப்பாக்கம் மற்றும் பெரும்பாக்கம் பகுதிகளில் கட்டப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ், வீடு ஒதுக்கீடு செய்ய பயனாளிகளைக் கண்டறிந்து தெரிவிக்கும்படி வாரியம் சென்னை மாநகராட்சியைக் கேட்டுக் கொண்டுள்ளது. சென்னை மாநகராட்சிமூலம் பயனாளிகளைத் தேர்வு செய்து, அடையாள அட்டை — Bio-metric card — வழங்கினால் அவர்களுக்குக் குடிசை மாற்று வாரியம்மூலம் ஒக்கியம் துரைப்பாக்கம் அல்லது பெரும்பாக்கம் பகுதிகளில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்ற பசுமை வீடுகள் திட்டத்தின் மூலமாக தமிழகம் முழுவதும் கிராமப்புறங்களில் இருக்கின்ற வீடுகளெல்லாம், இன்றைக்கு கான்கிரீட் வீடுகளாக மாறியிருக்கின்றன. ஆனால் இன்றைக்குத் தமிழகம் முழுவதும் இருக்கின்ற பேரூராட்சிப் பகுதிகளில், மனிதன் குடியிருப்பதற்கே லாயக்கற்ற சிறிய அளவிலான வீடுகளும், பெரும்பாலும் குடிசை வீடுகளும் இருக்கின்றன. எனவே, கிராமங்கள்தோறும் பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்க கணக்கெடுக்கும்போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு அதை எடுத்துச்சென்று, பேரூராட்சிப் பகுதிகளில் குடிசைகளாக இருக்கின்ற அந்த வீடுகளையும் வீட்டு வசதித் துறையின் மூலமாக புது வீடுகளாகக் கட்டுவதற்கு, இந்த ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் வசித்து வருகின்ற குடிசைவாசிகள் பற்றிய கணக்கெடுப்புகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாநகராட்சிப் பகுதிகளில் J.N.N.U.R.M., R.A.Y. போன்ற திட்டங்களின்கீழ் மத்திய



2014 பிப்ரவரி 17]

அரசு நிதியின் மூலமாகவும், மாநில அரசின் பங்களிப்புடனும் குடிசை மாற்று வாரிய வீடுகள் கட்டப்படுகின்றன. நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 12-வது நிதிக் குழு, 13-வது நிதிக் குழுவின் நிதியினைப் பெற்றும் குடிசை மாற்று வாரியத்தால் வீடுகள் கட்டப்பட்டன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 14 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், குடிசை மாற்று வாரிய வீடுகள், நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் கட்டுவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு, 14-வது நிதிக் குழுவில் 7,150 கோடி ரூபாய் அளவிற்கு நிதி கேட்டிருக்கிறார்கள்; மாநில அரசின் பங்கு 7,150 கோடி ரூபாய். கிட்டத்தட்ட 14,300 கோடி ரூபாயில் வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. 2015-2020-ல் அதற்கான நிதி கிடைத்தால், நடவடிக்கை எடுக்கப்படும். அப்போது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஆய்வு செய்து பேரூராட்சி, நகராட்சிகளில் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**51—**

## தக்காளிக் கூழ் தொழிற்சாலை

***7500—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி தொகுதி, பொள்ளாச்சியில் தக்காளிக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி தொகுதி, பொள்ளாச்சியில் தக்காளிக் கூழ் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்குவது

குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. என்றாலும்கூட, ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் அந்தத் தொகுதியில் முன்வருவார்களேயானால், அரசின் சார்பாக பல்வேறு மானியங்கள் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.*

**திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள்பேரில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு, தனியார்கள் தக்காளிக் கூழ் தொழிற்சாலை அமைக்க முன்வந்தால், என்னென்ன சலுகைகள் கிடைக்க ஆவன செய்யும் என்பதை விளக்கமாகக் கூற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு மானியங்களை இதுபோன்று தொழிற்சாலை அமைக்க முன்வருபவர்களுக்குத் தந்துகொண்டிருக்கிறது. இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பில் 25 விழுக்காடு, அதில் அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் முதலீட்டு மானியமாக வழங்கப்படும். உற்பத்தி தொடங்கிய ஐந்து ஆண்டுகளில், முதல் மூன்று ஆண்டுகளில் குறைந்தபட்சம் 25 வேலையாட்களை பணியில் ஈடுபடுத்தும் தொழில் நிறுவனங்களுக்குக் கூடுதலாக 5 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரை மானியம் தரப்படும். அதேபோன்று, 320 கே.வி.ஏ. வரை நிறுவுதிறன் உள்ள மின்னாக்கிகளின் விலையில் 25 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.50 இலட்சம் வரை தரப்படும். இதுபோன்ற மானியங்களையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக அவர்களுக்கு வழங்குவதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.*

**திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது*
*எழுவாரை எல்லாம் பொறுத்து."*

*என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவருடைய வாக்கிற்கிணங்க, உலகத்தார்க்கு அச்சாணியாக இருக்கும் விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் நல்லரசு, தனியார் தொழிற்சாலை துவங்க முன்வந்தால் என்னென்ன மானியங்கள் கிடைக்கும் என்பதை விளக்கமாகக் கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், உலகத்தாராகிய தேருக்கும், அதற்கு அச்சாணியாக இருக்கும் விவசாயிகளுக்கும் சாரதியாக இருந்து, சாதனைகள்மூலம் சரித்திரம் படைத்து வாரி, வாரி வழங்கும் எங்கள் இதய தெய்வம், ஒன்பதாவது வள்ளல் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி அமைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**52—**

## அங்கன்வாடி மையக் கட்டடம்

***35319—திரு. டி. சுரேஷ்குமார்:**

*மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கம் தொகுதி, செங்கம் வட்டம், மேல்ராவந்தவாடி கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2014 பிப்ரவரி 17

*(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி, செங்கம் வட்டம், மேல்ராவந்தவாடி கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையம் 1982 ஆம் ஆண்டு முதல் அரசுக் கட்டடத்தில் முதன்மை மையமாகச் செயல்பட்டு வருகிறது. தற்போது அந்த மையம் பழுதடைந்திருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பழுதடைந்த கட்டடங்களைச் சரி செய்வதற்கும், புதிதாக அங்கன்வாடி மையங்களுக்குக் கட்டடங்களைக் கட்டுவதற்கும் ஆணையிட்டிருக்கின்ற காரணத்தினால், புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கு இந்த அங்கன்வாடி மையத்தை இடித்துவிட்டு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திற்குக் கருத்துரு அனுப்பி, திருவண்ணாமலை மாவட்ட திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) அவர்கள் புதிய கட்டடம் கட்ட நிருவாக அனுமதி அளித்துள்ளார்கள். தற்போது இடம் தேர்வு செய்யப்பட்டு, அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டுவதற்கான வேலைகள் தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் பணிகள் முடிக்கப்பட்டு புதிய மையம் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், இருக்கையில் இல்லை.*

*வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**53—**

### மகளிருக்கான கலைக் கல்லூரி

***35162—திரு. இ. சுப்பையா:**

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*



2014 பிப்ரவரி 17]

*(அ) மற்றும் (ஆ) அம்பாசமுத்திரம் தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா அவர்கள்.*

**திரு. இ. சுப்பையா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமம், தானம், கருணை, பாசம், ஈவு, இரக்கம் இவற்றின் மறு உருவமாக, ஏழைகளின் இல்லங்களில் அறிவு தீபம் ஏற்றுவதையே தன் இலக்காகக் கொண்டு, நாடு அமைதி, வளம், வளர்ச்சி அடைய வித்தாக இந்த 2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.17,731.71 கோடியும், (மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்வித் துறைக்கு ரூ.3,627.93 கோடியும் ஒதுக்கி, தமிழகத்தை இந்தியாவில் முதன்மை மாநிலமாக ஆக்கிட நாளும் செயல்பட்டுவரும் தரும தேவதை, எங்கள் இதய தெய்வம், புரட்சித் தலைவி, கழக நிரந்தர பொதுச் செயலாளர், தமிழ்நாடு முதலமைச்சர், நாளைய பாரதத்தின் முதல் தமிழ் பிரதமர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

*முற்பகல் 10-40*

*அம்பாசமுத்திரம் தொகுதியில் மகளிருக்கென தனியாக கலைக் கல்லூரி இல்லை. அம்பாசமுத்திரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள மாணவிகள் கல்லூரிகளில் படிப்பதற்கு 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருநெல்வேலிக்கோ அல்லது குற்றாலத்திற்கோ செல்ல வேண்டியிருப்பதால், மாணவிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கருணைத் தாயின் பார்வைக்கு இதனை எடுத்துச் சென்று, பரிசீலிக்குமாறு அன்புடன் கேட்டு அமருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 693 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. அதில் அரசு கலைக்*

[2014 பிப்ரவரி 17

கல்லூரிகளாக ஏற்கெனவே 62 கல்லூரிகள் இருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்றும், பொது மக்களுடைய கோரிக்கையை ஏற்றும், மாணவ, மாணவிகளின் கோரிக்கையை ஏற்றும் கூடுதலாக 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உருவாக்கப்பட்டு, இன்றைக்கு, தமிழ்நாட்டில் மொத்தம் 74 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. மேலும், பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்; மகளிர் அதிகமாக படிக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நோக்கம். அந்த நோக்கத்தின் அடிப்படையில் ஏற்கெனவே தமிழ்நாட்டில் 22 மகளிருக்கான கல்லூரிகள் இருக்கின்றன. 2013-2014 ஆம் ஆண்டில் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் மகளிருக்கென இரண்டு கல்லூரிகளை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். மகளிர் அதிகமான அளவில் உயர் கல்வியில் சேர வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தக் கல்லூரிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

திருநெல்வேலியில் ராணி அண்ணா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அக்கல்லூரியில் மகளிர் மட்டும் அதாவது 2,667 மாணவிகள் பயின்று வருகின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், சுரண்டையில் இருபாலர் பயிலும் கல்லூரி ஒன்று துவங்கப்பட்டு வருகிறது. பொதுவாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், இதுவரையில் வரலாற்றிலே இல்லாத அளவிற்கு 36 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உருவாக்கித் தந்த பெருமை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்லாமல், தொடங்கப்படுகிற அனைத்துக் கல்லூரிகளையும் இருபாலர் பயிலும் கல்லூரிகளாக உருவாக்கித் தந்திருக்கிறார்கள். மகளிருக்கென தனியாக இரண்டு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, எதிர்காலத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 பிப்ரவரி 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா அவர்கள்.

**திரு. இ. சுப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணில் நல் அறமும், கருணை இதயமும், மண்ணில் மனதார மக்களுக்கு உதவிகள் புரிவதே தன் இலட்சியமாகக்கொண்டு செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், பரிசீலிக்கப்படும் என அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள எம்.எம். மகளிர் அரசுக் கல்லூரியில் மாணவிகள், பேராசிரியர் மற்றும் அலுவலர்களுக்கு அடிப்படைப் பணிகளுக்கு, குறிப்பாக துப்புரவுப் பணி செய்வதற்குப் போதிய பணியாளர்கள் இல்லை. அதேபோன்று விளையாட்டுத் துறைக்கு, நூலகத்திற்கு, அதாவது non-teaching staff என்று சொல்லப்படுகின்ற பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள். அநேகமாக, தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு கல்லூரிகளிலும் துப்புரவுப் பணியாளர்கள் நியமனம் தேவை எனக் கருதுகிறேன். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளையாட்டுத் துறைக்கு Physical Director வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் விளையாட்டுத் துறைக்கு பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்ற ஆணையை வழங்கியிருக்கிறார்கள். ஆனால், சிலரை அங்கே பணி நியமனம் செய்கிறபோது, கூடாதென நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணையைப் பெற்றிருக்கிறார்கள். அந்தத் தடையாணை நீக்கப்பட்டவுடன், அந்த Physical Director பணியிடம் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நூலகர் பணியிடம் நிரப்பப்பட வேண்டுமெனச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசுக் கல்லூரிகளில் காலியாகவுள்ள 37 நூலகர் பணியிடங்களை நிரப்புவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசுக் கல்லூரிகளில் துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமெனக் கேட்டிருக்கிறார்கள். துப்புரவுப் பணியாளர்களை நியமிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**54—**

**தொழிற்பயிற்சி நிலையம்**

***18259—திரு. ஏ. லாசர்:**

*மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளத்தில் மகளிருக்கென அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளத்தில் பெண்கள் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

**திரு. ஏ. லாசர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்விக்கு போவதற்கு முன்பு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் என்னுடைய தொகுதியைச் சார்ந்த விஷயங்களுக்காக நன்றி சொல்ல அனுமதியளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-45*

*ஒன்று சிறுபான்மை முஸ்லிம்கள் அதிகமாக வாழ்கிற தேனி மாவட்டம், என்னுடைய தொகுதி சார்ந்த பகுதியில் முஸ்லிம் பெண்கள் தங்கிப் படிப்பதற்கான ஹாஸ்டல் வசதியைச் செய்து தர வேண்டுமென்று அரசிடம், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கடந்த ஆண்டு பட்ஜெட்டின்போது கோரிக்கை வைத்திருந்தேன். அதை ஏற்று இந்த ஆண்டு தேனியில் மேல்நிலைப் பள்ளி வரை படிக்கும் முஸ்லிம் பெண்களுக்காக ஒரு ஹாஸ்டல் ஏற்படுத்துவதற்கு உத்தரவிட்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*அத்தோடு, என்னுடைய பெரியகுளம் தொகுதியில் பெரியகுளம் ஆரம்ப சுகாதார நிலையத்தை மையமாகக் கொண்டு செவிலியர் பயிற்சிக் கல்லூரி ஒன்று 13 கோடியே 54 இலட்சம் ரூபாயில் கட்டுவதற்கான உத்தரவு பிறப்பித்து அந்தப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனது தொகுதியின் சார்பாகவும், என் சார்பாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*என்னுடைய கேள்வியில் தேனி மாவட்டத்தில் 3 அரசினர் தொழிற்பயிற்சி மையங்கள் இருக்கின்றன. ஆண்டிப்பட்டி, தேனி, போடி; இங்கே பெண்கள் ஒரு குறிப்பிட்ட அளவுதான் இந்தத் தொழில் பயிற்சி மையங்களில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நவீனப்படுத்தப்பட்டிருக்கக்கூடிய தொழில், புதிய புதிய கண்டுபிடிப்புகள், கம்ப்யூட்டர்கள் ஆகியவற்றின் மூலமாக புதிய தொழில்நுட்பங்களோடு பல்வேறுவிதமான வேலை வாய்ப்புகளுக்குரிய படிப்புகள் இன்றைக்கு உருவாகிக்*

[2014 பிப்ரவரி 17

கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில், பெண்களுக்கென்று அப்படிப்பட்ட கல்வி கிடைக்கும் வகையில் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கிற நோக்கத்தில்தான் நான் இந்தக் கேள்வியை அரசிடம் கேட்டிருந்தேன். குறிப்பாக, கட்டடப பட வரைவாளர் (draughtsman), ஆடை தயாரித்தல் (dress making), embroidery (needle) works, அதே போல், இன்ஸ்ட்ருமெண்ட் மெக்கானிக்-நுண்ணிய கருவியைப் பயன்படுத்துவது, கம்ப்யூட்டர் மெக்கானிக் (Hardware) இதுபோன்று இருக்கக்கூடிய, கணினிகளை மையமாக வைத்து புதிய தொழில்நுட்பங்களோடு இன்றைக்குத் தொழில் துறையில் பல்வேறுவிதமான படிப்புகள் உருவாகிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், துணைக் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலையில் இதுபோன்ற டிப்ளமா படிப்பு அல்லது வேலைவாய்ப்பு பெண்களுக்கு கிடைக்கக்கூடிய இதுபோன்ற தொழிற்கல்லூரி என்பது அங்கே துவக்கப்பட வேண்டுமென்கிற தன்மையில்தான் அரசு அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். பெண்கள் வீட்டிலேயே இருந்துகொண்டு வேலை செய்வதற்கான வாய்ப்புகள் இவற்றில் இருப்பதனால், இதுகுறித்து அரசு பரிசீலித்து, பெரியகுளத்தை மையமாகக் கொண்டு இதுபோன்ற ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தைத் துவக்க வேண்டுமாய் அரசைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி மகளிர் தொழிற்பயிற்சி நிலையம், போடி அரசு தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தேனியில் ஓர் அரசு பொது தொழிற்பயிற்சி நிலையம் என 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 751 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. 2012-2013 ஆம் வருட மாணவர் சேர்க்கையில் இவற்றில் 72 இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இவற்றில் ஆண்டிப்பட்டி மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்தில் மட்டும் 33 காலியிடங்கள் உள்ளன. தேனி மாவட்டம், பெரியகுளம் தொகுதியில் இரண்டு தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள்*



2014 பிப்ரவரி 17]

*199 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. 2012-2013 ஆம் வருட மாணவர் சேர்க்கையில் இவற்றில் 47 இடங்கள் நிரப்ப இயலாமல் காலியாக உள்ளன. இவை தவிர, தேனி மாவட்டத்தில் 8 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 976 இருக்கைகளுடன் செயல்படுகின்றன. 2012-2013 ஆம் வருட சேர்க்கையில் 256 இடங்கள் காலியாக உள்ளன. 2012-2013 ஆம் கல்வியாண்டு முதல் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50 சதவிகித இடங்களுக்கு மாணவர் சேர்க்கையை மாவட்ட அளவில் கலந்தாய்வின்மூலம் நடத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு இன்றைக்கு மாணவர் சேர்க்கை முடிவுற்ற பின்பும் 83 காலியிடங்கள் ஏற்பட்டுள்ளன. மேலும் 2012-2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 10 இடங்களிலே புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்க ஆணையிட்டு இன்றைக்குச் செயல்படுத்தப்பட்டுள்ளது. தேனி மாவட்டம், போடியிலே ஒரு புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 30 சதவிகித இருக்கைகள் பெண்களுக்காக ஒதுக்கப்படுகின்றன. எனவே, பெரியகுளம் பகுதியைச் சார்ந்த மாணவிகளுக்கு தேனி மாவட்டத்தில் இயங்கிவரும் தொழிற்பயிற்சி நிலையங்களே போதுமானதாக இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கின்ற விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்லியிருப்பது ஒரே ஒரு விஷயம். புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் விதத்தில் அதனைச் செயல்படுத்த வேண்டுகிறேன். அரசு இதனைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

துணைக் கேள்வியாக என்னுடைய தொகுதியில் நான் தொடர்ந்து சொல்லிவருகின்ற மாம்பழக் கூழ் தொழிற்சாலை என்பது தொடர்ந்து ரூ.25 கோடியில் . . . (மணியடிக்கப்பெற்றது)

[2014 பிப்ரவரி 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மூலக் கேள்வியை ஒட்டி கேளுங்கள். இந்த மூலக் கேள்வியை விட்டுவிட்டு நீங்கள் தொடர்பில்லாமல் கேள்வியைக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி சார்ந்துதான் கேட்கிறேன். சிறியது என்று சொன்னால், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரிடம் கேளுங்கள்.

**திரு ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொழில் சார்ந்தது என்பதால் கேட்கிறேன். ஏறக்குறைய 25 கோடி ரூபாயில் அரசு செய்ய வேண்டியிருப்பதால்தான், நான் அப்படி நினைத்தேன். நூற்றுக்கணக்கான பேருக்கு வேலைவாய்ப்பும், ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு நல்ல விலையும் கிடைக்கக்கூடிய தொழில்சார்ந்து இருப்பதனால்தான், நான் இந்தத் துறையில் கேட்டுவிடலாம் என்று நினைத்து, அந்தத் தன்மையில்தான் இந்த வினாவினை எழுப்பினேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு விளக்கி, அரசு தொழில் துறை சார்ந்து இதனை பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மாநிலத்தில் தொழில் பயிற்சியினுடைய தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு சீரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் 2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில்கூட ரூ.50 கோடியில் நிதியினை ஒதுக்கீடு செய்து, தொழிற் கல்வி நிலையங்களில் நவீன இயந்திரங்கள் நிறுவுவதற்கும், கட்டடங்களைச் சீரமைப்பதற்கும் ஆணையிட்டுள்ளார்கள். அந்த வகையில் புதிய பாடப் பிரிவுகள் துவங்க வேண்டும் என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு



2014 பிப்ரவரி 17]

எடுத்துச் சென்று புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**55—**

## இரயில்வே மேம்பாலம்

***35759—திரு. வி.எஸ். இராஜி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, செய்யூர்-வந்தவாசி சாலை, சோத்துப்பாக்கம் பகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செய்யூர் தொகுதி, செய்யூர்-வந்தவாசி சாலையில் சோத்துப்பாக்கத்தில் இரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

**திரு. வி.எஸ். இராஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈன்ற தாயினும் மேலாக தமிழக மக்கள்மீது பற்றும் பாசமும் கொண்டு, கல்வி என்ற அழியாத சொத்தை தமிழக மக்களுக்கு அளித்த எங்கள் கலைத் தாயின் தலைமகள், அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, தமிழகத்தில் தாங்கள் கொண்டுவரும் சாதனைத் திட்டங்களுக்கு இடையே தேர்தல் கூட்டணி பேரம் பேசும்

[2014 பிப்ரவரி 17

எதிரிகளின் சிந்தனையைக்கூட செயல் இழக்கவைத்த எங்கள் தன்னிகரற்ற தலைவியே, இன்று தள்ளு வண்டியும், தண்ணீர் வண்டியும் திக்குத்தெரியாத காட்டில் கூட்டணி அமைக்க முடியாமல் திணறிக்கொண்டிருக்கின்ற வகையிலே, தமிழகத்தில் சாதனைத் திட்டங்களை தமிழகத்திலே சிறப்பாகச் செயல்படுத்துகின்ற தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். நான் செய்யூர்-வந்தவாசி சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை ஆய்வு செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். இந்த ஆய்வு எப்போது முடிவுற்று வேலை தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் தொகுதி, செய்யூர்-வந்தவாசி சாலையில் சோத்துப்பாக்கத்தில் இரயில்வே கடவு எண் 74-க்கு பதிலாக இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்கு ஆய்வுகள் மேற்கொண்டு, இந்த மேம்பாலத்தினை இரயில்வே துறையுடன் இணைந்து செயல்படுத்த வேண்டியிருப்பதால் 2014-2015 ஆம் ஆண்டில் இப்பணியினை எடுத்துக்கொள்வதற்கு இரயில்வே துறைக்குப் பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. இரயில்வே துறையின் அனுமதி பெறப்பட்ட பிறகு மேம்பாலம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

**திரு. வி.எஸ். இராஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேம்பாலம் அமைத்துத் தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக பணிவோடு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 பிப்ரவரி 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். மனோகர், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**56—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

***21845—திரு. பி.ஆர். மனோகர்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், தச்சம்பட்டறை கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைப்பதற்கு அரசின் வழிகாட்டி விதிமுறைகள் பூர்த்தியாகாத காரணத்தினால், வேலூர் மாவட்டம், சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், தச்சம்பட்டறை கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். மனோகர், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வீரக்கல்புதூர் பேரூராட்சி, 4-வது வார்டில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட நியாய விலைக் கடை இதுவரை திறக்கப்படவில்லை. அந்தக் கடையைத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2014 பிப்ரவரி 17

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிகள் முழுமையாக நிறைவேறியவுடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆசியோடு கடை திறந்துவைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**57—**

**கால்நடை மருத்துவமனை**

***20535—திரு. கே.பி. நாகராஜன்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மயிலம் தொகுதி, மயிலம் ஊராட்சி ஒன்றியம், நெடமோழியனூரில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதியிலே, நெடிமோழியனூர் கிராமத்திலே, ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா என்று உறுப்பினர் கேட்டிருக்கிறார். அங்கே கால்நடைத் துறையினுடைய விதிகளுக்குட்பட்டு, ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்ற காரணத்தினால், மனிதனுக்கு இணையாக கால்நடைகளுக்கும் மருத்துவம் பார்க்கவேண்டுமென்ற அம்மா அவர்களின் ஆட்சியினுடைய இலட்சியத்தின் அடிப்படையிலே (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே கால்நடைக் கிளை நிலையம் ஒன்று நிச்சயமாக அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2014 பிப்ரவரி 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன்.*

**திரு. கே.பி. நாகராஜன்:** *கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், வணங்குதலுக்கும் போற்றுதலுக்கும் உரிய ஆராதனைக்குரிய தெய்வம், நான் வணங்கும் அன்னை, நடமாடும் மனித தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இங்கிருந்தவண்ணம் அவர்களது மலர்ப்பாதம் தொட்டு வணங்குகிறேன். இங்கே புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மயிலம் சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலே, நான் கேட்பதற்கும் முன்பாகவே அந்த நெடிமோழியனூர் கிராமத்திலே கால்நடை பராமரிப்புத் துறையினுடைய கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தரும்படி ஆணை பிறப்பித்த அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி, 'கோமாதா எங்கள் குல மாதா, குலம் காக்கும் நலம் யாவும் அரும் மாதா, எங்கள் அரும் மாதா', 'தன்னையே கொடுத்தாலும் வாழைக்கு ஈடு சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசு மாடு', (மேசையைத் தட்டும் ஒலி) 'தன்னையே கொடுத்தாலும் அதற்கேது ஈடு', 'அம்மாவே நீங்கள் நினைத்தது நாடு, அம்மா கோமாதா எங்கள் குல மாதா" (மேசையைத் தட்டும் ஒலி). என்று கூறி மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு என்னுடைய கோடானுகோடி நன்றி மலர்களை அம்மாவினுடைய பாதத்தில் சமர்ப்பித்து, நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**58—**

**பேருந்து கூண்டு கட்டும் பிரிவு**

***23064—திரு. ம. குணசேகரன்:**

*மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலுள்ள சிப்காட் வளாகத்தில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவு தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சிப்காட் வளாகத்தில் அரசின் சார்பில் பேருந்து கூண்டு கட்டும் செயல்திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும், தொழில் முனைவோர் முன்வந்தால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

**திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒட்டுமொத்த தமிழர்களுடைய தலைவராகவும், பாதுகாவலராகவும் விளங்கிக்கொண்டிருக்கின்ற வாழும் மனித தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து, சிவகங்கை மாவட்டத்தை பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்று அறிவித்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களைப் போல, சிவகங்கை மாவட்டத்திற்கு மாமன்னர்கள் மருதுபாண்டியர்களுக்கு சிலையெடுத்தும், நினைவுத் தூண் எழுப்பியும், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கவும் தியாக மங்கை குயிலிக்கு நினைவுச் சின்னம் அமைப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் ஒரு முறை வணங்கி, தெய்வீகத் திருமகனார் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு சமீபத்தில் தங்கக் கவசம் அணிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய சிவகங்கை மாவட்ட ஒட்டுமொத்த மக்களின் சார்பாக இந்தத் தருணத்தில் நன்றியினைக் கூறிக்கொள்கிறேன்.*





*சிவகங்கை மாவட்டத்தில், மானாமதுரை தொகுதி எப்போதும் அம்மாவினுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.*

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

**திரு. ம. குணசேகரன்:** *அத்தகைய மானாமதுரை தொகுதிக்கு ஒரு தாலுகா அலுவலகமும், ஒரு மருத்துவமனையையும் தந்திருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள், அதே வரிசையில் அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கின்ற— மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்டு இயங்கிவருகின்ற அந்த மானாமதுரை சிப்காட் வளாகத்தில் அரசு சார்பாக பேருந்து கூண்டு கட்டும் தொழிற்சாலையைத் தொடங்கி அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கனவை நனவாக்கித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களிடம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சிப்காட் வளாகம் என்றால் தொழில் முனைவோர் வருகின்றபோது அந்த வளாகத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதுதான் சிப்காட் நிறுவனத்தின் பணி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த சிப்காட் வளாகத்தில் பேருந்து கூண்டு கட்டும் தொழிற்சாலை அமைக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல தொழில் முனைவோர்கள் வந்தால் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதற்கு ஆவன செய்து, அதற்கு முன்னுரிமை கொடுக்கும். ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் தென் தமிழகத்திலே தொழில் துவங்க வருபவர்களுக்கு புதிய சலுகைகளையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு*

[2014 பிப்ரவரி 17

நிச்சயமாக ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், நம்முடைய இதயங்களில் என்றென்றும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் மானாமதுரை சிப்காட் வளாகம் தொடங்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்த சிப்காட் வளாகத்திற்கு 436 ஏக்கர் என்பதற்குப் பதிலாக 2,000 ஏக்கர் நிலம் ஒதுக்கி, அதை ஒரு பெரிய சிப்காட் வளாகமாக அமைக்க கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் அறிவித்திருந்தார்கள். அதைப்போல தென் மாவட்டங்களில் புதிய தொழில்கள் தொடங்கப்படும் எனவும் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருந்தார்கள். அதை அடிப்படையாகக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானாமதுரையில் இருக்கின்ற அந்த சிப்காட் வளாகத்தில் பேருந்து கூண்டு கட்டும் தொழிற்சாலைத் திட்டம் இந்த நிதியாண்டிலேயே தொடங்குவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று அதை நிறைவேற்றித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தொழிற்பூங்கா தொடங்குவதற்காக சுமார் 2,700 ஏக்கர் நிலப் பரப்பில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக சிவகங்கை மற்றும் காரைக்குடி வட்டங்களில் அடங்கிய கிளாதாரி, இலுப்பக்குடி மற்றும் அரசனூர் ஆகிய கிராமங்களில் நிலம் கண்டறியப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து தொழில் தொடங்குபவர்கள் முன்வருகின்றபோது முன்னுரிமை அடிப்படையில் இந்த ஆண்டே மானாமதுரை சிப்காட் வளாகத்தில் தொழில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 பிப்ரவரி 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**59—**

### ஜவுளிப் பூங்கா

***8471—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரி தொகுதி, எடங்கணசாலை, எளம்பிள்ளை ஆகிய பகுதிகளில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

சங்கரி தொகுதி, எடங்கணசாலை மற்றும் எளம்பிள்ளை பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க தொழில் முனைவோர்கள் முன்வருவார்களாயின் இப்பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். ஜவுளிப் பூங்கா அமைக்க தொழில் முனைவோர்கள் முன்வருவார்களானால் நடைமுறையில் உள்ள திட்டங்களின்படி அரசு உதவியுடன் இந்தப் பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு கூறினார்கள். ஜவுளிப் பூங்கா அமைக்க நடைமுறையில் உள்ள திட்டங்களுக்கு எந்தெந்த வகைகளில் அரசு நிதி உதவி செய்கின்றது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 பிப்ரவரி 17

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைவோர்கள் முன்வருகின்றபோது, தனியாரும், அரசும் சேர்ந்து இதுபோன்ற தொழிற்பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன. ஜவுளித் துறையில் வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும், ஏற்றுமதியைப் பெருக்கவும், சர்வதேசத் தரத்துடன் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன. இந்தியாவிலே இருக்கின்ற 61 ஜவுளிப் பூங்காக்களில், தமிழகத்தில்தான் 6-ல் ஒரு பங்கு, அதாவது 10 ஜவுளிப் பூங்காக்கள் சிறப்பான முறையில் தொடங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்றது. தொழிற்பூங்காக்கள் அமைப்பதற்கு மத்திய அரசு தனது திட்டத் தொகையில் 40 விழுக்காடு அல்லது 40 கோடி ரூபாய் மானியமாகவும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 9 விழுக்காடு அல்லது 9 கோடி ரூபாய்க்கு மிகாமல் மானியமாகவும் வழங்குகின்றது. தனியார் பங்களிப்போடு அரசும் சேர்ந்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகின்றது. ஜவுளித் துறையில் ஏற்றுமதியை அதிகப்படுத்துவதற்கு இதுபோன்ற திட்டம் தற்போது பயன்பாட்டில் இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

*முற்பகல் 11-05*

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 61 ஜவுளி தொழிற்பூங்காக்கள் செயல்பட்டு வருகின்றன என்று கூறினார்கள். அந்த 61 ஜவுளிப் பூங்காக்களில் சேலம் மாவட்டத்தில் எத்தனை ஜவுளிப் பூங்காக்கள் செயல்பட்டு வருகின்றன என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அளவில் 61 தொழிற்பூங்காக்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதில் தமிழகத்தில் 10 தொழிற்பூங்காக்கள் இருக்கின்றன. இது அரசின் சார்பில் நடத்தப்படுகின்ற தொழிற்



2014 பிப்ரவரி 17]

பூங்காக்கள் மட்டுமல்ல, தனியார் பங்களிப்போடு அரசு தன்னுடைய மூலதனத்தினை, மத்திய அரசும், மாநில அரசும் இதுபோன்று செயல்படுத்திக்கொண்டிருக்கின்றன. இங்கே, இந்திய அளவில் ஒரு இலட்சத்து அறுபத்தைந்தாயிரம் கோடி அளவிற்கு ஜவுளி ஏற்றுமதி செய்யப்படுகின்றது. தமிழகத்திலிருந்து செயல்படுகின்ற 10 தொழிற்பூங்காக்கள்மூலம் ரூபாய் 900 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. தமிழகத்தில்தான் மூன்றில் ஒரு பகுதியாக, 45 ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற நிலையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சிறப்பான முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சேலம் மாவட்டத்திற்கென்று தனியாக தொழில் தொடங்குவதற்கு முன்வருவார்களேயானால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்தப் பகுதியில் சிறப்பான முறையில் வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கும், ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**60—**

**பள்ளியைத் தரம் உயர்த்துதல்**

***4128—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, திருமலைராஜபுரம் அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், திருமலைராஜபுரத்தில் இயங்கிவரும் அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை, அப்பள்ளி இருக்கும் பகுதியிலுள்ள ஆதி திராவிடர் மக்கள் நலன் கருதி, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, உத்தரவு பெற்று மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திடத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் இருக்கையில் இல்லை.*

*வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**61—**

## விரைவுப் பேருந்து வசதி

**7685—திரு. வே. குணசீலன்:***

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வந்தவாசி தொகுதி, வந்தவாசியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டு, வந்தவாசி தொகுதியில் மட்டும் 9 புதிய வழித்தடப் பேருந்துகளும், 8 பேருந்துகள் வழித்தடம் நீட்டிப்பும் செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா





அவர்களின் உத்தரவைப் பெற்று வந்தவாசியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.*

**திரு. வே. குணசீலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்கள் போற்றிடும் முத்தான திட்டங்களைத் தந்து, வல்லரசு பெற்றிட நல்லரசு தந்த, தங்கத் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வந்தவாசி தொகுதியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**62—**

## 24 மணிநேர மருத்துவமனை

**24753—திருமதி ம. சக்தி:***

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

[2014 பிப்ரவரி 17

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி சட்டமன்றத் தொகுதி, சீர்காழி ஊராட்சி ஒன்றியம், திருவெண்காடு பிரதான ஆரம்ப சுகாதார நிலையம், ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டு, 24 மணிநேரமும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

**திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா, சங்கத் தமிழ் பூமி தந்த சத்தியத் தாயே, செயற்கரிய செயல் யாவும் செய்து முடிக்கும் எங்கள் செந்தமிழ் சேகுவாராவே செந்தமிழர் சீதனமாம் சேலை கட்டிய நேதாஜியே, தமிழகத்தில் இருந்துதான் தாய்நாட்டுக்கு புத்தொளி தோன்றும் என வீரத் துறவி விவேகானந்தர் விளம்பிய சத்தியத்தை சாதித்துக்காட்டிய சந்தியா தாய் ஈன்ற சரித்திரமே, தாயின் பாதத்தின் கீழ்தான் சொர்க்கம் என்றுரைத்த நபிகளின் நல்லுரைக்கு வடிவம் தரும் வல்லமையே, முண்டாசுக் கவிஞன் சொன்ன முழுதான இலக்கணத்தை பழுதின்றிக் கொண்டே பார் வியக்கும் புதுமைப் பெண்ணே, அம்மா, பாரதம் இனி உங்கள் பின்னே உண்ணாமல் உழைத்து உறங்காமல் விழித்து, இந்த மண்ணாளும் மாதரசி மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெண்காடு அரசு ஆரம்ப சுகாதார நிலையம்மூலம் சுமார் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மக்கள் பயன்பெறுகின்றார்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மீனவப் பகுதிகள் அங்கு அதிகம் இருப்பதனால் ஒரு நாளைக்கு சுமார் 400 முதல் 500 நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள். நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, மிகச் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்ற அந்த மருத்துவமனைக்கு, குடும்ப நல அறுவைச் சிகிச்சை அரங்கிற்கு புதிய கட்டடமும், தாய்-சேய் நல புதிய கட்டடமும், புற நோயாளிகளின் வசதிக்காக புதிய கட்டடமும் கட்டித் தர மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



2014 பிப்ரவரி 17]

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோய் கண்ட மக்களின் நலனுக்காக தாய் கண்ட நல்ல திட்டம்தான் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துகின்ற அற்புதமான திட்டம். உறுப்பினர் குறிப்பிடுகின்ற திருவெண்காடு சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. தற்பொழுது, உறுப்பினர் கோரியிருக்கின்ற மகப்பேறு கட்டடங்கள், பார்வையாளர் கூடம், குடும்ப நல அறுவை அரங்கம் ஆகியவை குறித்து உரிய கருத்துரு துறையின் மூலமாக பெறப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

**திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

[2014 பிப்ரவரி 17

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பட்டியல் 1)@

**1—**

### கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 3890—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணியில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புளோரைடால் குடிநீர் தரம் பாதிக்கப்பட்டுள்ள தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தற்போது முழுமையாக முடிவடைந்து மக்களின் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், இத்திட்டத்தினை ஆரணி நகராட்சி வரை நீட்டிக்க சாத்தியமில்லை.*

**2—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 27116—திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், காடன்குளம், திருமலாபுரம் ஊராட்சி, தெற்கு கழுவூரில் 30,000 லிட்டர்*

*@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.*



2014 பிப்ரவரி 17]

*கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஒன்றியம், காடன்குளம் திருமலாபுரம் ஊராட்சியில் உள்ள தெற்கு கழுவூர் குடியிருப்பின் மக்கள்தொகை 2006-ஆம் ஆண்டின்படி 250 ஆகும். இக்குடியிருப்பின் ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் பயனில் உள்ளது. எனவே, வாரிய விதிமுறைகளின்படி மக்கள்தொகையின் அடிப்படையில் கூடுதலாக 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட சாத்தியக் கூறுகள் இல்லை.*

**3—**

### திடக் கழிவுகளை அகற்றல்

**வினா எண் 28193—திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெரம்பூர் தொகுதி, காட்டன் கால்வாயைத் தூர் வாரி திடக்கழிவுகளை அகற்ற அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*சென்னை மாநகராட்சி, 4-வது மண்டலம், கோட்டம் 36-ல் உள்ள கேப்டன் காட்டன் கால்வாயில் சென்னை மாநகராட்சி*

[2014 பிப்ரவரி 17

மழைநீர் வடிகால் துறையின்மூலம் தற்போது இருபுறமும் தடுப்புச் சுவர் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், இக்கால்வாயில் உள்ள திடக்கழிவுகளை அகற்றும் பணியும் நடைபெற்று வருகிறது.

**4—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 36358—திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், சிற்றூராட்சிகளுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்காக வடிவமைக்கப்பட்ட சிறப்புத் திட்டமாகும். வேறு மாவட்டங்களுக்கு இத்திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க போதிய சாத்தியக் கூறுகள் இல்லை.

வேலூர் மாவட்டத்திலுள்ள வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944 ஊரகக் குடியிருப்புகளுக்கு மேட்டூர் அணை கீழ்ப்புறம், செக்கானூர் அருகே காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர் திட்டம், ரூ.1295.00 கோடியில் செயல்படுத்த அரசின் நிருவாக ஒப்புதல் அரசாணை எண் 319, நாள் 31-12-2010-ல் பெறப்பட்ட பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டப் பணிகள் 01/2015-ல் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திலிருந்து குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியத்திலுள்ள, மசிகம், கொத்தப்பல்லி, சின்னவரிகம், தேவலாபுரம், பாலூர், கொத்தூர் கைலாசகிரி, சின்ன



2014 பிப்ரவரி 17]

தாமல்செருவு, மாச்சம்பட்டு, பெரிய வரிகம் மற்றும் துத்திப்பட்டு ஆகிய 11 ஊராட்சியிலுள்ள 59 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்படும்.

**5—**

## தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 38787—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், வடகுடி ஊராட்சி, கரியப்பட்டி மற்றும் வடகுடி ஆதி திராவிடர் காலனியில் சேதமடைந்துள்ள வீடுகளைப் பராமரித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசுத் திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**6—**

## தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 38789—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், சூரக்குடி ஊராட்சி, சூரக்குடி, நெற்புகப்பட்டி, தேவாரப்பட்டி, திருவேலங்குடி மற்றும் மாலையிட்டான்பட்டி ஆதி திராவிடர் காலனியில் சேதமடைந்துள்ள வீடுகளைப் பராமரித்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 பிப்ரவரி 17

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசுத் திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

**7—**

## தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 38794—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், முத்துப்பட்டனம் ஊராட்சி, இந்திரா நகர், பழைய ஆத்தங்குடி மற்றும் படையாளிப்பட்டி ஆதி திராவிடர் காலனியில் சேதமடைந்துள்ள வீடுகளைப் பராமரித்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசுத் திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.*



2014 பிப்ரவரி 17]

**8—**

## தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 38797—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், ஒ. சிறுவயல் ஊராட்சி, ஒ. சிறுவயல் கணேசபுரம், சாலி, ஒ. சிறுவயல் கிழக்கு மற்றும் மேற்கு ஆதி திராவிடர் காலனியில் சேதமடைந்துள்ள வீடுகளைப் பராமரித்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசுத் திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

**9—**

## தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 38802—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், கே. சிறுவனூர் ஊராட்சி, சிறுவனூர், நாரணமங்களம், குருந்தூர் அண்டக்குடி மற்றும் குறுந்தூர் ஆதி திராவிடர் காலனியில் சேதமடைந்துள்ள வீடுகளைப் பராமரித்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2014 பிப்ரவரி 17

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசுத் திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

**10—**

## தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 38806—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், மணச்சை ஆதி திராவிடர் காலனியில் சேதமடைந்துள்ள வீடுகளைப் பராமரித்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசுத் திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.*



2014 பிப்ரவரி 17]

**11—**

## கட்டட மற்றும் சொத்து வரி விலக்கு

**வினா எண் 41243—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கிராமப் பகுதிகளில் இயங்கிவரும் மெட்ரிக் பள்ளிகளுக்கு விதிக்கப்படும் கட்டட வரி மற்றும் சொத்து வரிக்கு விலக்கு அளிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*ஊராட்சிகளில் வரி வசூலித்தல் தொடர்பாக தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 171 மற்றும் அரசாணை (நிலை) எண் 255, ஊரக வளர்ச்சி (சி2) துறை, நாள் 13-12-99-ஐத் தொடர்ந்து அரசாணை (நிலை) எண் 38, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.1) துறை, நாள் 5-3-2008-ல் தனியார் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த கட்டடங்கள் வரி விதிப்பிற்குட்பட்டவை எனத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, கிராமப் பகுதிகளில் இயங்கிவரும் மெட்ரிக் பள்ளிகளுக்கு விதிக்கப்படும் கட்டட வரி மற்றும் சொத்து வரியிலிருந்து விலக்கு அளிக்க வழிவகையில்லை.*

**12—**

## மாவட்ட தொழில்மையம்மூலம் பத்திரப் பதிவு

**வினா எண் 29448—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரியின் பின்புறம் மகளிர் தொழிற்பேட்டையில் தொழில் செய்து வருபவர்களுக்கு மாவட்ட தொழில் மையம்மூலம் பத்திரப் பதிவு செய்து தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2014 பிப்ரவரி 17

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கருப்பூர் மற்றும் ஆணைக்கவுண்டம்பட்டி கிராமத்தில் அரசு பொறியியல் கல்லூரிக்குப் பின்புறம் 51.24 ஏக்கரில் சிட்கோவினால் மகளிர் தொழிற்பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் 154 மனைகள் மேம்படுத்தப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது. ஒதுக்கீட்டாளர்கள் தொழில் துவங்கி நடத்தி வருகின்றனர். அரசாணை நிலை எண் 172, வருவாய் [நிமு7(1)] துறை, நாள் 11-6-2013-ன்படி தொழிற்பேட்டையின் நிலம் சிட்கோவிற்கு நில உரிமை மாற்றம் செய்து அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. நிலத்தின் மதிப்பு நிர்ணயம் செய்யப்படவுள்ளது. நில மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்ட பின்பு ஒதுக்கீடுதாரர்களிடம் ஏற்கெனவே பெறப்பட்ட நில மதிப்பில் வித்தியாசம் ஏதும் இருப்பின் அதை வசூலித்துக்கொண்டு சிட்கோ மூலம் ஒதுக்கீடுதாரர் அனைவருக்கும் பத்திரப் பதிவு செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**13—**

## சிட்கோ அலுவலகம் மாற்றம்

**வினா எண் 34175—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகர்கோவிலில் இயங்கி வந்து திருநெல்வேலிக்கு மாற்றப்பட்ட சிட்கோ அலுவலகம் மீண்டும் நாகர்கோவிலில் இயங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகர்கோவிலில் இயங்கி வந்த சிட்கோ கிளை அலுவலகம், திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டபின் மீண்டும் நாகர்கோவிலில் இயங்குவதற்குத் தற்போது சாத்தியமில்லை.*



2014 பிப்ரவரி 17]

*ஏனெனில், தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கி வரும் கோணம் மற்றும் மார்த்தாண்டம் தொழிற்பேட்டைகளில் உள்ள தொழில் மனைகள்/தொழிற்கூடங்கள் அனைத்தும் ஒதுக்கீடு செய்யப்பட்டு அவை நல்ல முறையில் இயங்கி வருகின்றன. மேலும், போதிய நிலம் இல்லாததால் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.*

**14—**

## தொழிற்பேட்டை அமைத்தல்

**வினா எண் 34177—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகர்கோவில், கோணம் பகுதி, தொழிற்பேட்டை போன்று ராஜாக்கமங்கலம், தோவாளை, அகஸ்தீஸ்வரம், முஞ்சிறை, மேல்புறம், தக்கலை, முகுந்தன்கோடு, கிள்ளியூர் மற்றும் திருவட்டாறு ஒன்றியங்களில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகர்கோவிலில் ராஜாக்கமங்கலம், தோவாளை, அகஸ்தீஸ்வரம், முஞ்சிறை, மேல்புறம், தக்கலை, முகுந்தன்கோடு, கிள்ளியூர் மற்றும் திருவட்டாறு ஒன்றியங்களில் தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பாக செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், தேவையான அரசுப் புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில் போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் நாகர்கோவில் கோணம் பகுதி தொழிற்பேட்டை போன்று ராஜாக்கமங்கலம், தோவாளை, அகஸ்தீஸ்வரம், முஞ்சிறை, மேல்புறம், தக்கலை, முகுந்தன்கோடு, கிள்ளியூர் மற்றும் திருவட்டாறு ஒன்றியங்களில் தொழிற்பேட்டை அமைக்க சிட்கோ மூலமாக அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.*

[2014 பிப்ரவரி 17

**15—**

## தொழிற்பேட்டை அமைத்தல்

**வினா எண் 38962—திருமதி ம. சக்தி:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியில் தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பாக செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், தேவையான அரசுப் புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில் போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் சீர்காழி தொகுதியில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு சிட்கோ மூலமாக அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.*

**16—**

## ஆசிரியர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்

**வினா எண் 1875—திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தனியார் மற்றும் அரசுப் பள்ளிகளில் பரிந்துரைக்கப்பட்ட விகிதாச்சாரப்படி ஒவ்வொரு பள்ளியிலும் ஆசிரியர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*அரசாணை (நிலை) எண் 525, பள்ளிக் கல்வித் (டி1) துறை, நாள் 29-12-1997-ன்படி தொடக்கப் பள்ளி/இடைநிலைப் பள்ளி*



2014 பிப்ரவரி 17]

*உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளவாறு ஆசிரியர் பணியிடங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009-ல் ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு பள்ளியிலும் ஆசிரியர்களின் எண்ணிக்கை உள்ளனவா என்பதை அரசும், உள்ளூர் அதிகார மன்றமும் உறுதி செய்ய வேண்டும் என்பதன் அடிப்படையில், அரசாணை (நிலை) எண் 231, பள்ளிக் கல்வித் துறை, நாள் 11-8-2010-ல் கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்பட்டுள்ளது:*

*1. பள்ளிக் கல்வி இயக்குநர்/தொடக்கக் கல்வி இயக்குநர் மேற்காணும் சட்டத்தின்படி நிர்ணயம் செய்யப்பட்டு ஆசிரியர்-மாணவர் விகிதாச்சார அடிப்படையில், பள்ளிகளிடம் ஒப்புதல் அளிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு அதிகமாக இருக்கும் ஆசிரியர்களை பணி நிரவலில் வேறு பள்ளிகளில் பணியமர்த்த வேண்டும்.*

*2. 1-9-2010 நாளில் மாணவர் சேர்க்கை மற்றும் தொடக்கக் கல்விப் பிரிவுகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் குறித்து முழுமையான கணக்கெடுப்பு பள்ளிக் கல்வி இயக்குநர்/தொடக்கக் கல்வி இயக்குநர் நடத்த வேண்டும்.*

*3. அதன்பின் அரசு/அரசு உதவிபெறும் பள்ளிகளில் பள்ளி ஆசிரியர் விகிதாச்சாரப்படி பள்ளி ஆசிரியர்கள் இல்லாத பள்ளிகளுக்குப் பணி நிரவல்மூலம் ஆசிரியர் நிரப்பப்பட வேண்டும்.*

*4. தற்போது நடைமுறையிலுள்ள அரசாணை (நிலை) எண் 525, பள்ளிக் கல்வித் (டி1) துறை, நாள் 29-12-1997-ல் வெளியிடப்பட்ட குறித்த நிலைப்பாட்டினை* (Norms) *மாற்றி அமைப்பது தொடர்பாக பள்ளிக் கல்வி இயக்குநர் அளவில் வல்லுநர் குழு அமைத்து, உரிய ஆய்வு மேற்கொண்டு விரிவான அறிக்கை அரசுக்கு சமர்பிக்கப்படவுள்ளது. இப்பொருள் குறித்து அரசினால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2014 பிப்ரவரி 17

**17—**

## அண்ணா பல்கலைக்கழகங்களை இணைத்தல்

**வினா எண் 11408—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி, மதுரை, கோவை மற்றும் திருநெல்வேலி அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களை சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தோடு இணைக்கும் செயற்குறிப்பின் நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சென்னை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டுவந்த அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள் 1-8-2012 முதல் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுவிட்டன.

**18—**

## உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்கும் பணி

**வினா எண் 15976—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்திற்கென ஒதுக்கப்பட்ட 14.15 ஏக்கர் நிலத்தில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின்மூலம் சங்கம் அமைக்கும் பணியின் தற்போதைய நிலையை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

1981 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்



2014 பிப்ரவரி 17]

தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையில் தோற்றுவிக்கப்படும் என அறிவித்தார்கள். அதன்படி 1982 ஆம் ஆண்டு உலகத் தமிழ்ச் சங்கத்திற்கென மதுரை தல்லாகுளம் பகுதியில் 14.15 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி உலகத் தமிழ்ச் சங்கம் புதுப்பொலிவுடன் செயல்படும் வகையில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

• மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு துணை விதிகள் உருவாக்கப்பட்டு இச்சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

• உலகத் தமிழ்ச் சங்கம் சிறப்பாகச் செயல்பட தனி அலுவலர் மற்றும் இதர அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

• இச்சங்கத்திற்கு ரூ.25 கோடி மதிப்பீட்டில் பெருந்திட்ட வளாகம் கட்ட திட்ட வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

**19—**

## விடுதிக் கட்டடம்

**வினா எண் 33515—திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரி மாணவர்கள் தங்கும் விக்டோரியா ஜூபிளி விடுதியை புதியதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரியில் உள்ள விக்டோரியா விடுதியை புதிதாகக் கட்டுவதற்கு 2013-2014 ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தின்கீழ் அரசாணை (1D) எண் 90, உயர் கல்வித் துறை, நாள் 31-5-2013-ல் ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

[2014 பிப்ரவரி 17

**20—**

## ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு

**வினா எண் 36778—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதுபோல் அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பதவி உயர்வு அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரை ஒவ்வொரு பள்ளியும் ஒரு தனி அலகு ஆகும். எனவே, ஒரு பள்ளியில் காலியேற்படும் ஆசிரியர் பணியிடத்தை, அதே பள்ளியில் பணியாற்றும் தகுதி வாய்ந்த ஆசிரியர் அல்லது பிற பணியாளரைக் கொண்டே நிரப்ப இயலும்.*

*2. தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1973-ன்கீழ் அமையப் பெற்ற விதிகள் 1974-ல் விதி எண் 15(4)-ல் பதவி உயர்வு மற்றும் பணி நியமனம் குறித்து கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:*

15(4) (i) Promotion shall be made on grounds of merits and ability, seniority being considered only when merit and ability are approximately equal.

(ii) Appointment to the various categories of Teachers shall be made by the following methods:

(i) Promotion among the qualified Teachers in that School.

(ii) If no qualified suitable candidate is available by method (i) above:

(a) Appointment of other persons employed in that school provided they are fully qualified to hold the post of teachers.

(b) Appointment of teachers from any other school.

(c) Direct recruitment.



2014 பிப்ரவரி 17]

*மேற்படி விதிகளின் அடிப்படையிலேயே அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் காலியேற்படும் ஆசிரியர் பணியிடங்கள் அவ்வப்போது அப்பள்ளி நிருவாகங்களால் நிரப்பப்பட்டு வருகின்றன. அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பது குறித்து அரசளவில் பரிசீலிக்கப்படுவதில்லை.*

**21—**

## பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் மாணவர்கள் எண்ணிக்கை

**வினா எண் 37539—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள முதுநிலை பட்ட வகுப்புகளில் 2011-2012, 2012-2013-ல் அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கையில் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை எத்தனை?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள முதுநிலை பட்ட வகுப்புகளில் 2011-2012, 2012-2013 ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கையில் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:-*

| வருடம் | மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | | பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் |
| 2011-2012 | 9876 | 10073 | 382 | 309 |
| 2012-2013 | 9880 | 10088 | 383 | 311 |

[2014 பிப்ரவரி 17

**22—**

### காய்கறி குளிர்பதனக் கிடங்கு அமைத்தல்

**வினா எண் 22906—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, திங்கள் சந்தையில் காய்கறி குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் பணியை விரைந்து தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, திங்கள்சந்தையில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 25 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு ரூ.31.80 இலட்சம் மதிப்பீட்டில் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF) திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் 95% (ரூ.30.21 இலட்சம்) நபார்டு (NABARD) வங்கியின் நிதி உதவியுடனும், 5% (ரூ.159 இலட்சம்) சம்பந்தப்பட்ட விற்பனைக் குழு நிதியிலிருந்தும் அமைக்கப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகள் நிறைவுறாததால் விவசாயிகள் பயன்பாட்டிற்கு இன்னும் கொண்டுவரப்படவில்லை. கட்டுமானப் பணிகள் மற்றும் இதர பணிகள் நிறைவு பெற்றதும் விவசாயிகள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

**23—**

### காலிப் பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 24756—திருமதி ம. சக்தி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி வேளாண்மை அலுவலகத்திலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2014 பிப்ரவரி 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வேளாண்மை அலுவலகத்திலுள்ள பணியிடங்களின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பதவி | ஒப்பளிக்கப் பட்ட மொத்த பணியிடங்கள் | பணியில் உள்ள அலுவலர்கள் விவரம் | காலிப் பணியிடம் |
|---|---|---|---|---|
| 1. | வேளாண்மை உதவி இயக்குநர் | 1 | 1 | - |
| 2. | வேளாண்மை அலுவலர் | 1 | 1 | - |
| 3. | துணை வேளாண்மை அலுவலர் | 1 | 1 | - |
| 4. | உதவி விதை அலுவலர் | 2 | 1 | 1 |
| 5. | உதவி வேளாண்மை அலுவலர் | 6 | 5 | 1 |
| 6. | தட்டச்சர் | 1 | 1 | - |
| 7. | கிடங்கு மேலாளர் (தரம் 2) | 1 | - | 1 |
| 8. | கிடங்கு மேலாளர் (தரம் 3) | 3 | 2 | 1 |
| 9. | ஓட்டுநர் | 1 | - | 1 |
| 10. | விற்பனை உதவியாளர் | 1 | - | 1 |
| 11. | அலுவலக உதவியாளர் | 1 | - | 1 |
| 12. | காவலர் | 4 | 1 | 3 |

**காலிப் பணியிடம் நிரப்பிட எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம்:**

**உதவி வேளாண்மை அலுவலர்**

417 உதவி வேளாண்மை அலுவலர் காலிப் பணியிடங்கள் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட காலிப் பணியிடம் நிரப்பப்படும்.

[2014 பிப்ரவரி 17

**உதவி விதை அலுவலர்**

பதவி உயர்விற்கான பட்டியல் தயார் செய்யப்பட்டு பதவி உயர்வு வழங்கப்படும்பொழுது மேற்கண்ட காலிப் பணியிடம் நிரப்பப்படும்.

**கிடங்கு மேலாளர் (தரம் 3)**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் பணியாளர் ஒதுக்கீடு செய்யும்போது காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

**கிடங்கு மேலாளர் (தரம் 2)**

கிடங்கு மேலாளர் (தரம் 3), (தரம் 2)-க்கு பதவி உயர்வு வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**ஓட்டுநர்**

வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் காலிப் பணியிடம் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**விற்பனை உதவியாளர்**

விற்பனை உதவியாளர் பணியிடங்கள் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அலுவலக உதவியாளர்**

அரசிடமிருந்து பணியாளர் குழு ஒப்புதல் பெறப்பட்டதும் நிரப்பப்படும்.

**காவலர்**

புறவழி ஆதாரங்கள்மூலம் (Outsourcing) நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**24—**

## விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குதல்

**வினா எண் 30657—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2014 பிப்ரவரி 17]

(அ) மலைச் செடிகளை இயற்கை உரமாகப் பயன்படுத்த விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்தி மண் வளத்தைப் பாதுகாப்பதற்காகவும், இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதற்காகவும், பசுந்தாளுர விதைகள் கொள்முதல் மற்றும் விநியோகம் செய்யும் திட்டம், நீலப் பச்சை பாசி உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம், பண்ணைக் கழிவுகளில் கம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்காக புளுரோட்டஸ், யூரியா மற்றும் விவரச் சீட்டு அடங்கிய மினி கிட்டுகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கும் திட்டம், ஊட்டமேற்றிய தொழு உர அலகுகள் அமைக்கும் திட்டம், மண் புழு உரம் தயாரித்தல் திட்டம் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், தழைச் செடிகளை இயற்கை உரமாகப் பயன்படுத்தும் வழக்கம் விவசாயிகளிடையே இருந்து வருகிறது. மலைச் செடிகளை இயற்கை உரமாகப் பயன்படுத்தும் வழக்கம் குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கும் திட்டமேதும் தற்போது அரசிடம் இல்லை.

**25—**

## தமிழ்நாடு உர மானியம் வழங்கல்

**வினா எண் 30860—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு விவசாயிகளுக்கு வழங்கிய உர மானியத்தைக் குறைத்துள்ளதால் மீண்டும் மானியத்தை முழு அளவில் வழங்க, மைய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 பிப்ரவரி 17

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மத்திய அரசு 1-4-2010 முதல் உரங்களுக்கு சத்துகள் அடிப்படையிலான மானியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய சாராம்சம், உர உற்பத்தியாளர்களே தங்கள் விற்பனை விலையினை நிர்ணயம் செய்துகொள்ளலாம். இதன் தொடர்ச்சியாக உரங்களின் விலை இரண்டிலிருந்து மூன்று மடங்காக உயர்ந்தது. அதாவது 486.20 ரூபாய் ஆக இருந்த 50 கிலோ டி.ஏ.பி. உரம் தற்பொழுது ரூ.1,200/-க்கு உயர்ந்துள்ளது.*

*எனவே, சத்துகள் அடிப்படையிலான திட்டத்தினை மறுபரிசீலனை செய்யக்கோரி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் பாரத பிரதமர் அவர்களுக்கு நேர்முகக் கடிதம் எழுதப்பட்டது. மேலும், இது குறித்து தொடர்ந்து மத்திய அரசுக்கு வலியுறுத்தப்படுகிறது.*

**26—**

## விதைப் பண்ணை மறு சீரமைப்பு

**வினா எண் 35264—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மடத்துக்குளம் வட்டம், பாப்பான்குளம் மாநில விதைப் பண்ணையை மறுசீரமைப்பு செய்து செயல்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் வட்டம், பாப்பான்குளம் மாநில விதைப் பண்ணையை மறுசீரமைப்பு செய்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழான அரசு விதைப் பண்ணை உள்கட்டமைப்புகளை மேம்படுத்தி தரமான விதை உற்பத்தியை உறுதி செய்தல் என்ற திட்டத்தின்கீழ், உலர் களம் சீரமைத்தல், வேலி அமைத்தல், விதைக் கிடங்கு சரி செய்தல், பண்ணையைச் சுற்றி விளக்கு, இயந்திரக் கிடங்கு மற்றும் மண் புழு வளர்ப்புத் தொட்டி, பராமரிப்புப் பணிகள், ஆழ்குழாய்க் கிணறு தோண்டுதல், தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகளை கொள்முதல் செய்தல் முதலிய இனங்களுக்கு நிதி வழங்கப்பட்டு, அரசு விதைப் பண்ணைகள் மறுசீரமைப்பு செய்யப்படுகின்றன. மேலும், நடப்பு 2013-2014 ஆம் ஆண்டு, பாப்பான்குளம் அரசு விதைப் பண்ணைக்கு சூரிய சக்தி மூலம் பம்புசெட்டு அமைத்தல் மற்றும் ஜெனரேட்டர் போன்ற உபகரணங்கள் வழங்கப்பட்டு அரசு விதைப் பண்ணையை மேம்படுத்த வேளாண்மைத் துறை திட்டமிட்டுள்ளது.*



2014 பிப்ரவரி 17]

**27—**

## மாவட்ட பதிவாளர் அலுவலகம்

**வினா எண் 16012—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் 15 மாவட்ட தலைநகரங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் அலுவலக வளாகங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது முடிவுறும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் 15 மாவட்டத் தலைநகரங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் அலுவலகங்களில் 11 மாவட்டத் தலைநகரங்களில் கூட்டுறவு அலுவலக வளாகங்கள் கட்டும் பணிகள் நிறைவடைந்துள்ளன.*

*அவற்றில், பெரம்பலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மூன்று மாவட்டத் தலைநகரங்களில் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகம், துணைப் பதிவாளர் அலுவலகம், துணைப் பதிவாளர் (பொவிதி) அலுவலகம் மற்றும் கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர் ஆகிய அலுவலகங்கள் செயல்படத் தொடங்கியுள்ளன.*

[2014 பிப்ரவரி 17

பிற மாவட்டங்களான திருவண்ணாமலை, சிவகங்கை, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருவாரூர் ஆகிய ஐந்து மாவட்டத் தலைநகரங்களில் கூட்டுறவு அலுவலக வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டு 20-6-2013 அன்று முதல் செயல்பட்டு வருகின்றன. மேலும், தருமபுரி மற்றும் புதுக்கோட்டை ஆகிய இரு மாவட்ட தலைநகரங்களில் கூட்டுறவு அலுவலக வளாக கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று வர்ணம் பூசும் பணி மற்றும் மின் இணைப்புப் பணி நடைபெற்று வருகிறது. பிறிதொரு மாவட்டமான ஈரோட்டில் கூட்டுறவு அலுவலக வளாகம் கட்ட ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்யப்பட்டவுடன் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படும்.

மேலும், நீலகிரி, கன்னியாகுமரி மற்றும் கடலூர் ஆகிய 3 மாவட்டத் தலைநகரங்களில் கூட்டுறவு அலுவலக வளாகம் கட்ட உரிய இடம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்படாததால், திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

மீதமுள்ள ஒரு மாவட்டமான கரூர் மாவட்ட தலைநகரத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கூட்டுறவு அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. எனினும், தனிநபர் ஒருவரால் தொடரப்பட்ட வழக்கில் தடையாணை பெறப்பட்டு நிலுவையாகவுள்ளது.

**28—**

## ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்துதல்

**வினா எண் 39572—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மத்திய கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 132, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 20-9-2010 இல், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு கருணை ஓய்வூதியம் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி,



2014 பிப்ரவரி 17]

1. பணியாளர்கள் ஓய்வூதியத் திட்டம், 1995-ன்கீழ் வராத, 1987-1988 முதல் 1994-1995 வரையிலான காலத்தில் ஓய்வு பெற்ற மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ.2,500/- வீதம் கருணை ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

2. பணியாளர்களின் ஓய்வூதியத் திட்டம், 1995-ன்கீழ் வரும் ஓய்வு பெற்ற மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கு, ஓய்வூதியத் தொகையான ரூ.2,500/- அவர்கள் பணியாளர் ஓய்வூதியத் திட்டம் 1995-ன்கீழ் பெற்று வரும் ஓய்வூதியத் தொகை போக எஞ்சிய வித்தியாசத் தொகை கருணை ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

மேலும், அரசாணை (நிலை) எண் 160, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 11-11-2010-ன்படி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணிபுரிந்து 15-11-1995-க்குப் பிறகு ஓய்வுபெற்ற பணியாளர்கள் ஓய்வூதியத் திட்டம், 1995-ஐ விருப்பத் தேர்வு செய்யாத பணியாளர்களுக்கு, ரூ.2,500/-க்கும் பணியாளர்கள் ஓய்வூதியத் திட்டத்தினை அவர்கள் விருப்பத் தேர்வு செய்திருந்தால், அப்பணியாளர்கள் பெற்றிருக்கக்கூடிய ஓய்வூதியத் தொகைக்கும் இடையேயான வித்தியாசத் தொகை மட்டும் கருணை ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

மேற்கூறியவாறு, சென்னை மத்திய கூட்டுறவு வங்கி உள்ளிட்ட அனைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு கருணை ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**29—**

## அரசு வேலைவாய்ப்பு முகாம்

**வினா எண் 18722—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசுமூலம் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2014 பிப்ரவரி 17

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இயங்கிவரும் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் மூலம் பணி நாடுநர்கள் அரசினால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் பங்கேற்று வெற்றி பெற்று வேலைவாய்ப்பினைப் பெற ஏதுவாக இலவச பயிற்சி வகுப்புகள் மற்றும் முன்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும், தன்னார்வப் பயிலும் வட்டங்களில் பணி நாடுநர்கள் போட்டித் தேர்வுகளுக்கு தங்களைத் தயார்படுத்திக்கொள்ளும் வகையில் உரிய போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள், நாளிதழ்கள் மற்றும் பிற புத்தகங்கள் பராமரிக்கப்பட்டு இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன.

தனியார் துறைகளில் பணிக் காலியிடங்களைப் பூர்த்தி செய்ய அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களால் நடத்தப்பட்டுவரும் வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் வேலை தேடும் இளைஞர்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் இருக்கின்றன.

நாகர்கோவிலில் இயங்கி வரும் கன்னியாகுமரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பாக கடந்த 2012 ஆம் ஆண்டில் தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு 6-3-2012 அன்று கன்னியாகுமரி மாவட்டம், தக்கலையில் அமைந்துள்ள நூருல் இஸ்லாம் பல்கலைக்கழகத்திலும் 2013 ஆம் ஆண்டு 28-2-2013 அன்று நாகர்கோவில் அரசு பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியிலும் நடத்தப்பட்டன. இதன்மூலம் பல்வேறு கல்வி வல்லுநர்களை வரவழைத்து மேற்படிப்புகள், தொழிற்படிப்புகள், போட்டித் தேர்வுகள்மூலம் பெறக்கூடிய அரசுப் பணிகள், தனியார் துறையில் உள்ள பணிகள் குறித்த விவரங்கள் கல்லூரி மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டன.

மேலும், நாகர்கோவிலில் அமைந்துள்ள கன்னியாகுமரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தால் நடத்தப்பட்ட தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள்மூலம் 2012 ஆம் ஆண்டு 148 பயனாளிகளும், 2013 ஆம் ஆண்டு 264 பயனாளிகளும் பயனடைந்துள்ளனர்.



2014 பிப்ரவரி 17]

**30—**

## பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுதல்

**வினா எண் 19200—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதியில் பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள பீடித் தொழிலாளர்களுக்கு, திருத்தியமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த வீடு கட்டும் திட்டம் 2007, (Revised Integrated Housing Scheme, 2007), 1-4-2007 முதல் மத்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி தமிழ்நாட்டிலுள்ள பீடித் தொழிலாளர் வீடு கட்டுவதற்காக ஒரு வீட்டிற்கு பயனாளி செலுத்த வேண்டிய பங்குத்தொகையினை, தமிழ்நாடு அரசு தனது பங்காக ரூ.60,000/-ம், மத்திய அரசு பங்காக ரூ.40,000/-ம், ஆக மொத்தம் ரூ.1,00,000/- என நிர்ணயிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி பீடித் தொழிலாளர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுக்காக மத்திய அரசிற்கு அனுப்பப்படுகின்றன. நிருவாக ஒப்புதல் பெறப்பட்ட பின்பு வீடு கட்டுவதற்கான தொகை திருத்தியமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த வீடு கட்டும் திட்டத்தின்கீழ் (Revised Integrated Housing Scheme) மத்திய அரசின் திருநெல்வேலி, தொழிலாளர் நல துணை ஆணையரால் வழங்கப்படுகிறது. 2008-2009 ஆம் ஆண்டில் தென்காசி தொகுதியில் நான்கு பயனாளிகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தார்கள். 2008-2009 ஆம் ஆண்டிற்குப் பிறகு பெறப்பட்ட விண்ணப்பங்களில், தென்காசி தொகுதி பீடித் தொழிலாளர்களிடமிருந்து புதிய விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை.

[2014 பிப்ரவரி 17

**31—**

## தொழிலாளர் நல வாரியம் அமைத்தல்

**வினா எண் 28281—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வெளிநாட்டில் வேலை செய்யும் தமிழக தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், இந்திய கம்பெனிகள் சட்டம், 1956-ன்படி பதிவு செய்யப்பட்டு இந்திய குடிபெயர்வோர் சட்டம், 1983-ன்படி பணியமர்த்தும் முகவராகச் செயல்பட்டு வருகிறது. வெளிநாட்டில் வேலை செய்யும் தமிழக தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைப்பது இந்நிறுவனத்தின் அதிகார வரம்பிற்குள் இல்லை.*

*(ஆ) எழாது.*

**32—**

## பாதுகாப்பு விதிமுறைகளைக் கடைப்பிடித்தல்

**வினா எண் 30910—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில், பட்டாசுத் தொழிற்சாலை நடத்திட சம்பந்தப்பட்ட விதிகளைக் கடுமையாக அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2014 பிப்ரவரி 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பட்டாசுத் தொழிற்சாலைகளை நடத்திட தொழிற்சாலை சட்ட விதிகளில் வரையறுக்கப்பட்ட விதிகளைக் கடுமையாக அமல்படுத்திட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் 1950, விதி 95-ன்கீழ் அட்டவணை 24-ல், பட்டாசுத் தொழிற்சாலைகள் கடைப்பிடிக்கபட வேண்டிய விதிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும், சில பாதுகாப்பு விதிமுறைகள் இந்த அட்டவணையில் சேர்க்கப்பட்டு தற்போது அமல்படுத்தப்பட்டு வருகின்றன. இது தவிர, பட்டாசுத் தொழிற்சாலைகளில் அபாயகரமான உற்பத்தி பணி நடைபெறுவதால், அவற்றை தொழிற்சாலை சட்டப் பிரிவு 2 (cb)-ல் ஊறுவிளைவிக்கும் பணி நடைபெறும் தொழிற்சாலைகள் என வரையறுத்து, சட்டத் திருத்தங்கள் மேற்கொண்டு, முதனிலை அறிக்கை வெளியிடப்பட்டது. ஆனால், இதனை பட்டாசுத் தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கம் எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, இடைக்கால தடை வாங்கியுள்ளது. இதற்கான பதிலுரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, தற்போது வழக்கு நிலுவையில் உள்ளது. மேலும், பட்டாசுத் தொழிற்சாலைகளில் முறை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆண்டுதோறும் தீபாவளிப் பண்டிகைக்கு முன்னதாக சிறப்பு ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அனைத்து பட்டாசுத் தொழிற்சாலைகளிலும் குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தவிர, வருவாய்த் துறை, காவல் துறை, வெடிபொருள் கட்டுப்பாட்டுத் துறை, தீத்தடுப்பு மற்றும் மீட்புத் துறை அலுவலர்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சிறப்புக் குழு அமைக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பட்டாசுத் தொழிற்சாலைகளைத் தொடர்ந்து கண்காணித்து, பாதுகாப்பு விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, விருதுநகரில் நடமாடும் கண்காணிப்புக் குழு ஒன்று கூடுதல் இயக்குநர் தலைமையில் அமைக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்துடன் பாதுகாப்புப் பிரச்சாரக் குழுவினால் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகளும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.*

[2014 பிப்ரவரி 17

**33—**

**அரசு வேலைவாய்ப்பு பயிற்சி முகாம்**

**வினா எண் 34192—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு வேலைவாய்ப்பு பயிற்சி முகாம் நடத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் தன்னார்வ பயிலும் வட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இயங்கிவரும் தன்னார்வப் பயிலும் வட்டத்தில், பணி நாடுநர்கள் போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெற ஏதுவாக பயிற்சி வகுப்புகள், முன் பயிற்சி வகுப்புகள், மேலும், உரிய புத்தகங்களும் இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும், தனியார் துறைகளில் பணிக் காலியிடங்களைப் பூர்த்தி செய்ய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் நடத்தப்பட்டு வரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களும் இளைஞர்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் இருப்பதால், கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியாக அரசு வேலை பெற பயிற்சி முகாம் நடத்த வேண்டிய அவசியம் எழவில்லை,*

**34—**

**வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம்**

**வினா எண் 34226—திரு. ஆர். ராமமூர்த்தி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2014 பிப்ரவரி 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நாகப்பட்டினம், திருவண்ணாமலை, ஈரோடு, புதுக்கோட்டை, நாமக்கல், அரியலூர், வேலூர், நாகர்கோவில், கரூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 7, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஆர்.1) துறை, நாள் 6-1-2012-ல் ஆணை வெளியிடப்பட்டது. மேலும், 2012-2013 ஆம் ஆண்டில் சேலம், திருச்சி, பெரம்பலூர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 121, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஆர்.1) துறை, நாள் 9-4-2013-ல் நிருவாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதேபோன்று, விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கும் மாவட்ட பெருந்திட்ட வளாகத்திலோ அல்லது வேறு இடத்திலோ சொந்தக் கட்டடம் கட்ட அரசினால் படிப்படியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**35—**

**வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடப் பணி**

**வினா எண் 35003—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலக புதிய கட்டடத்தின் பணிகளை விரைந்து தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*2011-2012 ஆம் நிதியாண்டில் தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் 10 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு*

[2014 பிப்ரவரி 17

சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பான அறிவிப்பு அரசால் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, அரசாணை (நிலை) எண் 7, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஆர்.1) துறை, நாள் 6-1-2012-ல் ஆணை வெளியிடப்பட்டு, அதன்படி நாகர்கோவிலில் அமைந்துள்ள கன்னியாகுமரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நாகர்கோவில் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் 12-4-2013 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் ஆகியோர் முன்னிலையில் அன்றைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் தற்போது மாண்புமிகு அமைச்சர் (தொழிலாளர் நலம்) திரு. கே.டி. பச்சைமால் அவர்களால் கன்னியாகுமரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நாகர்கோவில் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு கட்டடம் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டு தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

**36—**

## விற்பனை விலையைக் கட்டுப்படுத்துதல்

**வினா எண் 35242—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் சில்லறை விற்பனைக் கடைகளில் பொருட்களை அதிகபட்ச விற்பனை விலையை (MRP) விட அதிக விலையில் விற்பதைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொழிலாளர் துறையில் 1977-லிருந்து தரப்படுத்தப்பட்ட எடையளவுகள் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில், அச்சட்டம், சட்டமுறை எடையளவு பொட்டலப் பொருட்கள் விதிகள் என மாற்றம் செய்யப்பட்டு, 1-4-2011 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன், நிர்ணயம் செய்யப்பட்டுள்ள



2014 பிப்ரவரி 17]

அதிகபட்ச விலையைவிடக் கூடுதலாக விற்பனை செய்யப்படும் வணிக நிறுவனங்களின்மீது இச்சட்டத்தின்படி கடுமையான முரண்பாடு எனக் கொண்டு, உடன் அபராதமும் அதை மீறினால் சிறைவாச தண்டனையும் விதிக்கப்படும் என கடுமையான எச்சரிக்கையுடன் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அபராதத் தொகை வசூல் செய்யப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில், சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் சில்லறை விற்பனைக் கடைகளில் பொருட்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மிகாமல் (MRP) விற்க உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், பல்வேறு தினங்களிலும், சமீபத்தில் கடந்த 17-4-2013 பிற்பகல் 4-00 மணியளவில் கோயம்பேடு வணிகர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அதனடிப்படையில், ஏற்கெனவே அறிவுறுத்தியதற்கிணங்க விலைப்பட்டியல் பலகை, பிரதி வணிக நிறுவன வளாகத்தில் வைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அனைத்துக் கடைகளிலும் 'MRP' விலைக்கே பொருட்கள் கிடைக்கும் என்ற பலகை வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**37—**

## வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை

**வினா எண் 36955—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், இலஞ்சி மற்றும் சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சியில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், அரசாணை (நிலை) எண் 72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை,

நாள் 25-8-2006-ன்மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்கு மேல் உயிர் பதிவேட்டில் காத்திருக்கும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உதவித் தொகை வழங்கப்படுகிறது:

(1) குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

(2) கல்வி நிறுவனங்களில் நேரடியாகக் கல்வி பயில்பவராக இருத்தல் கூடாது.

(3) எந்த ஒரு நிறுவனத்திலும் பணிபுரிபவராக இருத்தல் கூடாது.

(4) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பயனாளிகள் 45 வயதையும் மற்றும் இதர பயனாளிகள் 40 வயதையும் கடந்தவராக இருக்கக் கூடாது.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப பின்வருமாறு உதவித் தொகை தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு அவர்களின் வங்கி சேமிப்புக் கணக்கில் ஒவ்வொரு காலாண்டிலும் வரவு வைக்கப்படுகிறது:

(1) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.100/-

(2) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.150/-

(3) மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.200/-

(4) பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.300/-

மேற்கூறிய திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படுத்தப்படுவதைப் போன்று திருநெல்வேலி, மாவட்ட வேலைவாய்ப்பு





அலுவலகத்திலும் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் அனைத்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உதவித் தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், இலஞ்சி மற்றும் சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சியில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில், அவர்கள் சம்மந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து, தொடர்புடைய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் நேர்வில் அவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

**38—**

## வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை

**வினா எண் 37955—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, குணராமநல்லூர் ஊராட்சியில் வேலையற்ற பட்டதாரி இளைஞர்கள் 100 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், அரசாணை (நிலை) எண் 72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை, நாள் 25-8-2006-ன்மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும்

[2014 பிப்ரவரி 17

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உதவித் தொகை வழங்கப்படுகிறது:

(1) குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

(2) கல்வி நிறுவனங்களில் நேரடியாகக் கல்வி பயில்பவராக இருத்தல் கூடாது.

(3) எந்த ஒரு நிறுவனத்திலும் பணிபுரிபவராக இருத்தல் கூடாது.

(4) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பயனாளிகள் 45 வயதையும் மற்றும் இதர பயனாளிகள் 40 வயதையும் கடந்தவராக இருக்கக் கூடாது.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப பின்வருமாறு உதவித் தொகை, தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு அவர்களின் வங்கி சேமிப்புக் கணக்கில் ஒவ்வொரு காலாண்டிலும் வரவு வைக்கப்படுகிறது:

(1) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.100/-

(2) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.150/-

(3) மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.200/-

(4) பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.300/-

மேற்கூறிய திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படுத்தப்படுவதைப் போன்று திருநெல்வேலி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் அனைத்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உதவித் தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே,



2014 பிப்ரவரி 17]

தென்காசி தொகுதி, குணராமநல்லூர் ஊராட்சியில் உள்ள 100 வேலையற்ற பட்டதாரிகளும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில், அவர்கள் சம்மந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து, தொடர்புடைய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் நேர்வில் அவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

**39—**

## வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை

**வினா எண் 37967—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் வேலையற்ற பட்டதாரி இளைஞர்கள் 30 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், அரசாணை (நிலை) எண் 72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை, நாள் 25-8-2006-ன்மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உதவித் தொகை வழங்கப்படுகிறது:

(1) குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

[2014 பிப்ரவரி 17

(2) கல்வி நிறுவனங்களில் நேரடியாகக் கல்வி பயில்பவராக இருத்தல் கூடாது.

(3) எந்த ஒரு நிறுவனத்திலும் பணிபுரிபவராக இருத்தல் கூடாது.

(4) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பயனாளிகள் 45 வயதையும் மற்றும் இதர பயனாளிகள் 40 வயதையும் கடந்தவராக இருக்கக் கூடாது.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப பின்வருமாறு உதவித் தொகை தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு அவர்களின் வங்கி சேமிப்புக் கணக்கில் ஒவ்வொரு காலாண்டிலும் வரவு வைக்கப்படுகிறது:

(1) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.100/-

(2) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.150/-

(3) மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.200/-

(4) பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.300/-

மேற்கூறிய திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படுத்தப்படுவதைப் போன்று திருநெல்வேலி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் அனைத்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உதவித் தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தென்காசி தொகுதி, திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் உள்ள 30 வேலையற்ற பட்டதாரிகளும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில், அவர்கள் சம்மந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து, தொடர்புடைய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் நேர்வில் அவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.



2014 பிப்ரவரி 17]

**40—**

## வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை

**வினா எண் 38465—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, ஆயிரப்பேரி ஊராட்சியில் வேலையில்லாத பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், அரசாணை (நிலை) எண் 72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை, நாள் 25-8-2006-ன்மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உதவித் தொகை வழங்கப்படுகிறது:

(1) குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

(2) கல்வி நிறுவனங்களில் நேரடியாகக் கல்வி பயில்பவராக இருத்தல் கூடாது.

(3) எந்த ஒரு நிறுவனத்திலும் பணிபுரிபவராக இருத்தல் கூடாது.

(4) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பயனாளிகள் 45 வயதையும் மற்றும் இதர பயனாளிகள் 40 வயதையும் கடந்தவராக இருக்கக் கூடாது.

[2014 பிப்ரவரி 17

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப பின்வருமாறு உதவித் தொகை, தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு அவர்களின் வங்கி சேமிப்புக் கணக்கில் ஒவ்வொரு காலாண்டிலும் வரவு வைக்கப்படுகிறது:

(1) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.100/-

(2) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.150/-

(3) மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.200/-

(4) பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.300/-

மேற்கூறிய திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படுத்தப்படுவதைப் போன்று திருநெல்வேலி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் அனைத்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உதவித் தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தென்காசி தொகுதி, ஆயிரப்பேரி ஊராட்சியில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில், அவர்கள் சம்மந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து, தொடர்புடைய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் நேர்வில் அவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

**41—**

## வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை

**வினா எண் 38561—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2014 பிப்ரவரி 17]

*(அ) தென்காசி தொகுதி, இனாம்வெள்ளகால் ஊராட்சியில் வேலையற்ற பட்டதாரி இளைஞர்கள் 20 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், அரசாணை (நிலை) எண் 72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை, நாள் 25-8-2006-ன்மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உதவித் தொகை வழங்கப்படுகிறது:

(1) குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

(2) கல்வி நிறுவனங்களில் நேரடியாகக் கல்வி பயில்பவராக இருத்தல் கூடாது.

(3) எந்த ஒரு நிறுவனத்திலும் பணிபுரிபவராக இருத்தல் கூடாது.

(4) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பயனாளிகள் 45 வயதையும் மற்றும் இதர பயனாளிகள் 40 வயதையும் கடந்தவராக இருக்கக் கூடாது.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப பின்வருமாறு உதவித் தொகை, தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு அவர்களின் வங்கி சேமிப்புக் கணக்கில் ஒவ்வொரு காலாண்டிலும் வரவு வைக்கப்படுகிறது:

(1) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.100/-

(2) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.150/-

(3) மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.200/-

(4) பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.300/-

மேற்கூறிய திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படுத்தப்படுவதைப் போன்று திருநெல்வேலி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் அனைத்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உதவித் தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தென்காசி தொகுதி, இனாம்வெள்ளகால் ஊராட்சியில் உள்ள 20 வேலையற்ற பட்டதாரிகளும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில், அவர்கள் சம்மந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து, தொடர்புடைய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் நேர்வில் அவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

**42—**

## வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை

**வினா எண் 38575—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, திப்பணம்பட்டி ஊராட்சியில் 150 வேலையற்ற பட்டதாரி இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், அரசாணை (நிலை) எண் 72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை, நாள் 25-8-2006-ன்மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்கு மேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உதவித்தொகை வழங்கப்படுகிறது:

(1) குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

(2) கல்வி நிறுவனங்களில் நேரடியாகக் கல்வி பயில்பவராக இருத்தல் கூடாது.

(3) எந்த ஒரு நிறுவனத்திலும் பணிபுரிபவராக இருத்தல் கூடாது.

(4) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பயனாளிகள் 45 வயதையும், மற்றும் இதர பயனாளிகள் 40 வயதையும் கடந்தவராக இருக்கக்கூடாது.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப பின்வருமாறு உதவித் தொகை, தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு அவர்களின் வங்கி சேமிப்புக் கணக்கில் ஒவ்வொரு காலாண்டிலும் வரவு வைக்கப்படுகிறது:

(1) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.100/-

(2) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.150/-

(3) மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.200/-

(4) பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.300/-

மேற்கூறிய திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படுத்தப்படுவதைப் போன்று திருநெல்வேலி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் அனைத்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உதவித் தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தென்காசி தொகுதி, திப்பணம்பட்டி ஊராட்சியில் உள்ள 150 வேலையற்ற பட்டதாரிகளும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில், அவர்கள் சம்மந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து, தொடர்புடைய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் நேர்வில் அவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

**43—**

## வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை

**வினா எண் 38602—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கீழவெள்ளகால் ஊராட்சியில் வேலையற்ற பட்டதாரி இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும்



இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், அரசாணை (நிலை) எண் 72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை, நாள் 25-8-2006-ன்மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உதவித் தொகை வழங்கப்படுகிறது:

(1) குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

(2) கல்வி நிறுவனங்களில் நேரடியாகக் கல்வி பயில்பவராக இருத்தல் கூடாது.

(3) எந்த ஒரு நிறுவனத்திலும் பணிபுரிபவராக இருத்தல் கூடாது.

(4) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பயனாளிகள் 45 வயதையும் மற்றும் இதர பயனாளிகள் 40 வயதையும் கடந்தவராக இருக்கக்கூடாது.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப பின்வருமாறு உதவித் தொகை தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு அவர்களின் வங்கி சேமிப்புக் கணக்கில் ஒவ்வொரு காலாண்டிலும் வரவு வைக்கப்படுகிறது:

(1) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.100/-

(2) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.150/-

(3) மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.200/-

(4) பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.300/-

மேற்கூறிய திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படுத்தப்படுவதைப்

[2014 பிப்ரவரி 17

போன்று திருநெல்வேலி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் அனைத்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உதவித் தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தென்காசி தொகுதி, கீழவெள்ளகால் ஊராட்சியில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில், அவர்கள் சம்மந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து, தொடர்புடைய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் நேர்வில் அவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

**44—**

### வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை

**வினா எண் 38618—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, மேலப்பாவூர் ஊராட்சியில் வேலையற்ற 10 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், அரசாணை (நிலை) எண் 72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை, நாள் 25-8-2006-ன்மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உதவித் தொகை வழங்கப்படுகிறது:



2014 பிப்ரவரி 17]

(1) குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

(2) கல்வி நிறுவனங்களில் நேரடியாகக் கல்வி பயில்பவராக இருத்தல் கூடாது.

(3) எந்த ஒரு நிறுவனத்திலும் பணிபுரிபவராக இருத்தல் கூடாது.

(4) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பயனாளிகள் 45 வயதையும் மற்றும் இதர பயனாளிகள் 40 வயதையும் கடந்தவராக இருக்கக்கூடாது.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப பின்வருமாறு உதவித் தொகை, தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு அவர்களின் வங்கி சேமிப்புக் கணக்கில் ஒவ்வொரு காலாண்டிலும் வரவு வைக்கப்படுகிறது:

(1) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.100/-

(2) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.150/-

(3) மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.200/-

(4) பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.300/-

மேற்கூறிய திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படுத்தப்படுவதைப் போன்று திருநெல்வேலி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் அனைத்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உதவித் தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தென்காசி தொகுதி, மேலப்பாவூர் ஊராட்சியில் உள்ள 10 வேலையற்ற பட்டதாரிகளும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில்,

[2014 பிப்ரவரி 17

அவர்கள் சம்மந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து, தொடர்புடைய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் நேர்வில் அவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

**45—**

### வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை

**வினா எண் 38622—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கல்லூரணி ஊராட்சியில் வேலையற்ற பட்டதாரி இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், அரசாணை (நிலை) எண் 72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை, நாள் 25-8-2006-ன்மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உதவித் தொகை வழங்கப்படுகிறது:

(1) குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

(2) கல்வி நிறுவனங்களில் நேரடியாகக் கல்வி பயில்பவராக இருத்தல் கூடாது.

(3) எந்த ஒரு நிறுவனத்திலும் பணிபுரிபவராக இருத்தல் கூடாது.



2014 பிப்ரவரி 17]

(4) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பயனாளிகள் 45 வயதையும் மற்றும் இதர பயனாளிகள் 40 வயதையும் கடந்தவராக இருக்கக்கூடாது.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப பின்வருமாறு உதவித் தொகை தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு அவர்களின் வங்கி சேமிப்புக் கணக்கில் ஒவ்வொரு காலாண்டிலும் வரவு வைக்கப்படுகிறது:

(1) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.100/-

(2) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.150/-

(3) மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.200/-

(4) பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.300/-

மேற்கூறிய திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படுத்தப்படுவதைப் போன்று திருநெல்வேலி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் அனைத்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உதவித் தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தென்காசி தொகுதி, கல்லூரணி ஊராட்சியில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில், அவர்கள் சம்மந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து, தொடர்புடைய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் நேர்வில் அவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

[2014 பிப்ரவரி 17

**46—**

## அரசு வேலை வழங்கல்

**வினா எண் 38696—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தொட்டில் குழந்தைத் திட்டத்தில் வளர்ந்த பட்டதாரிகளுக்கு அரசு வேலை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* தொட்டில் குழந்தைத் திட்டத்தின்கீழ் வளர்க்கப்பட்ட பட்டதாரிகளுக்கு நேரடியாக அரசு வேலை வழங்குவது தொடர்பாக அரசாணை ஏதும் வெளியிடப்படவில்லை. எனவே, ஏனைய பணி நாடுநர்களைப் போன்று அரசு பணிக் காலியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு அறிவிக்கப்படும்போது, தொட்டில் குழந்தைத் திட்டத்தின்கீழ் வளர்ந்து, பட்டதாரி ஆகி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தங்கள் கல்வித் தகுதிகளைப் பதிவு செய்துள்ள பதிவுதாரர்களின் கல்வித் தகுதி, வயது, இனசுழற்சி மற்றும் பதிவு மூப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களும் வேலைவாய்ப்பு அலுவலங்களால் பரிந்துரை செய்யப்படுவார்கள்.

**47—**

## வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை

**வினா எண் 39195—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2014 பிப்ரவரி 17]

*(அ) தென்காசி தொகுதி, ராஜகோபாலபேரி ஊராட்சியில் வேலையற்ற பட்டதாரி இளைஞர்கள் 50 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், அரசாணை (நிலை) எண் 72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை, நாள் 25.8.2006-ன்மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உதவித் தொகை வழங்கப்படுகிறது:

(1) குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

(2) கல்வி நிறுவனங்களில் நேரடியாகக் கல்வி பயில்பவராக இருத்தல் கூடாது.

(3) எந்த ஒரு நிறுவனத்திலும் பணிபுரிபவராக இருத்தல் கூடாது.

(4) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பயனாளிகள் 45 வயதையும் மற்றும் இதர பயனாளிகள் 40 வயதையும் கடந்தவராக இருக்கக்கூடாது.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப பின்வருமாறு உதவித் தொகை, தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு அவர்களின் வங்கி சேமிப்புக் கணக்கில் ஒவ்வொரு காலாண்டிலும் வரவு வைக்கப்படுகிறது:

[2014 பிப்ரவரி 17

(1) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம ரூ.100/-

(2) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.150/-

(3) மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.200/-

(4) பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.300/-

மேற்கூறிய திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படுத்தப்படுவதைப் போன்று திருநெல்வேலி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் அனைத்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உதவித் தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தென்காசி தொகுதி, ராஜகோபாலபேரி ஊராட்சியில் உள்ள 50 வேலையற்ற பட்டதாரிகளும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில், அவர்கள் சம்மந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து, தொடர்புடைய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் நேர்வில் அவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

**48—**

## வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை

**வினா எண் 39210—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, இடையர்தவணை ஊராட்சியில் 25 நபர்களுக்கு பட்டதாரிகள் உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2014 பிப்ரவரி 17]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், அரசாணை (நிலை) எண் 72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை, நாள் 25.8.2006-ன்மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உதவித் தொகை வழங்கப்படுகிறது:

(1) குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50.000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

(2) கல்வி நிறுவனங்களில் நேரடியாகக் கல்வி பயில்பவராக இருத்தல் கூடாது.

(3) எந்த ஒரு நிறுவனத்திலும் பணிபுரிபவராக இருத்தல் கூடாது.

(4) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பயனாளிகள் 45 வயதையும் மற்றும் இதர பயனாளிகள் 40 வயதையும் கடந்தவராக இருக்கக் கூடாது.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப பின்வருமாறு உதவித் தொகை, தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு அவர்களின் வங்கி சேமிப்புக் கணக்கில் ஒவ்வொரு காலாண்டிலும் வரவு வைக்கப்படுகிறது:

(1) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.100/-

(2) பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.150/-

[2014 பிப்ரவரி 17

(3) மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.200/-

(4) பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.300/-

மேற்கூறிய திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படுத்தப்படுவதைப் போன்று திருநெல்வேலி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்குமேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் அனைத்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உதவித் தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தென்காசி தொகுதி, இடையர்தவணை ஊராட்சியில் உள்ள 25 வேலையற்ற பட்டதாரிகளும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில், அவர்கள் சம்மந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து, தொடர்புடைய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் நேர்வில் அவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

**49—**

## உயிர் பலிகளைத் தடுத்தல்

**வினா எண் 41238—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகாசியில் பட்டாசு ஆலைகளின் தீ விபத்தினால் ஏற்படும் உயிர் பலிகளைத் தடுக்க நிரந்தரத் திட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

விபத்துகளைக் குறைப்பதற்கு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தினால் பல்வேறுவிதமான ஆக்கபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சீரிய முறையில் ஆய்வுகள்



2014 பிப்ரவரி 17]

தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் பட்டாசு உற்பத்தி அதிக அளவில் மேற்கொள்ளப்படும் காலகட்டங்களில் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதிசெய்யும் நோக்கில் அனைத்து இணை இயக்குநர்களைக் கொண்டு சிறப்பு ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு பட்டாசுத் தொழிற்சாலைகளில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தொழிற்சாலை நிருவாகத்தினரால் தீபாவளிப் பண்டிகை காலகட்டத்தில் மட்டும் அல்லாது அவ்வப்போது பட்டாசு உற்பத்தி அதிக அளவில் மேற்கொள்ளப்படும் காலங்களிலும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி விபத்து நிகழ்வதைத் தடுக்கும்பொருட்டு மதுரை கூடுதல் இயக்குநர் தலைமையில் சிறப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு தொடர்ந்து ஆய்வுப் பணிகள் சீரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அவ்வப்போது வருவாய்த் துறை, தீயணைப்புத் துறை, காவல் துறை, வெடிபொருள் கட்டுப்பாட்டுத் துறை மற்றும் பொது சுகாதாரத் துறை அலுவலர்களைக் கொண்டு அமைக்கப்படும் சிறப்புக் குழுக்களில் இத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விதிகளை மீறும் பட்டாசுத் தொழிற்சாலைகளின்மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு உத்திகளைக் கையாண்டு பேன்சி ரக பட்டாசுகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள், போர்மென் ஆகியோர் பாதுகாப்பாகப் பணிபுரிய வேண்டும் என்பதை வலியுறுத்தியும், பாதுகாப்பின் அவசியத்தை உணர்த்தும் பொருட்டும் பயிற்சியினை கட்டாயமாக்க வேண்டும் என்ற நோக்கில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பின்படி தற்காலிகமாக சிவகாசியில் பயிற்சி மையம் தொடங்கப்பட்டு தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது நிரந்தரமாக சிவகாசியில் பயிற்சி மையம் நிறுவ கட்டுமானப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. பட்டாசு உற்பத்தியில் பாதுகாப்பினை மேலும் வலுப்படுத்தும் விதமாகவும், தீவிரமாகக் கண்காணிக்கும் பொருட்டும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி விருதுநகரில் நடமாடும் கண்காணிப்புக் குழு ஒன்று கூடுதல் இயக்குநர் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கண்காணிப்புக் குழு தொடர்ந்து பட்டாசுத் தொழிற்சாலைகளை ஆய்வு செய்து உரிய சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும், தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி, பட்டாசு உற்பத்தியில் உள்ள அபாயங்களை நேரடியாகச் சென்று விளக்கும் வகையில், பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள்

தொழிலாளர்களுக்கு நடத்தப்படுகின்றன. இது தவிர பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளும் தொழிற்சாலை வளாகத்திலேயே நடத்தப்படுகின்றன. அவ்வப்போது தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களோடு தேசியப் பாதுகாப்பு குழுமத்தினரும் இணைந்து பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சாலை நிருவாகத்தினர்களுக்கு நடத்தப்படுகின்றன. மேலும், பட்டாசுத் தொழிற்சாலைகளில் விபத்து நடைபெறும் காலகட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை தொடர்பான ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து, வெளிவளாக முன்மாதிரி ஒத்திகை ஆண்டுதோறும் தேசிய பேரிடர் மேலாண்மைக் குழுமத்தினருடன் (NDMA) இணைந்து நடத்தப்பட்டு வருகிறது. மேற்காணும் நடவடிக்கைகள் அனைத்தும் பட்டாசுத் தொழிற்சாலை மற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டு சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**50—**

## பருப்பு வகைகள் சீராக வழங்குதல்

**வினா எண் 21078—திரு. இரா. அண்ணாதுரை:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரையிலுள்ள நியாய விலைக் கடைகளில் பருப்பு வகைகள் சீராக வழங்கிட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்தில், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பருப்பு வகைகள் ஒதுக்கீட்டின்படி குடும்ப அட்டைதாரர்களுக்குச் சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.*

**51—**

## புதிய நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 21079—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) சங்கரி ஒன்றியம், தேவண்ணகவுண்டனூர், புட்டமனை மலங்காடு நியாய விலைக் கடையைப் பிரித்து செட்டிக்காட்டிற்கு தனியாக நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சங்கரி ஒன்றியம், தேவண்ணகவுண்டனூர், புட்டமனை மலங்காடு நியாய விலைக் கடையைப் பிரித்து செட்டிக்காட்டிற்கு தனியாக நியாய விலைக் கடை துவக்குவதற்கு, அரசு வழிகாட்டு நெறிகளின்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தது 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், செட்டிக்காடு கிராமத்திற்கென தனியாக நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.*

**52—**

## பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 24638—திரு. சு. ரவி:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருங்களத்தூர் முஸ்லிம் நகருக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே பெருங்களத்தூர் தாய்க் கடையிலிருந்து பிரிந்து இரண்டு பகுதிநேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வரும் நிலையிலும், நியாய விலைக் கடை அமைக்க அரசு வழிகாட்டு நெறிகளில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் நிறைவு*

செய்யப்படாத நிலையிலும், அரக்கோணம் ஒன்றியம், முஸ்லிம் நகர் பகுதிக்கென தனியாக மூன்றாவது பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**53—**

## பொருட்கள் வழங்குதல்

**வினா எண் 32973—திரு. எம்.கே. அசோக்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர், ஜெயராம் தெருவிலுள்ள நியாய விலைக் கடைமூலம் திருவான்மியூர் குப்பம் மக்களுக்கும் பொருட்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர், ஜெயராம் தெருவில் புதிய நியாய விலைக் கடை (TUCS) IC 056 திறக்கப்பட்டபோது திருவான்மியூர், ஜெயராம் குப்பம் பகுதி குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட்டு, குடும்ப அட்டைதாரர்கள் 8-8-2010 முதல் இந்த அங்காடியில் அத்தியாவசியப் பொருட்களை எவ்விதப் புகாருக்கும் இடமின்றி பெற்று வருகின்றனர்.

**54—**

## மண்ணெண்ணெய் வழங்குதல்

**வினா எண் 34901—திரு. ஏ. லாசர்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெரியகுளம் தொகுதியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மீண்டும் நியாய விலைக் கடைகள் மூலமாக மண்ணெண்ணெய் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதியைப் பொறுத்தமட்டில் மொத்தம் 69,698 குடும்ப அட்டைதாரர்கள் மண்ணெண்ணெய் பெற்று வருகின்றனர். இவற்றில் 71 நியாய விலைக் கடைகள் மூலம் 43,616 குடும்ப அட்டைதாரர்களும் மற்றும் மூன்று மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களின்கீழ் 38 அங்காடிகள் மூலம் 26,082 குடும்ப அட்டைதாரர்களும் மண்ணெண்ணெய் பெற்று வருகின்றனர்.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களில் மண்ணெண்ணெய்யும் ஒன்றாகும். மற்ற அத்தியாவசியப் பொருட்கள் போலன்றி, மண்ணெண்ணெய் எரிபொருளாக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. எனவே, இதனை மற்ற உணவுப் பொருட்களுடன் கலக்காதவகையில் தனியாக வைத்து விநியோகம் செய்ய வேண்டியும், குடும்ப அட்டைதாரர்களுக்கு அனைத்து நாட்களிலும் மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய வேண்டியும், மண்ணெண்ணெய்யை தனி நிலையங்கள்மூலம் விநியோகம் செய்யலாம் என்று அரசு முடிவு செய்து 1996 மற்றும் 1997-ல் அரசாணைகள் வெளியிடப்பட்டன. அவற்றினடிப்படையில் அமைக்கப்பட்ட ஒவ்வொரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்திற்கும் ஏற்படும் மொத்த செலவினத் தொகையான ரூ.4.5 இலட்சத்தில் 50% ரூ.2.25 இலட்சத்தை அரசு மானியமாகவும் எஞ்சிய தொகையை அந்தந்த மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களை ஏற்று நடத்தும் நிறுவனங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் 1998-ல் அரசாணை வெளியிடப்பட்டு சீரிய முறையில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

எனவே, பெரியகுளம் தொகுதியில் மண்ணெண்ணெய் பெறத் தகுதியுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் நியாய விலைக் கடைகள் மற்றும் மூன்று மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் ஆகியவற்றின்மூலம் எவ்வித புகாருக்கும் இடமின்றி தொடர்ந்து மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் பெரியகுளம் தொகுதியில் மண்ணெண்ணெய் பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மீண்டும் நியாய விலைக் கடைகள் மூலமாக மண்ணெண்ணெய் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

[2014 பிப்ரவரி 17

**55—**

**கழிவுநீரை அப்புறப்படுத்துதல்**

**வினா எண் 27719—திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை தொகுதி, பொன்னன்விடுதி மற்றும் வெட்டன்விடுதியில் உள்ள நவீன அரிசி ஆலைகளிலிருந்து வரும் கழிவுநீரை ஊர்திகளைக் கொண்டு அப்புறப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*அரிசி ஆலைகள் அந்நிறுவனத்துக்குள்ளேயே சுத்திகரிப்பு நிலையம் அமைத்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை அந்த ஆலையின் வளாகத்திலேயே மறுசுழற்சி முறையில் ஆலையில் உபயோகிப்பதற்கோ அல்லது மரம் வளர்ப்பதற்கோ பயன்படுத்தலாம். சுத்திகரிக்கப்பட்டுள்ள கழிவுநீரை டேங்கர் லாரியில் கொண்டு செல்ல அனுமதி இல்லை.*

**56—**

**கூடுதல் நிதி ஒதுக்கீடு**

**வினா எண் 3020—திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உசிலம்பட்டி தொகுதி, சேடப்பட்டி ஒன்றியம், டேராப்பாறை அணைத் திட்டத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கி ஆழப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, சேடப்பட்டி ஒன்றியம், பேரையூர் வட்டம், துள்ளுக்குட்டி நாயக்கனூர் கிராமத்தில் டேராப்பாறை அணைத் திட்டத்திற்காக ரூ.2,050 இலட்சத்திற்கு (2010-2011 விலை விவரப்படி) மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக வன நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக வன உயிர் காப்பாளரின் ஒத்திசைவு மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவு பெறப்பட்டு பின்னர் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.*



2014 பிப்ரவரி 17]

**57—**

**கால்வாய் லைனிங் செய்தல்**

**வினா எண் 5823—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் மேற்குக் கரை கால்வாயினை நகர எல்லைக்குள் லைனிங் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேட்டூர் நகராட்சி எல்லைக்குள் மேட்டூர் மேற்குக்கரை கால்வாய் மைல் 0/0 முதல் 3/0 மைல் வரை அமைகிறது. இந்தப் பகுதியில் கால்வாயினை முழுவதுமாக லைனிங் செய்வதற்கு, நபார்டு வங்கியின் நிதி உதவியினைப் பெற மதிப்பீடானது நடப்பாண்டு விலை விகிதப்படி துறையால் தயாரிக்கப்பட்டு வருகிறது.*

**58—**

**அரசு மணல் கிடங்கு அமைத்தல்**

**வினா எண் 28265—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2014 பிப்ரவரி 17

*கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுமக்கள் மற்றும் கட்டுமானத் தொழில் செய்பவர்கள் தட்டுப்பாடில்லாமல் மணல் பெற்றுக்கொள்ள அரசு மணல் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆறுகளில் அரசு மணல் கிடங்கு அமைக்கத் தேவையான மணல் இருப்பு இல்லை என்பதால், மணல் கிடங்கு அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**59—**

### மணலை பயன்படுத்துதல்

**வினா எண் 30801—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணியில் வருவாய்த் துறையினரால் கைப்பற்றப்பட்டு காவல் நிலையங்களில் கொட்டப்பட்டுள்ள மணலைப் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) வருவாய்த் துறையால் கைப்பற்றப்பட்டு காவல் நிலையங்களில் கொட்டப்படும் மணல் யாவும் அத்துறைமூலம் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டு, உரிய முறையில் விற்பனை செய்யப்பட்டு, அதன் மூலம் கிடைக்கும் வருவாய் அரசுக் கணக்கில் செலுத்தப்படுகிறது.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*



2014 பிப்ரவரி 17]

**60—**

### கால்வாய் கரைகளைச் சீரமைத்தல்

**வினா எண் 30850—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணா இணைப்புக் கால்வாய், வெள்ளானூர் பாலம் அருகே கால்வாயின் இருபுறமும் கரைகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், வெள்ளானூர் கிராமத்தில், பூண்டி ஏரியிலிருந்து செங்குன்றம் ஏரிக்கு செல்லும் ஊட்டுக் கால்வாயில் தொலைகல் 17670 மீட்டரில் வெள்ளானூர் பாலம் அருகே பழுதடைந்த கால்வாய் கரைகள் கான்கிரீட் சுவர் கொண்டு முழுவதுமாக கடந்த மார்ச் 2013-ல் சீரமைக்கப்பட்டுள்ளன.*

**61—**

### பாசன வாய்க்கால் உடைப்புகளை சீரமைத்தல்

**வினா எண் 31783—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருத்துறைப்பூண்டி பகுதியில் பாசன வாய்க்கால்களில் ஏற்பட்ட உடைப்புகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2014 பிப்ரவரி 17

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி பகுதியில் பாசன வாய்க்கால்களில் ஏற்பட்ட உடைப்புகள் சீரமைக்கும் பணிகள் ரூ.9.29 இலட்சம் செலவில் மார்ச் 2013-ல் செய்து முடிக்கப்பட்டுவிட்டன.*

**62—**

## புதிய பாலம் அமைத்தல்

**வினா எண் 32650—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மேட்டூர் தொகுதியிலுள்ள 16 கண் பாலத்தை அகற்றி புதிய பாலம் அமைப்பதற்கான பணியை விரைந்து முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*மேட்டூர் அணையில் உள்ள 16 கண் பாலம் அதிக வெள்ளப் பெருக்கின்போது உபரி நீர் வெளியேற்றப்படும் 16 கதவுகளுடன் (இரும்பு ஷட்டர்) கூடிய பாலமாக ஒருங்கிணைந்து வடிவமைக்கப்பட்டது. எனவே, பாலத்தை அகற்றுவதற்கு சாத்தியக் கூறு இல்லை. 16 கண் பாலத்திற்கு கீழ்ப் பகுதியில் புதிய பாலம் அமைப்பதற்கு நெடுஞ்சாலைத் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**63—**

## சுற்றுலா மாளிகை கட்டுதல்

**வினா எண் 34877—திரு. செ. காமராஜ்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2014 பிப்ரவரி 17]

*(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், தரகம்பாடியில் சுற்றுலா மாளிகை கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பாடியில் சுற்றுலா மாளிகை கட்டுவதற்கான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**64—**

## கால்நடை மருந்தகம் சீரமைத்தல்

**வினா எண் 17169—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியிலுள்ள கால்நடை மருந்தகத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதல்வரின் கால்நடை மருத்துவ நிலையங்களின் புனரமைத்தல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்படுத்துதல், 2011-2012 என்ற ரூ.25 கோடி திட்டத்தின்கீழ் ரூ.6 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு கட்டடம் பொதுப் பணித் துறையினரால் சீரமைக்கப்பட்டுள்ளது.*

**65—**

## நோய்களை கட்டுபடுத்துதல்

**வினா எண் 17391—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 பிப்ரவரி 17

*(அ) நுண்ணுயிரிகளால் ஆடுகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நுண்ணுயிரிகளால் செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்த நுண்ணுயிர் தடுப்பூசிகள் போட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நோய்க் கிளர்ச்சி ஏற்பட்டிருப்பின் இரு திங்களுக்கு முன்னர் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**66—**

## கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 18595—திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருதுநகர் தொகுதி, மங்கலம் ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 208, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை, நாள் 17-9-2012-ன்படி புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட ஊரகக் கால்நடை மருந்தகக் கட்டடத்திற்கு 2012-2013 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு துறையின் மூலமாகக் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*



2014 பிப்ரவரி 17]

**67—**

## கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 20320—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, கிழக்கு ஓலப்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, சங்கரி ஊராட்சி ஒன்றியம், அரசிராமணி பேரூராட்சி, கிழக்கு ஓலப்பாளையம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடை அலகுகள் 3,000-க்கும் குறைவாக 193 அலகுகளே உள்ளதால் கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. எனவே, இக்கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு அருகிலுள்ள வேவூர் மற்றும் குள்ளம்பட்டி கால்நடை நிலையங்களின்மூலம் அளிக்கப்படும் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.*

**68—**

## கால்நடை நோய்த் தடுப்புத் திட்டம்

**வினா எண் 20734—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் தேசிய அளவிலான கால்நடை நோய்த் தடுப்பு மருந்துகள் சோதனை தரக் கட்டுப்பாட்டு மையம் அமைக்கவும், பசுவினம் மற்றும் எருமையின விருத்திக்கான தேசியத் திட்டம், கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான மாநிலங்களுக்கான உதவித் திட்டம், கால் மற்றும் வாய் கோமாரி*

நோய்த் தடுப்புத் திட்டம் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் இயங்கி வரும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுமூலம் திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நோய் கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் மருந்துகள் சோதனை தரக் கட்டுப்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது.

**69—**

## கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை

**வினா எண் 22548—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கால்நடை மருத்துவமனை ஊழியர்கள் வட்டந்தோறும் இல்லங்களுக்குச் சென்று கால்நடைகளுக்குத் தடுப்பூசி மற்றும் இரு மாதத்திற்கொருமுறை இலவச சிகிச்சை வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கால்நடை பராமரிப்புத் துறையின்மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தில் (IAMWARM) தொகுப்பு உப வடிநீர் கால்நடை நிலையங்கள் மூலமாக, விவசாயிகள் இருப்பிடங்களுக்குச் சென்று கருவூட்டல் பணி, மலடுநீக்க சிகிச்சைப் பணி மற்றும் இதர சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இத்துறையின்மூலம் 55 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் வழியாக, கால்நடை





மருந்தகங்களில் தினசரி நடைபெற்று வரும் அனைத்துப் பணிகளும் கால்நடை வளர்ப்போர் இருப்பிடங்களுக்குச் சென்று வழங்கப்பட்டு வருகிறது. செயற்கை முறை கருவூட்டல், கால்நடை வளர்ப்போருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தித் திட்ட முகமை மூலமாக தனிப்பட்ட (Private Artifical Insemination Worker) 910 நபர்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் பயிற்சி அளித்து கருவூட்டல் பணி, சினை பரிசோதனை முதலான பணிகள் கால்நடை வளர்ப்போர் இல்லங்களுக்குச் சென்று வழங்கப்பட்டு வருகின்றன. இத்துறையில் கால்நடைகள் நலம் பேணும்பொருட்டு நோய்களின் தாக்கம் ஏற்படாமல் துறையின்மூலம் குடற்புழு நீக்கம், தடுப்பூசிப் பணிகள் கால்நடை வளர்ப்போர் இல்லங்களுக்கே சென்று வழங்கப்பட்டு வருகின்றன.

**70—**

## தொழிற்பூங்கா அமைத்தல்

**வினா எண் 39472—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் தொழிற்பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை அதிகரிக்கவும், அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்கத்திலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற விதி 110-ன்கீழ் அறிவித்துள்ளபடி, சிப்காட் நிறுவனம் சிவகங்கை மாவட்டத்தில் சுமார் 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் கிராபைட் (graphite) மற்றும் பிற பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்காக ஒரு தொழிற்பூங்காவினை அமைக்கவுள்ளது. இதன் தொடர்பாக நிலம் கையகப்படுத்தும் பணிக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2014 பிப்ரவரி 17

**71—**

## கல்வி உதவித் தொகையை உயர்த்துதல்

**வினா எண் 10178—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) "சிக்ஷா சஹாயக் யோஜனா"வின் நெசவாளர் குடும்ப மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை ரூ.1,200/-ஐ ரூ.2,500/-ஆக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) "சிக்ஷா சஹாயக் யோஜனா" திட்டத்தின் மூலம் பயனாளிகளாக உள்ள நெசவாளர் குடும்பத்தில் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை (இரண்டு குழந்தைகளுக்கு) அதிகபட்சம் 4 ஆண்டுகளுக்கு அல்லது 12 ஆம் வகுப்பு முடிக்கும் வரை (ரூ.600/-வீதம் இரு தவணைகளில்) ஆண்டொன்றுக்கு ரூ.1,200/- வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.*

*இந்த உதவித் தொகை மத்திய அரசின் கைத்தறி வளர்ச்சி ஆணையரக வழிகாட்டு நெறிமுறைகளின்படி வழங்கப்பட்டு வருகிறது. வழங்கப்படும் கல்வி உதவித் தொகையான ரூ.1,200/-ஐ ரூ.2,500/-ஆக உயர்த்துதல் என்பது மத்திய அரசால் எடுக்கப்பட வேண்டிய கொள்கை முடிவாகும்.*

**72—**

## பாடத் திட்ட உதவித் தொகையை உயர்த்துதல்

**வினா எண் 10179—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின்கீழ் வழங்கப்படும் பல்வேறு பாடத்திட்ட உதவித் தொகை ரூ.3,500/-, ரூ.3,000/-, ரூ.2,500/-, ரூ.2,000/- என்றிருப்பதை முறையே ரூ.7,000/-, ரூ.6,000/-, ரூ.5,000/-, ரூ.4,000/- என உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

*(அ) டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின்கீழ் 33 பாடப்பிரிவுகளுக்கு 2012-2013 ஆம் கல்வி ஆண்டு முதல் வருடம் ஒன்றிற்கு ரூ.4000/-லிருந்து ரூ.7,500/- வரை கல்வி உதவித் தொகை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.*

*(ஆ) வினா எழவில்லை.*

**73—**

## கைத்தறிக் குழும திட்டத்தின் தற்போதைய நிலை

**வினா எண் 10187—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோ-ஆப்டெக்ஸ்மூலம் விருதுநகர் பகுதியில் பெரிய கைத்தறிக் குழும வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தும் பணியின் தற்போதைய நிலை குறித்து தெரிவிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

*(அ) மைய அரசின் விரிவான கைத்தறி வளர்ச்சி குழுமத் திட்டத்தின்கீழ்* (Comprehensive Handloom Cluster Development Scheme) *5 ஆண்டுகளில் செயல்படுத்தும் வகையில் விருதுநகரை மையமாகக் கொண்டு தமிழ்நாட்டில் மாபெரும் கைத்தறி வளர்ச்சிக் குழுமம் நிறுவப்பட்டுள்ளது.*

[2014 பிப்ரவரி 17

விருதுநகர் மாபெரும் கைத்தறி குழுமத் திட்டத்தில், கீழ்க்கண்ட 6 மாவட்டங்களில் உள்ள நெசவாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்:

| வ. எண் | மாவட்டம் | நெசவாளர் பகுதிகள் |
|---|---|---|
| 1. | விருதுநகர் | சுந்தரபாண்டியம், ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், அருப்புக்கோட்டை |
| 2. | மதுரை | செல்லூர், நிலையூர் |
| 3. | சிவகங்கை | காரைக்குடி |
| 4. | இராமநாதபுரம் | எமனேஸ்வரம், பரமக்குடி |
| 5. | தூத்துக்குடி | எட்டயபுரம், சாயர்புரம் |
| 6. | திருநெல்வேலி வீரவநல்லூர் | சங்கரன்கோவில், கடையநல்லூர், |

விருதுநகர் மாபெரும் கைத்தறி குழுமத் திட்டமானது ரூ.87.68 கோடி மொத்த திட்டத் தொகையில், ரூ.70 கோடி மைய அரசின் மானியத்துடனும் ரூ.8.84 கோடி மாநில அரசின் மானியத்துடனும் மற்றும் ரூ.8.84 கோடி பயனாளிகளின் பங்களிப்புடனும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், தொழில்நுட்ப மேம்பாட்டின்பொருட்டு, புதிய தறிகள், ஜக்கார்டுகள், நியுமேட்டிக் ஜக்கார்டுகள், மின்கலத்துடன் இணைக்கப்பட்ட விளக்குகள் மற்றும் தறி உபகரணங்கள் வழங்குதல், சாயச் சாலைகள், பொது சுத்திகரிப்பு நிலையங்கள், பொது வசதி மையங்கள், விற்பனை மையம், பயிற்சி மையங்கள் மற்றும் வடிவமைப்பு மையம் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கு மைய அரசின் மானியத்தில் முதல் தவணையாக ரூ.48.02 கோடிக்கு ஒப்புதல் வழங்கி, முதல் கட்டத்தில் ரூ.5.99 கோடியும், இரண்டாம் கட்டத்தில் ரூ.10 கோடியும் விடுவித்துள்ளது. இதற்கு நிகரான மாநில அரசு பங்களிப்பாக முதற்கட்டத்தில் ரூ.73.22 இலட்சமும், இரண்டாம் கட்டத்தில் ரூ.123.70 இலட்சமும் விடுவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, முதல் கட்டத் தொகையைக் கொண்டு 1,640 பெடல் தறிகள், 2,400 தார் சுற்றும் இயந்திரங்கள், 45 நியுமேட்டிக் ஜக்கார்டுகள்,



2014 பிப்ரவரி 17]

1,670 ஜக்கார்டுகள், மின்கலத்துடன் இணைக்கப்பட்ட 250 விளக்குகள், 20 டாபி பெட்டிகள் மற்றும் 2,458 அச்சு மற்றும் விழுதுகள் கொள்முதல் செய்யப்பட்டு நெசவாளர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டத் தொகையைக் கொண்டு, 2,776 பெடல் தறிகள் 4,060 மின் தார் சுற்றும் இயந்திரங்கள், 3,344 ஜக்கார்டுகள், 30 நியுமேட்டிக் ஜக்கார்டுகள், 4,950 அச்சு மற்றும் விழுதுகள், 80 டாபி மற்றும் 7,250 சிதிலி விளக்குகள் கொள்முதல் செய்து வழங்கப்பட உள்ளன. மேற்காணும் பொருட்களின் விநியோகம் நடைபெற்று வருகின்றது. 2013-2014-க்குள் விநியோகம் நிறைவு செய்யப்படும்.

இத்திட்டத்தில் பிற பணிகள் அனைத்தும் வரும் 3 ஆண்டு காலத்திற்குள் செயல்படுத்தப்படும்

(ஆ) கேள்வி எழவில்லை.

**74—**

## நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்

**வினா எண் 22788—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓய்வூதியம் வழங்கப்படாத நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் முதியோர் ஓய்வூதியத்தை 991 நபர்களும், குடும்ப ஓய்வூதியத்தை 36 நபர்களும் பெற்று வருகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டம் உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் ஏற்கெனவே பயன் பெற்று வரும் நெசவாளர்,

[2014 பிப்ரவரி 17

*முதியோர் ஓய்வூதியதாரர்கள் மற்றும் நெசவாளர் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு 2012-2013 ஆம் ஆண்டிற்கு அரசு நிதி ஒதுக்கப்பட்டு, மார்ச் 2013 வரை ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.*

**75—**

## கைத்தறித் தொழிலை மேம்படுத்துதல்

**வினா எண் 32404—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கைத்தறித் தொழிலுக்கு புத்துயிரூட்டி, சீரமைத்து மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

*கைத்தறி தொழிலுக்கு புத்துயிரூட்டி, சீரமைத்து மேம்படுத்த, மைய, மாநில அரசு நிதியுதவியுடன் 2012-2013 ஆம் ஆண்டு முதல் புத்துயிரூட்டுதல், சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ரூ.97.83 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு 590 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) மற்றும் 520 தனியார் நெசவாளர்கள் ஆகியோர் பயன் அடைந்து வருகின்றனர்.*

**76—**

## ஜரிகை ஆலையை விரிவுபடுத்துதல்

**வினா எண் 37728—திரு. வி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2014 பிப்ரவரி 17]

*(அ) காஞ்சிபுரத்தில் உள்ள ஜரிகை ஆலையை விரிவுபடுத்தி உற்பத்தியை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்தில் உள்ள ஜரிகை ஆலையை விரிவுபடுத்தி உற்பத்தியை அதிகரிக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**77—**

## போலி முத்திரைத் தாள் தடுத்தல்

**வினா எண் 32876—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*போலி முத்திரைத் தாள் விற்பனை செய்வதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*ஆம். போலி முத்திரைத் தாள் புழக்கத்தைத் தடுக்க, முத்திரைத் தாள் விற்பனையாளர்களின் கணக்குகள் முறையாகத் தணிக்கை செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. சார் பதிவாளர் நிலையில் சார் பதிவாளர் எல்லைக்குட்பட்ட முத்திரைத் தாள் விற்பனையாளர்களின் கணக்குகள் கருவூலக் கணக்குகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து சான்றொப்பம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளனர். கருவூல தேவைப்பட்டியலின் நகல், சார் பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாவட்டப் பதிவாளர் நிலையில், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தமது*

[2014 பிப்ரவரி 17

எல்லைக்குட்பட்ட அனைத்து முத்திரைத் தாள் விற்பனையாளர்களின் கணக்குகளைச் சரிபார்க்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி சார் பதிவாளர் மற்றும் மாவட்டப் பதிவாளர்கள் ஆய்வுகள் மேற்கொண்டு கண்காணித்து வருகின்றனர். இவ்வாறு போலி முத்திரைத் தாள்கள் விற்பனை செய்வதைத் தடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகின்றது.

**78—**

## சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள்

**வினா எண் 30853—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மொகைதீன் தர்காவில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2012-2013 ஆம் ஆண்டு மாநில அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ், திருநெல்வேலி மாவட்டம், பொட்டல்புதூர், மொகைதீன் தர்கா பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்காக ரூ.60.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு காத்திருப்போர் அறை கட்டுதல், ஆண்கள்/பெண்களுக்கான கழிவறை கட்டுதல் மற்றும் கழிவுநீர்க் கால்வாய், நடைபாதை, வாகன நிறுத்துமிடம் அமைத்தல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

**79—**

## குடிநீர்த் திட்டம்

**வினா எண் 13329—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2014 பிப்ரவரி 17]

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மாவடப்பு வனக் குடியிருப்புப் பகுதிக்கு வாண்டல் நீரூற்று மலைப் பகுதியிலிருந்து குடிநீர் வழங்க ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மத்திய அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மாவடப்பு வனக் குடியிருப்பு பகுதிக்கு குடிநீர் வழங்க 2012-2013-ம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வாண்டல் ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வர ரூ.51 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு கோரும் கருத்துரு மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. மாவடப்பு மற்றும் காட்டுப்பட்டியில் உள்ள 159 மலைவாழ் குடும்பங்கள் கடந்த காலங்களில் வெவ்வேறு இடங்களுக்கு அடிக்கடி இடம் பெயர்ந்து கொண்டே இருப்பதாலும், மேற்கூறிய குடிநீர்த் திட்டத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளாததாலும், இத்திட்டம் நிராகரிக்கப்பட்டது.

**80—**

## காத்திருப்போர் கூடம் அமைத்தல்

**வினா எண் 32155—திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், மாளிகைப்பட்டு காலனி மயானத்திற்கு காத்திருப்போர் கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு ஒன்றியம், மாளிகைப்பட்டு காலனி மயானத்திற்கு காத்திருப்போர் கூடம் ரூ.2,29,500/- மதிப்பீட்டில் 2012-2013 ஆம் ஆண்டு 'தாய்' திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்டது.*

**81—**

## நேரக் கண்காணிப்பாளர் நியமனம்

**வினா எண் 29105—திரு. சி.எச். சேகர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கும்மிடிப்பூண்டி பேருந்து நிலையத்தில் நேரக் கண்காணிப்பாளரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிட்., காஞ்சிபுரம் மண்டல பேருந்துகள், கோயம்பேடு மற்றும் பொன்னேரியிலிருந்து கும்மிடிப்பூண்டி வழியாக பல்வேறு இடங்களுக்கு இயக்கப்படுகின்றன. கும்மிடிப்பூண்டி பேருந்து நிலையத்தைத் தொடக்க இடமாகக் கொண்டு பேருந்துகள் அதிக எண்ணிக்கையில் இயக்கப்படாத நிலையில் நேரக் காப்பாளரை தற்போது நியமிக்க வாய்ப்பில்லை.*





**82—**

## இணையதளம்மூலம் கட்டணம் செலுத்துதல்

**வினா எண் 31546—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரசு கேபிள் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு வாடிக்கையாளர்கள் கட்டணத்தை இணையதளம்மூலம் செலுத்தும் முறையை எளிதாக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 30-8-2011 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையின்பொழுது, தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் மாதம் ரூ.70/- (ரூபாய் எழுபது மட்டும்) என்ற கட்டணத்தில் தனது கேபிள் டி.வி. சேவையை பொதுமக்களுக்கு கேபிள் ஆப்பரேட்டர்கள்மூலம் வழங்கும் எனவும், இதில் ரூ.20/-ஐ (ரூபாய் இருபது மட்டும்) கேபிள் ஆப்பரேட்டர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்திற்கு செலுத்துவார்கள் எனவும் அறிவிப்பு வெளியிட்டார்கள். தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் கேபிள் சேவை, கேபிள் ஆப்பரேட்டர்களிடமும் பொதுமக்களிடமும் சிறந்த வரவேற்பைப் பெற்றது. சந்தாதாரர்கள் ரூ.70/- கட்டணத்தை அரசு கேபிள் டி.வி. ஆப்பரேட்டரிடம் செலுத்தி வந்தனர். இதில் சில ஆப்பரேட்டர்கள் ரூ.70/-க்கு மேல் வசூலிப்பதாகப் புகார்கள் வந்தவண்ணம் இருந்தன. அரசு கேபிள் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு வாடிக்கையாளர்கள் கட்டணத்தை இணையதளம் மூலம் செலுத்தும் முறை எளிதாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், சந்தாதாரர்கள் நேரடியாக இணையதளம் மற்றும் வங்கிச் சலான் மூலம் ரூ.70/- (ரூபாய் எழுபது மட்டும்) செலுத்தும் முறை கடந்த மார்ச் 2013 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, நடைமுறையில் உள்ளது. இம்முறையில்,*

*இதுவரை (31-7-2013 வரையில்) மொத்தம் 1,117 பேர் நேரடியாக நிறுவனத்திற்கு கேபிள் கட்டணம் செலுத்தி உள்ளனர். இதன் விவரம் பின்வருமாறு:*

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆன்லைன்மூலம் செலுத்தியவர்கள் | - | 992 |
| 2. | இந்தியன் வங்கிச் சலான்மூலம் செலுத்தியவர்கள் | - | 117 |
| 3. | இந்தியன் ஓவர்சீஸ் வங்கிச் சலான்மூலம் செலுத்தியவர்கள் | - | 8 |
| | **மொத்தம்** | | 1,117 |

**83—**

## சலுகைக் கட்டணம்

**வினா எண் 33904—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரசு கேபிள் டி.வி. மூலம் சலுகைக் கட்டணத்தில் நிகழ்ச்சிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. சேவையினைத் தொடங்குவதற்கு முன், பொதுமக்கள் கேபிள் டி.வி. சேவையைப் பெற மாதம் ஒன்றுக்கு ரூ.150/- முதல் ரூ.200/- வரை கேபிள் டி.வி. கட்டணமாகச் செலுத்தி வந்தனர். ஆனால், தற்போது தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் சேவை தமிழகம் முழுவதும் தொடங்கிய பின்னர், இந்நிறுவனத்தின்மூலம் ரூ.70/- என்ற மிகக் குறைந்த கட்டணத்தில் கேபிள் சேவையைப் பெற்று வருகின்றனர். இதனால் பொதுமக்களுக்கு மாதத்திற்கு ரூ.80/- முதல் ரூ.130/- வரை மீதமாகிறது. இக்காரணங்களினால், பொதுமக்களிடம் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் கேபிள் சேவைக்கு*





*மாபெரும் வரவேற்பு உள்ளது. மேலும், இந்தியாவிலேயே மிகக் குறைந்த கட்டணமாக ரூ.70/-க்கு தமிழகத்தில் மட்டும்தான் 90 முதல் 100 தொலைக்காட்சி சேனல்கள் வழங்கப்படுகின்றன. எனவே, அரசு கேபிள் டி.வி. மூலம் இதற்கும்கீழ் குறைந்த கட்டணத்தில் நிகழ்ச்சிகளை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.*

**84—**

## அரசு விழா

**வினா எண் 38039—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டத்தைச் சேர்ந்த தியாகி இமானுவேல் சேகரன் அவர்களின் நினைவு நாளில் அரசு விழா எடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டத்தைச் சேர்ந்த தியாகி இமானுவேல் சேகரன் அவர்களின் நினைவு நாளில் அரசு விழா நடத்தும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**85—**

## நினைவு இல்லம் அமைத்தல்

**வினா எண் 39943—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*கன்னியாகுமரி மாவட்டம், தச்சன்விளையில் அனந்த பத்மநாபன் நாடாருக்கு நினைவு இல்லம் அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், தச்சன்விளையில் அனந்தபத்மநாபன் நாடாருக்கு நினைவு இல்லம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**86—**

## கம்பனுக்குச் சிலை அமைத்தல்

**வினா எண் 40679—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், நாட்டரசன்கோட்டையில் கவிச் சக்கரவர்த்தி கம்பனுக்குச் சிலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், நாட்டரசன் கோட்டையில் கவிச் சக்கரவர்த்தி கம்பனுக்குச் சிலை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**87—**

## வனப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு

**வினா எண் 22746—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வனப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை தொலைக்காட்சிகள், நாளேடுகள், தெரு நாடகங்கள்மூலம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

பொதுமக்களிடையே வனம் குறித்த விழிப்புணர்வு, உலக வன நாள், உலக சுற்றுச்சூழல் தினம், வன உயிரின வார விழா போன்று நடத்தப்படும் பல்வேறு வகையான நிகழ்ச்சிகள்மூலம் ஏற்படுத்தப்படுகிறது. தொலைக்காட்சி மூலமும் வனத் துறை அலுவலர்களால் உரை நிகழ்த்தப்பட்டு வரப்படுகிறது. மேலும், வனம் குறித்த செயல்பாடுகள் குறித்த விளக்க உரைகள், வனப் பாதுகாப்பு குறித்த விவரங்களை மக்களிடையே கொண்டு செல்ல ஏதுவாக, வனத் துறை உயர் அலுவலர்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், இந்நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதற்கு கூடுதல் தலைமை வனப் பாதுகாவலர் (சமூக வனம் மற்றும் வன விரிவாக்கம்) அவர்கள் ஒருங்கிணைப்பு அலுவலராக (Nodal Officer) நியமிக்கப்பட்டுள்ளார். மக்களிடையே வனம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, அவர்கள் வசிக்கும் பகுதிகளில், வனம் குறித்த விளம்பரப் பலகைகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

வன வளத்தை மேம்படுத்த மத்திய, மாநில அரசு அனுமதிக்கும் திட்டங்களில் விழிப்புணர்வு சம்பந்தமான அங்கத்தின்கீழ் திட்ட கிராமங்களில், தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் போதுமான அளவிற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், தமிழ்நாடு உயிர்ப் பன்மை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்துவது தொடர்பான குறும்படங்கள் தயார் செய்வது நடவடிக்கையில் உள்ளது.

**88—**

## மூலிகை மரக் கன்று நடுதல்

**வினா எண் 29543—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி கிராமம், சூரியமலையின் வனத்தை மேம்படுத்த புதிய மூலிகை மரக் கன்றுகள் நட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 பிப்ரவரி 17

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி வட்டத்தில், சூரியமலை காப்புக் காடு 4,141.92 ஏக்கர் (1676.92) பரப்பளவில் அமைந்துள்ளது. சேலம் வனக் கோட்டத்தில் மேட்டூர் சரகம், மேட்டூர் பிரிவு சூரியமலை வடக்கு மற்றும் தெற்கு பீட் என இரு வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலர்களால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. சூரியமலை காப்புக்காடு வனப் பகுதியில் தோட்ட அடர்த்தியை அதிகரிக்க பல்வகை மரக் கன்றுகள் வளர்க்கப்பட்டு வனத் துறைப் பணியாளர்களால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், இம்மலையின் பெரும்பகுதி மண் வளம் மிகக் குறைவாக உள்ளதால், தாவர வளர்ச்சி மிக மோசமான நிலையில் உள்ளது. இப்பகுதிகளில் பெரும்பாலும் பாறைகளும், புற்களும் முட்செடிகளும் உள்ளன. ஆங்காங்கே, சிறு சிறு பள்ளத்தாக்குகள் உள்ளன. எனவே, இந்த வனப் பகுதியில் மூலிகை மரக் கன்றுகள் நட்டு வளர்க்க போதிய சாத்தியக் கூறுகள் இல்லை.

**89—**

## வனத் துறை குடியிருப்புக் கட்டடம்

**வினா எண் 32486—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், கரட்டூரில் கட்டப்பட்ட வனத் துறை குடியிருப்புக் கட்டடத்தைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், கரட்டூரில் குடியிருப்புக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு,



2014 பிப்ரவரி 17]

மின்சார வசதி மற்றும் பூச்சு வேலைகள் முழுமையடையாத நிலையில் உள்ளது. நடப்பு ஆண்டில் நிதி கிடைக்கப் பெற்றதும் வேலைகள் முடிக்கப்படும்.

மின் வசதி மற்றும் இதர வேலைகள் முடிக்கப்பட்டவுடன் கட்டடம் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

**90—**

## காடுகளில் மரம் வெட்டுவதைத் தடுத்தல்

**வினா எண் 35602—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் அருகில் அடவிநயினார் அணைப் பகுதிக் காடுகளிலுள்ள மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இடம் ஒரு பகுதி மட்டும் மேலகரைப்பிரிவு, வடகரைப்பீட், வடகரை காப்புக் காட்டினை எல்லையாகக் கொண்டது. மற்ற இருபுற நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஒருபகுதி முழுமையாகத் தனியாருக்குச் சொந்தமான 9 எஸ்டேட்டுகளைக் கொண்ட பாராவி என்ற பெயருடன் கூடிய தனியார் நிலங்களாகும். இந்தத் தனியார் நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள மா, கொய்யா, இலவம், கிராம்பு, தென்னை, பாக்கு, முந்திரி போன்ற மலைத் தோட்டங்களில் காற்றில் முறிந்த மற்றும் வயது முதிர்ந்த நிலையில் உள்ள இறந்துபோன மரங்களின் விறகுகளை அவ்வப்போது எடுத்துச் செல்கிறார்கள். மேலும், இப்பகுதிகள் தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949-ன்கீழ் அறிவிக்கை செய்யப்பட்டவை அல்ல.

இந்த அடவிநயினார் அணைக்கட்டுப் பகுதிகளில், வனப் பகுதியோ அல்லது தனியார் எஸ்டேட்டுகளிலோ புதிதாக மரங்கள் ஏதும் வெட்டப்படவில்லை.

**91—**

## மூலிகைச் செடிகள் வளர்த்தல்

**வினா எண் 36852—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதியில் மூலிகைச் செடிகள் வளர்க்க அரசு அனுமதி வழங்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் மூலிகைச் செடிகள் வளர்க்கத் தகுதியான காப்பு வனப் பகுதி ஏதும் இல்லை. எனவே மூலிகைச் செடிகள் வளர்க்க இயலாமல் உள்ளது.*

**92—**

## மான் வேட்டையைத் தடுத்தல்

**வினா எண் 37494—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிவகங்கை மாவட்ட காடுகளில் வாழும் மான்களை வேட்டையாடுபவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். சிவகங்கை மாவட்டத்தில் காடுகளில் வாழும் மான்களை வேட்டையாடுபவர்களைக் கண்காணித்து, வன உயிரின பாதுகாப்புச் சட்டம், 1972-ன்படி உரிய வழக்குப் பதிவு செய்யப்பட்டு இணக்கக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மாறாக*





*நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து வனத் துறை அலுவலர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**93—**

## வனத் துறை நிலங்களை மீட்டல்

**வினா எண் 37502—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டத்தில் வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களை தனியார் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரி வனக் கோட்டத்தில் 553 வன நில ஆக்கிரமிப்புகள் 427.274 எக்டேர் பரப்பளவில் உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் 239.46 எக்டேர் பரப்பளவுள்ள 49 வன நில ஆக்கிரமிப்புகள் குறித்த வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. அவ்வழக்குகள் முடிவடைந்த பின்னர் ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மற்ற ஆக்கிரமிப்பாளர்களுக்கு தமிழ்நாடு வனச் சட்டம் 1882, பிரிவு* 68A-*ன்கீழ் ஆக்கிரமிப்பாளர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**94—**

## வனச் சாலை சீரமைத்தல்

**வினா எண் 38044—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அந்தியூர் தொகுதி, பர்கூர், வேலாம்பட்டி பிரிவிலிருந்து வேலாம்பட்டி வரை உள்ள வனச் சாலையைச் சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அந்தியூர் தொகுதி, பர்கூர் வேலாம்பட்டி பிரிவிலிருந்து வேலாம்பட்டி வரையுள்ள வனச் சாலை ஈரோடு மண்டலம், ஈரோடு வனக் கோட்டம், பர்கூர் வனச் சரகத்தின் நிருவாக எல்லைக்குட்பட்ட வடபர்கூர் காப்புக் காட்டில் அமைந்துள்ளது. இக்காப்புக் காட்டு அறிவிக்கையில் வேலாம்பட்டியிலிருந்து பர்கூருக்குச் செல்ல சுமார் 5 மைல் தூரத்திற்கு 6 அடி அகலத்தில் பொதுமக்கள் சென்று வர பொது வழித்தட உரிமை அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த உரிமைப் பாதை நாளது தேதி வரையிலும் சாலையாக மேம்படுத்தப்படவில்லை. இப்பாதையினைச் சாலையாக மேம்படுத்த கூடுதலாக வன நிலம் தேவைப்படுவதால், அதற்கு வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்கீழ் மத்திய அரசின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். மத்திய அரசிடமிருந்து முன் அனுமதி பெறுவதற்கான பிரேரணை உரிய பயனீட்டாளர் துறையிடமிருந்து கிடைக்கப்பெறும்பட்சத்தில், மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**95—**

## வனச் சாலை சீரமைத்தல்

**வினா எண் 38045—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அந்தியூர் தொகுதி, மாக்கம்பாளையம் முதல் குட்டையூர் வரையிலான வனத் துறைக்குச் சொந்தமான சாலையைச் சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அந்தியூர் தொகுதி, மாக்கம்பாளையம் முதல் குட்டையூர் வரையுள்ள வனத் துறைக்குச் சொந்தமான சாலை ஈரோடு மண்டலம், ஈரோடு வனக் கோட்டம், பர்கூர் வனச் சரகத்தின் நிருவாக எல்லைக்குட்பட்ட வடபர்கூர் காப்புக் காட்டில் அமைந்துள்ளது. இக்காப்புக் காட்டு அறிவிக்கையில் மாக்கம்பாளையம் முதல் குட்டையூர்வரை 3½ மைல் தூரத்திற்கு 6 அடி அகலத்தில் பொதுமக்கள் சென்று வர பொது வழித்தட உரிமை அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த உரிமைப் பாதை நாளது தேதி வரையிலும் சாலையாக மேம்படுத்தப்படவில்லை. இப்பாதையினை சாலையாக மேம்படுத்த கூடுதலாக வன நிலம் தேவைப்படுவதால், அதற்கு வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன் கீழ் மத்திய அரசின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். மத்திய அரசிடமிருந்து முன் அனுமதி பெறுவதற்கான பிரேரணை உரிய பயனீட்டாளர் துறையிடமிருந்து கிடைக்கப்பெறும்பட்சத்தில், மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*





**96—**

## பஞ்சு பாலியஸ்டர் கலவை ஆலை

**வினா எண் 36107—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், வீரபாண்டி எஸ். பாலத்தில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட பஞ்சு பாலியஸ்டர் கலவை ஆலையை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், வீரபாண்டி எஸ். பாலத்தில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட பஞ்சு பாலியஸ்டர் ஆலையில் பெரும்பகுதி மத்திய தோல் பயிற்சி (LFT) மையம் செயல்பட்டு வருகிறது.

மேற்படி அலகில் உள்ள பெரும்பாலான இயந்திரங்கள் சுமார் 10 ஆண்டுகளுக்கு மேல் இயக்கப்படாமல் உள்ளதால் அதனை மீண்டும் இயக்குவது என்பது மிக அதிக செலவினத்தை ஏற்படுத்தும். மிகப் பழைய இயந்திரம் என்பதால் தரமான நூல்கள் உற்பத்தி செய்வது கடினம். நூற்புக்குத் தேவையான சிலைவர் கதர் ஆணைக் குழு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து

[2014 பிப்ரவரி 17

கொள்முதல் செய்யப்படுவதால் அதனை இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

கட்டடங்களும் மிகவும் பழுதடைந்து உள்ளதால் அதனையும் பராமரிக்க வேண்டிய சூழல் உள்ளது. மேற்கண்ட காரணங்களால் அதனைத் தற்போது இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**97—**

## அறுவை சிகிச்சை அரங்குகள்

**வினா எண் 17445—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், அரசு பொது மருத்துவமனையில் புதிய மெடிக்கல் பிளாக்கிலுள்ள அனைத்து அறுவை சிகிச்சை அரங்குகளையும் முழுமையாகப் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய மெடிக்கல் பிளாக்கில் அறுவை அரங்குகள் ஏதும் இல்லை.

(ஆ) சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை மற்றும் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு பகுதியில்

1. மாடுலர் அறுவை அரங்குகள்-4
2. அவசர அறுவை அரங்கு-1
3. சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைகள்-2 உள்ளன.

அறுவை அரங்குகள் கடந்த ஜூலை 2012 முதல் முழுமையாக இயங்கி வருகின்றன. இவற்றில் இதுவரை சுமார் 2,000-க்கும் மேற்பட்ட உயிர் காக்கும் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.



2014 பிப்ரவரி 17]

**98—**

## நியுரோபியான் ஊசி மருந்து வழங்குதல்

**வினா எண் 30302—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அரசு மருந்தகத்தில் நோயாளிகளுக்கு நியுரோபியான் ஊசி மருந்தும், இன்சுலின் மருந்தும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அரசு மருந்தகத்தில் நோயாளிகளுக்கு நியுரோபியான் ஊசி மருந்திற்கு இணையான விட்டமின் பி ஊசி மருந்தும், இன்சுலின் மருந்தும், வழங்க அரசாணை (2D) எண் 137 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 13-11-1998-ன்படி ஏற்பாடு செய்யப்படும்.

**99—**

## மகப்பேறு உதவித் தொகை உயர்த்துதல்

**வினா எண் 17971—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்மூலம் வழங்கப்படும் மகப்பேறு உதவித் தொகையை உயர்த்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்மூலம் வழங்கப்படும் மகப்பேறு உதவித் தொகையான ரூ.6,000/-ஐ உயர்த்தி வழங்குவது குறித்த ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2014 பிப்ரவரி 17

**100—**

## முஸ்லிம் மகளிருக்கான பயிற்சிகள்

**வினா எண் 18382—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கத்தின்மூலம் முஸ்லிம் மகளிருக்கு என்னென்ன பயிற்சிகள் வழங்கப்படுகின்றன?*

*(ஆ) 2011-2012 ஆம் ஆண்டு பயன்பெற்ற முஸ்லிம் மகளிர் எத்தனை பேர்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கத்தின்மூலம் ஆதரவற்ற முஸ்லிம் விதவைகளுக்கு கைவினைப் பொருட்கள் செய்ய பயிற்சி அளித்தல், சிறுதொழில் தொடங்க உதவி செய்தல், தையல் பூ வேலைப்பாடுகள் மற்றும் காலணிகள் செய்வது குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டு ஏழ்மை நிலையில் உள்ள முஸ்லிம் மகளிரின் வாழ்க்கைத் தரம் மேம்பட வழிவகை செய்யப்பட்டு வருகிறது.*

*2011-2012 ஆம் ஆண்டில் பயிற்சிகள் எதுவும் நடத்தப்படவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 2. அறிக்கை அளித்தல்

### உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் திரு. துரைமுருகன் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவை உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், அவை உரிமைக் குழுவின் தலைவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக கட்சியைச் சார்ந்த திருவாளர்கள் மு.க. ஸ்டாலின் மற்றும் துரைமுருகன் ஆகியோர் மீதான உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கையினை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

## 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### சென்னை மாநகர காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு நீட்டிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு நீட்டிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2014 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு நீட்டிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

[2014 பிப்ரவரி 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அரசினர் தீர்மானங்கள்

### உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் திரு. துரைமுருகன் மீதான அவை உரிமைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன் ஆகியோர் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கையினை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஆ)-வின்கீழ் இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2014 பிப்ரவரி 17] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன் ஆகியோர் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஈ)-ன்கீழ் இப்பேரவை ஏற்றுக்கொள்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்டு அவையில் நிறைவேற்றப்பெற்ற தீர்மானத்தின்படி, திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுடைய செயல், தண்டனை அளிக்கத்தக்க குற்றமாகக் கருதப்பட்டாலும், இனிமேல் இதுபோன்ற தவறுகளில் அவர் ஈடுபடக் கூடாது என்றும், அவ்வாறு ஈடுபட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் கடைசி எச்சரிக்கை விடுத்து திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்குக் கடுமையான கண்டனத்தை பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[பேரவைத் தலைவர்] [2014 பிப்ரவரி 17

மேலும், பேரவையில் நிறைவேற்றப்பெற்ற தீர்மானத்தின்படி திரு. துரைமுருகன் அவர்கள் இன்றிலிருந்து ஐந்து நாட்கள் மட்டும் பேரவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளக் கூடாது என்ற வகையில், பேரவைப் பணிகளினின்றும் தற்காலிகமாக நீக்கம் செய்யப்பெறுகின்றார்.

*முற்பகல் 11-15*

## 5. வரவு—செலவுத் திட்டம், 2014—2015, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014-2015 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

***திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த அவைக்கு அனுப்பி வைத்து, தொடர்ந்து சட்டமன்றத்தினுடைய விவாதங்களிலே பங்கெடுக்க வைத்திருக்கின்ற தலைவர் கேப்டன் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனது நெஞ்சார்ந்த நன்றியை காணிக்கையாக்கிக்கொள்கின்றேன்.

முதலிலே இந்த அவையிலே ஒரு கோரிக்கை வைக்க விரும்புகின்றேன். நான் சட்டமன்ற உறுப்பினராகி ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் நிறைவு அடையப் போகின்ற இத்தருணத்திலே சுமார் 10 முறை திருக்கோவிலூர் பேருந்து நிலையத்தினுடைய கோரிக்கையை இந்த மன்றத்திலே வைத்திருக்கிறேன். ஆனால், இதுவரையிலும் இந்த அரசு எந்த ஒரு முயற்சியையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. நகருக்கு வெளியிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்ததாகக் கூறியிருக்கிறார்கள். அவர் கோரிக்கை வைத்தாலும், வைக்கவில்லை என்று சொன்னாலும்கூட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துகின்ற வகையிலே,



2014 பிப்ரவரி 17] [திரு. கே.பி. முனுசாமி]

இதுவரையில் ஆண்ட அரசுகள் செய்யாத ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கி, ஒவ்வொரு ஆண்டும் 750 கோடி ரூபாய் வழங்கி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன்பு ஆண்ட எந்த ஆட்சியும், அரசும் நகர்புறத்திற்கோ, நகராட்சிக்கோ, பேரூராட்சிக்கோ அரசுப் பணத்தைச் செலவு செய்ததாக வரலாறு கிடையாது. ஆனால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசுதான், புரட்சித் தலைவி அவர்கள்தான் இதற்கு நிதி ஒதுக்கி, நகர்ப்புறங்கள் ஆனாலும் சரி, மாநகராட்சிகளானாலும் சரி, பேரூராட்சிகளானாலும் சரி அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்ல, ஊராட்சிப் பகுதிகளில் இருக்கக்கூடிய கிராமப் பகுதிகளில்கூட பேருந்து நிலையங்களை உருவாக்க வேண்டும் என்று, கடந்த நிதி ஆண்டிலே 16 ஊராட்சிகளில் இருக்கக்கூடிய அந்தக் கிராமங்களுக்குப் பேருந்து நிலையங்களை உருவாக்குவதற்காக பேருந்து நிலையம் ஒன்றிற்கு 1.6 கோடி ரூபாயிலிருந்து 2.00 கோடி ரூபாய் வரை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஏற்கப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு, செயல்பாட்டுக்கு வர இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே முன்புகூட இது சம்பந்தமாகச் சொல்லியிருக்கிறார். எனக்கு சந்தோஷம்தான். ஆனால், அங்கே தொடர்ந்து நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் என்று சொன்னால், 5 ஏக்கர் நிலம் தேவை என்று சொல்கிறார்கள். இருக்கின்ற இடத்திலே பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்தால் சரியாக இருக்கும் என அந்தப் பகுதியிலே இருக்கின்ற பொதுமக்களும், வியாபாரிகளும் கருதுகின்றார்கள். அதன் அடிப்படையிலே இன்றையதினம் அந்தப் பேரூராட்சி அலுவலகம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு இருக்கிறது. மொத்தம் 4 ஏக்கர் 37 சென்ட் இடம் அங்கே இருக்கிறது. ஆனால், அந்த

[திரு. எல். வெங்கடேசன்] [2014 பிப்ரவரி 17

இடத்திலே நெடுஞ்சாலைத் துறை அலுவலகம் 2 ஏக்கர் 16 சென்ட் இடத்திலே இருக்கிறது. அதேபோன்று 88 சென்ட் இடத்திலே வனத் துறை அலுவலகம் இருக்கிறது. அவர்கள் அந்த அலுவலகங்களைக் காலி செய்ய மறுக்கிறார்கள். எந்த காரணத்திற்காக என்று தெரியவில்லை. வனக் கழகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று சொல்கிறார்கள். வனக் கழகம், வனத் துறைக்கு அனுப்பியிருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே, முழுமையாக அந்தப் பேருந்து நிலையத்தை விரிவாக்க வேண்டும் என்று சொன்னால், முழுமையாக அந்த இடத்தைக் கையகப்படுத்தினால்தான் அங்கே விரிவுபடுத்தப்பட்ட பேருந்து நிலையத்தை அமைக்க முடியும். அதற்கான பணிகளை இந்த அரசு விரைவாக செய்து முடித்திட வேண்டும், நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபொழுதே அதில் எவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை அவர் கோடிட்டுக் காட்டினார். பிரச்சினைகளை எதிர்கொண்டு, அந்தப் பிரச்சினைகளை முழுமையாக தீர்க்கக்கூடிய வல்லமை படைத்தவர் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற பிரச்சினைகள் சாதாரண பிரச்சினைகள். இது நடைமுறைப் பிரச்சினை. ஒரு துறையில் இருந்து இன்னொரு துறைக்கு மாற்றுவது என்பது நடைமுறைப் பிரச்சினை. அந்த நடைமுறைப் பிரச்சினைகள் முடிவுக்கு வருகின்ற நேரத்தில் நிச்சயமாக அந்தப் பகுதி மேம்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று திருவண்ணாமலையில் இருந்து



2014 பிப்ரவரி 17] [திரு. எல். வெங்கடேசன்]

தியாகதுருகம் செல்கின்ற சாலையிலே மணலூர்பேட்டை அருகிலே ஓர் உயர்மட்டப் பாலம் வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அந்தப் பகுதி ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்டது. அங்கே ஓர் உயர்மட்டப் பாலம் வேண்டும் என்று நெடுஞ்சாலைத் துறையில் கோரிக்கை வைக்கப்பட்டது. அதிகாரிகளால்கூட முன்மொழிவுகள் அனுப்பப்பட்டன. கடந்த 2011 ஆம் ஆண்டிலே அனுப்பப்பட்டது, 2012 ஆம் ஆண்டிலே அனுப்பப்பட்டது. ஆனால், எந்தக் காரணத்திற்காகவோ அது நிறைவேறவில்லை. ஏறக்குறைய ஆயிரக்கணக்கான வாகனங்கள் தினசரி செல்கின்ற பகுதி அது. மழைக் காலங்களிலே வெள்ளம் வந்தால்,. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் அதிக அளவிலே பாலப் பணிகளுக்காக அனுமதி வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-20*

*2011-2012* ஆம் ஆண்டு *23* இரயில்வே பாலங்கள் கட்டுவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் அறிவிக்கப்பட்டது. இதில் பரமக்குடி பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. *3* பாலங்கள் கட்டுவதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மற்ற பாலங்கள் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. அதைபோல், *2012-2013* ஆம் ஆண்டு *14* பாலங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் அறிவிக்கப்பட்டு அவற்றுக்கு திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல், *2013-2014* ஆம் ஆண்டில் *18* பாலங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் அறிவிக்கப்பட்டு அவற்றிற்கு நேர்பாடுகள் தயாரிக்கப்பட்டு மத்திய இரயில்வே துறையின் பரிசீலனையில் உள்ளன. ஆக மொத்தம், *55* இரயில்வே மேம்பாலங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே அறிவிக்கப்பட்டு அந்தப் பணிகள் பல்வேறு நிலைகளில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால், ஒவ்வோர் ஆண்டும் மாண்புமிகு உறுப்பினர்கள் நீங்கள் கோரிக்கைகளை வைக்கின்றீர்கள். நிதிநிலைக்கு ஏற்ப அந்தப் பாலங்களைக் கட்ட

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2014 பிப்ரவரி 17

ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதையும் ஆய்வு செய்து அங்கே பாலம் கட்டுவதற்கு அவசியம் ஏற்பட்டால் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பாலம் கட்டுவதற்கு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரிஷிவந்தியம் தொகுதியிலே பல்வேறு கோரிக்கைகள் வைத்து, அது செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்ததாகவும் இங்கே சொன்னார்கள். ரிஷிவந்தியம் தொகுதியில்தான் *40* ஆண்டுகளாகக் கேட்டுவந்த பிரம்மகுண்டம் என்ற சிறப்பான அந்தப் பாலத்தை மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தந்து இன்னும் சில தினங்களிலே அதைத் திறக்க இருக்கிறார்கள் என்பதை உறுப்பினர் அவர்களுக்குப் பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, ரிஷிவந்தியம் தொகுதியிலே பல்வேறு சாலைகள் மிக மோசமாக இருந்தன என்பதற்காக சுமார் *8* கோடி ரூபாயை அந்தத் தொகுதிக்கு மட்டும் மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதைப் பணிவன்போடு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, மற்றும் ஒரு பாலம்—உறுப்பினருக்கே அது தெரியும். இவற்றுக்கெல்லாம் அவர் நன்றி சொல்லிவிட்டு மேலும் கோரிக்கைகளை வைப்பார்களேயானால் இந்த அரசு கனிவோடு, கண்டிப்பாகச் செய்து தரும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் *2011-2013* ஆம் ஆண்டு பொற்கால ஆட்சியில் *27* பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் திறக்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எஞ்சிய *5* பாலங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் விரைவாக திறக்கப்பட உள்ளன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுகிறேன். அதேநேரத்தில், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே *2006-2011* ஆம் ஆண்டுவரை அந்த ஐந்தாண்டு காலத்திலே *32* பாலங்கள்தான் கட்டி முடித்தார்கள் என்பதையும் இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 பிப்ரவரி 17] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இரு தொகுதிகளான திருக்கோவிலூர் மற்றும் ரிஷிவந்தியத்தில் சில பணிகள் செய்து முடிக்கப்பட்டாலும், மக்கள் எதிர்ப்பார்க்கின்ற பல பணிகள் இந்த ஆட்சியிலே செய்யப்படாமல் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போன்று நாங்கள் வைக்கின்ற அனைத்துக் கோரிக்கைகளையும் அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு முன்பு செய்து முடிப்பார்களேயானால் நிச்சயமாக நாங்கள் நன்றி சொல்லத் தயாராக இருக்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா கோரிக்கைகளையும் அரசால் நிறைவேற்ற முடியாது. நிதிநிலைமைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் கோரிக்கைகளை நிறைவேற்ற சில வழிமுறைகள் இருக்கின்றன. நேற்றுகூட சென்று, திரு. மன்மோகன்சிங் அவர்களைச் சந்தித்துவிட்டு வந்தார்கள். நாங்கள் கேட்டிருக்கின்ற நிதியை கொடுக்கச் சொல்லுங்கள். இவர்கள் சொல்லுகின்ற கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 பிப்ரவரி 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

*முற்பகல் 11-25*

***திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் பாரதப் பிரதமர் திரு. மன்மோகன் சிங் அவர்களைச் சந்தித்ததைப்பற்றி இங்கே அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எதற்கு போனோம் என்று எல்லா பத்திரிக்கைகளிலும் வந்திருக்கின்றன. இருந்தாலும் அதைப்பற்றி தெரிவிப்பதால் இப்போது சொல்கின்றேன். தமிழக மீனவர்கள் பிரச்சினை, சட்டம்-ஒழுங்கு பிரச்சினை மற்றும் மின்சாரப் பிரச்சினை ஆகியவற்றைப் பற்றித்தான் பேசினோமேயொழிய வேறு எதற்காகவும் இல்லை. (குறுக்கீடுகள்) நிதி கேட்கப் போகவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு) உங்களுக்கு ஏன் ஆதங்கம்? உங்களுக்கு எதற்கு ஆதங்கம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்குப் போனார்கள், என்ன பெற்றார்கள் என்பதை நீங்கள் சொல்லவில்லை என்றாலும் நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும். உங்கள் பேரம் படிந்ததா, இல்லையா என்பதையெல்லாம் நீங்கள் சொல்லத் தேவையில்லை. அதற்காக, ஏதோ பொதுப் பிரச்சினையை எடுத்துக்கொண்டு செல்வதைப்போல் போய்ப் பார்த்துவிட்டு, உங்களுடைய கூட்டணி பேச்சுவார்த்தைகளுக்குப் பேரம் பேசி, தோல்வி அடைந்து வந்துள்ளீர்கள் என்று கருதுகின்றேன். அதை மறைக்காமல் சொன்னால் மிகவும் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுகின்ற, தலைமைப் பொறுப்பிலே



2014 பிப்ரவரி 17] [திரு. கே.பி. முனுசாமி]

இருக்கின்ற தலைமை அமைச்சர் அவர்களை நீங்கள் பார்த்திருக்கின்றீர்கள், ஏற்கெனவே அரசு பல்வேறு கோரிக்கைகளை வைத்து அவர் பாராமுகமாக இருந்துகொண்டிருக்கின்றார்; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நிதியை நீங்கள் கேட்டிருந்தால் நன்றாக இருக்கும் என்று கூறினார். இவர்கள் அரசுக்குக் கேட்ட நிதியை மறந்துவிட்டு, “எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை” என்பதைப் போல, எதற்காகச் சென்றார்களோ, அதற்காக உணர்ச்சிவசப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய முற்போக்கு திராவிட கழகம் என்ன கூட்டணி அமைக்கப் போகிறது என்பதைத்தான் இன்றைக்கு தமிழ்நாட்டிலே எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. அதைப் பற்றி நீங்கள் யாரும் பயப்பட தேவையில்லை. கூட்டணியைப் பற்றி பேசுகிறோம், பேசவில்லை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சப்ஜெக்ட்டைப் பற்றி பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தே.மு.தி.க. யாருடன் கூட்டணி வைத்துக்கொண்டாலும் எங்களுக்குக் கவலை இல்லை. எங்கள் அம்மா அவர்கள் கூட்டணியைப் பற்றியே சிந்திக்காமல், தேர்தலைச் சந்திக்கக்கூடிய வல்லமை படைத்தவர்கள். மாட்டுத் தரகைவிட மிகக் கேவலமாக, தே.மு.தி.க. தரகர்கள், மற்றவர்கள் எல்லாம் நடந்துகொள்கின்றார்கள் என்பதைப் பத்திரிகைகள் எழுதுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரைப் பேசச் சொல்லுங்கள். நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) உறுப்பினரே நன்றாக

பதில் சொல்வார். (குறுக்கீடு) உங்களுக்குதான் நிறைய வாய்ப்பு கொடுத்துவிட்டேன் அல்லவா? (குறுக்கீடு) திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேவலமாக நடந்துகொண்டோம் என்று பத்திரிகைகளை ஆதாரமாகக்கொண்டு அவர் பேசுகின்றார். இதேபோல் பத்திரிகையை ஆதாரமாக வைத்து நாங்களும் பேசினால் அனுமதிப்பீர்களா? பத்திரிகையை ஆதாரமாக வைத்துப் பேசக் கூடாது என்கின்றீர்கள். கேவலமாக நடந்தோம் என்கிறார். யார் கேவலமாக நடந்தார்கள்? அதைவிடக் கேவலமாக நடப்பதெல்லாம் பத்திரிகையில் நிறைய வந்திருக்கின்றன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்தான் கூட்டணியைப் பற்றிப் பேசினார். எங்களை எல்லோரும் எதிர்பார்க்கின்றார்கள் என்று அவர் கூட்டணியைப் பற்றிப் பேசினார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. மன்மோகன் சிங் அவர்களைச் சந்தித்தீர்கள், தமிழ்நாட்டில் அரசியல் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற துணைத் தலைவர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள் பேசுகின்றபோது, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, மின்சாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நாங்கள் டெல்லி சென்றோம் என்று குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சினைகளை எல்லாம் தீர்ப்பதற்கு என்ன ஆதாரம் தேவைப்படுகின்றது? நிதி தேவைப்படுகின்றது. இந்த நிதியைப் பல்வேறு காலகட்டங்களில், தமிழ்நாடு இயற்கை இடர்ப்பாடுகளில் சிக்கித் தவித்தபோது, போதிய நிதி தேவை என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டெல்லி பட்டணத்திற்கு பலமுறை வேண்டுகோள் விடுத்தார்கள். தரவில்லை. நமக்கு நியாயமாக ஒவ்வொரு நிதியாண்டிலும் கிடைக்க வேண்டிய மானியங்களும்





தரப்படவில்லை. நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய நிதியொதுக்கீடும் கிடைக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் இவர்கள், இவர்களுடைய தலைவரோடு டெல்லி சென்றிருக்கின்றார்கள். பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நிதிதான் தேவை என்பது அனைவருக்கும் தெரியும். கனமாகக் கிடைக்கும் என்று சென்றவர்கள் குழப்பத்தோடு திரும்பி வந்திருக்கின்றார்கள் என்பதனை நாட்டு மக்கள் பேசுகிறார்கள், பத்திரிகைகள் அதனைப் பிரதிபலிக்கின்றன. அதைத்தான் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்கள் நிதிநிலை அறிக்கை பற்றிய விவாதத்தைத் தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதுகுறித்த விவாதத்தைத் தொடர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், நீங்கள் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுங்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சம்பந்தப்பட்டவன். நான் என்னுடைய தொகுதி சம்பந்தமாக ஒன்றரை நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள்தான். (குறுக்கீடு)

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள், கனமாக எதிர்பார்த்து, . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்கள் தன்னுடைய உரையை ஆரம்பித்து 12 நிமிடங்கள் ஆகிவிட்டன. அவர் தன்னுடைய பேச்சை, உரையை ஆரம்பித்து 12 நிமிடங்கள் ஆகிவிட்டன. இதுவரை நிதிநிலை அறிக்கையைப்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 பிப்ரவரி 17

பற்றி அவர் ஒரு வார்த்தையைக்கூடப் பேசவில்லை. அவர் நிதிநிலை அறிக்கையின்மீது விவாதத்தைத் தொடரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன், நிதிநிலை அறிக்கைமீது பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியவையெல்லாம் அவைக் குறிப்பில் இருக்கின்றது. அப்படியென்றால் நாங்கள் பேசியதெல்லாம் என்ன செய்வீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், இது முறை அல்ல. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** இருங்கள். நான் பேசிவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் மோகன்ராஜ், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். நீங்கள்தான் பேசினீர்களே! (குறுக்கீடு) எதிர்கட்சித் துணைத் தலைவர், உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். நீங்கள்தான் பதில் சொன்னீர்களே! (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் என்ன பேசினோம். நீங்கள் எடுத்துச் சென்ற பிரச்சினைக்கு நிதி தேவை. அந்த நிதியைத்தான் நீங்கள் அங்கே கேட்பதற்காக, உங்கள் செல்வாக்கை அங்கு பயன்படுத்துவதற்காக அங்கு சென்றீர்கள். கிடைத்ததா? கிடைக்கவில்லை. அதைத்தான் நான் சொன்னேன். கனமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்த்துச் சென்றவர்கள், குழப்பத்தோடு வந்திருக்கிறார்கள் என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் ஆளாளுக்குப் பேச முடியாது. எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு நான் வாய்ப்புக் கொடுத்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன், நீங்கள் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுங்கள்.



2014 பிப்ரவரி 17]

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே நெடுஞ்சாலைகள் மற்றும் மேம்பாலப் பணிகளுக்கு. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் வெங்கடேசன் அவர்கள் பேசி முடித்தபின் உங்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. எல். வெங்கடேசன்:** நெடுஞ்சாலைகள் மற்றும் மேம்பாலப் பணிகளுக்கும், குறிப்பாக அதிகமான சரக்குந்து போக்குவரத்தால் அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ள 120 கிலோ மீட்டர் சாலைகள், 240.76 கோடி ரூபாய் செலவில் மறு கட்டமைப்பு செய்யப்படுவதாகவும், இரண்டாவது கட்டப் பணிகள் 86.65 கோடி ரூபாய் செலவில் நடைபெறப் போவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டில் ரூ.2,500 கோடி, 2014-2015 ஆம் ஆண்டில் ரூ.2,800 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. I.R.C.37 - Indian Road Congress கோவையிலே கடந்த ஆண்டு ஒரு மாநாட்டை நடத்தியது. அதில் 2001 ஆம் ஆண்டிலே அவர்கள் ஒரு டிசைனை வெளியிட்டார்கள். அதற்கு பிறகு 10 ஆண்டுகளுக்குப் பிறகு 2012 ஆம் ஆண்டிலே, சென்ற ஆண்டு அங்கே மாநாட்டை நடத்தி, அதிலே ஒரு ரோடு டிசைனை வெளியிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையிலே புதிய தொழில்நுட்பம்மூலம் கட்டுமானத்தில் தார்ச் செலவை எப்படிக் குறைப்பது, பழுதடைந்த சாலைகளை மறுசுழற்சிமூலம் எப்படிச் சீரமைப்பது, பழைய ஜல்லிகளை அப்படியே பயன்படுத்தலாமா, சாலை அமைக்கும்பொழுது இயற்கை வளங்களை எப்படிப் பாதுகாப்பது என்கின்ற வழிகாட்டு நெறிமுறைகளையும், கட்டுமானம், அகலப்படுத்துதல் போன்ற வழிமுறைகளையும் அம்மாநாடு விளக்கியுள்ளது. I.R.C.37 வழிகாட்டுதலின்படி கர்நாடகா, புதுவை போன்ற மாநிலங்களில் Schedule of rates மாற்றி அமைக்கப்பட்டுள்ளதால், இங்கு அதுபோன்ற வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றதா? அதேபோன்று, தமிழகத்தில் 1954 ஆம் ஆண்டில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

[2014 பிப்ரவரி 17

**திரு. எல். வெங்கடேசன்:** நான் பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு உறுப்பினர், நான் உங்களுக்குப் பதில் சொல்ல வேண்டுமல்லவா? (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில கருத்துகளை இங்கே சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். தமிழகத்திலே தரமான சாலைகளை அமைப்பதற்குத்தான் மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நெடுஞ்சாலைத் துறை சார்பாக பொறியியல் கல்லூரிகளைத் துவங்குவதற்கு ஆணையிட்டு, அந்தப் பணிகள் தொடங்க இருக்கின்றன. அதுமட்டுமல்ல, பொறியாளர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காக தனியாக ஒரு கல்லூரியை இந்தியாவிலேயே இரண்டாவதாக ஒரு கல்லூரியை அமைக்க இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இன்றைக்கு சர்வதேசத் தரத்திற்கு ஏற்றவாறு சாலைப் பணிகளை மேற்கொள்வதற்காகத்தான் இந்தக் கல்லூரிகள் அமைக்கப்படுகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** அதேபோன்று, H.R.S. இங்கே இருக்கின்றது. 1954 ஆம் ஆண்டிலே பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. அந்த H.R.S.-லே Ph.D. செய்யலாம் என 5,000 ரூபாய் பணம் செலுத்தி அண்ணா பல்கலைக்கழகத்திலே Renewal செய்யப்பட்டிருக்கிறது, அரசாணை எண் 183, 11-11-2013-லே அவர்கள் அந்தக் கட்டணத்தைச் செலுத்தி புதுப்பித்திருக்கிறார்கள். அதனடிப்படையிலே, H.R.S., Highways Research Station - என்னென்ன ஆராய்ச்சிகளைச் செய்திருக்கின்றது? அந்த ஆராய்ச்சிகளின் வழியாக என்னென்ன தொழில்நுட்பங்களை நெடுஞ்சாலைத் துறையில் புகுத்தியிருக்கிறது என்பதை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும்.

முற்பகல் 11-35

அதனடிப்படையிலே H.R.S., Highway Research Station-ல் புதிய தொழில்நுட்பங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். அப்படிக் கண்டுபிடித்த தொழில்நுட்பங்களை நெடுஞ்சாலைத் துறை கையாண்டு, தரத்தை அதிகமாக்கவேண்டும்; அதேசமயத்தில் கட்டுமானத்திற்கு ஆகின்ற செலவைக் குறைத்திருக்கவேண்டும். (மணியடிக்கப்பெற்றது)



2014 பிப்ரவரி 17] [திரு. எல். வெங்கடேசன்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறையில் தரம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது என்று கேட்டிருக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறையில் சாலை மற்றும் பாலப் பணிகள் தரமாக நடைபெற தரக் கட்டுப்பாட்டு அலகுகளின்மூலம் பணிகளின் தரம் கீழ்க்கண்ட முறையில் உறுதி செய்யப்படுகின்றது:

தார்க் கலவை, தார்க் கலவையில் கலக்கப்படும் சரளைக் கற்கள், தார்க் கலவை சரியான வெப்பத்தில் பரப்பப்படுகின்றதா என்பதை உறுதி செய்தல், சாலையின் அமைப்பில் ஒவ்வொரு அடுக்குகளின் கனம் மற்றும் அடர்த்தி ஆகியவற்றைத் தரக் கட்டுப்பாடு அலுவலர்கள் உறுதி செய்கின்றனர். பாலப் பணிகளின் தரத்தை ஆய்வு செய்தல், பாலப் பணிகளில் உபயோகிக்கப்படும் மூலப் பொருட்களின் தரம், கான்கிரீட் கலவையின் உறுதித் தன்மை மற்றும் 28 ஆம் நாளில் அடையும் வலுத் தன்மை மற்றும் முடிக்கப்பட்ட பாலத்தின் கட்டுமானத்தை உறுதி செய்தல் ஆகியவை தரக் கட்டுப்பாடு அலுவலர்களால் உறுதி செய்யப்படுகின்றன. இப்படிப்பட்ட பணிகள்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட H.R.S., மூலமாகச் செய்யப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், ஒரு நிமிடத்தில் உரையை நிறைவு செய்யுங்கள். உங்கள் கட்சியைச் சார்ந்த இன்னொரு உறுப்பினர் பேச வேண்டும். அதோடுமட்டுமல்லாமல் மேலும் 8 உறுப்பினர்களைப் பேச நான் அனுமதிக்க வேண்டும்.

[2014 பிப்ரவரி 17

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைச் சார்ந்த இன்னோர் உறுப்பினர் பேச வேண்டும். எனக்கு இன்னும் 10 நிமிடம் ஒதுக்கிக் கொடுத்தால் போதும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை நிறைவு செய்யுங்கள். இன்னும் 8 உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது. உங்கள் கட்சியின் இன்னோர் உறுப்பினரும் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மாணவ, மாணவிகள் உயர் கல்வி பயில இந்த அரசு தனியார் கல்லூரிகளுக்கு நிதியை ஒதுக்கியிருக்கிறது. இந்த ஆண்டு கூட ரூ.671 கோடி நிதியினை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், நீங்கள் அரசாணை பிறப்பித்த பிறகு, 2012-2013 மற்றும் 2013-2014 ஆண்டுகளிலும், நடப்பாண்டு வரையிலே பல கல்லூரிகளுக்கு அந்த உயர் கல்விக்கான உதவித் தொகை சென்றடையவில்லை. அதனால் கல்லூரிகளின் நிருவாகங்கள் அந்த ஆதி திராவிட மாணவ, மாணவிகளை நெருக்குகிறார்கள். 'எங்களுக்கு அரசாங்கத்திலிருந்து பணம் கிடைக்கவில்லை'. அதனால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே +2-க்குக் கீழே படிக்கும் மாணவர்களுக்குத்தான் இந்த உதவித் திட்டம் வழங்கப்பட்டு வந்தது. இந்தியாவிலேயே முதன்முதலாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் உயர் கல்வி படிக்கக்கூடிய மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனை Post Matric System Scholarship என்று சொல்கிறோம். அதாவது, அரசுக் கல்லூரிகளுக்கு படிக்க வரும் மாணவர்களுக்குத்தான் முதலில் அந்தச் சலுகை வழங்கப்பட்டது. ஆனால், தனியார் கல்லூரிகளில் படிக்கக்கூடிய, ஆதி திராவிட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவர்களுக்குக்கூட உயர் கல்விக்கானக் கட்டணத்தை முழுவதும் அரசே ஏற்கிற ஒரு திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முதலாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி



2014 பிப்ரவரி 17] [திரு. பி. பழனியப்பன்]

அம்மா அவர்கள்தான் கொண்டுவந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டம் ஆதி திராவிட நலத் துறையின் மூலமாக, அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர் மூலமாக மாணவர்கள் குறித்து கணக்கெடுக்கப்பட்டு, அந்தக் விவரங்கள் எல்லாம் அந்தக் கல்லூரிகளில், எத்தனை மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்பது குறித்த விவரங்கள் வந்த பிறகு, வைப்பு நிதியாக வைத்து அந்தந்தக் கல்லூரிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவையில்லாமல் தவறான குற்றச்சாட்டை சுமத்துகிறார்கள். அப்படி யாருக்கேனும் அந்த உயர் கல்வி உதவித் தொகை கிடைக்கவில்லை என்று சொன்னால், எந்தக் கல்லூரியில், எந்த மாணவருக்கு இந்தத் திட்டம் போய்ச் சேரவில்லை என்பதை ஆதாரத்தோடு குறிப்பிட்டால், அதற்கு அரசு தேவையான நடவடிக்கையை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், ஆதாரம் இல்லாமல் பேசாதீர்கள். உங்களுடைய உரையை நிறைவு செய்யுங்கள். நீங்கள் ஆதாரம் கொடுக்கவில்லை.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா கல்லூரிகளுக்கும் ஆதி திராவிட மாணவர்களுக்கு சென்றடைய வேண்டிய உயர் கல்விக்கான உதவித் தொகை சென்றடைந்துவிட்டது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இந்த அவையிலே உறுதியளிக்கமுடியுமா? உறுதியாகக் கூற முடியுமா? இதுவரையிலே 100 சதவிகிதம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்விக்கான உதவித் தொகை எல்லாக் கல்லூரிகளுக்கும் சென்றடைய வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கம். ஒரு சில கல்லூரிகளில் அந்த மாணவர் சேர்க்கையின் விவரங்கள், எத்தனை பேர் சேர்ந்திருக்கிறார்கள்

[திரு. பி.•பழனியப்பன்] [2014 பிப்ரவரி 17

என்பது குறித்த குறிப்புகள், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மாவட்ட ஆதி திராவிட நல அலுவலருக்கும் வராமல் இருக்கலாம். அந்தக் கல்லூரிகளும், அதுபோல் வராமல் இருக்கக்கூடிய கல்லூரிகள், குறிப்பாணைகள் எங்கள் கல்லூரிகளுக்கு வரவில்லை என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அரசு உறுதியாகச் செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், ஒரு நிமிடத்தில் உரையை நிறைவு செய்யுங்கள். உங்கள் கட்சியைச் சார்ந்த இன்னொரு உறுப்பினர் பேச வேண்டும். நீங்கள் பேசவேண்டிய மீதி உரையை அவரிடம் கொடுத்துப் பேசச் சொல்லுங்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் பெயரை ஏன் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள்? மாண்புமிகு பேரவைத் தலைவர் நீங்கள் இருக்கிறீர்கள். அங்கே ஏன் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்களுடைய உரையைப் பேசி முடியுங்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** தொழிலைப் பொறுத்தவரையில், ரூபாய். . . (குறுக்கீடு) சரி, நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். சீக்கிரம் உங்களுடைய உரையை முடியுங்கள்.

முற்பகல் *11-40*

**திரு. எல். வெங்கடேசன்:** கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு உடனடியாக அந்த உதவித் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் நமது மாநிலத்தில் தொழில் வளத்தையும், கட்டமைப்பையும் மேலும் ஊக்குவிக்க. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



2014 பிப்ரவரி 17]

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழங்கிய தொகையை மீண்டும், மீண்டும் வழங்கவில்லை, வழங்க வேண்டுமென்று திரும்பத் திரும்ப கேட்பது முற்றிலும் தவறானது. ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். எந்தெந்தக் கல்லூரிகளில் உதவித் தொகை சேர வேண்டுமென்ற குறிப்புகள் அரசுக்கு, அதாவது மாவட்ட அளவிலான ஆதி திராவிடர் நலத் துறைக்கு வருமேயானால், அதன்மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்ற தவறான செய்தி, நம்முடைய மாநிலத்தில் எந்த மாவட்டத்திலும் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், உரையை முடியுங்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் நமது மாநிலத்தில் தொழில் வளத்தையும், கட்டமைப்பையும் மேலும் ஊக்குவிக்க சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையில் நடத்த *100* கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. *15-5-2013*இல் C.A.G. கொடுத்த அறிக்கையில், 'TIDCOமூலம் *12* சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்க வேண்டும். ஆனால், இதுவரை நான்கு பொருளாதார மண்டலங்களை மட்டுமே TIDCO உருவாக்கியிருக்கிறது. அதிலும்கூட, இரண்டு பொருளாதார மண்டலங்களிலே அத்தியாவசிய உள்கட்டமைப்பே இல்லை' என்ற குற்றச்சாட்டையும் CAG முன்வைத்திருக்கிறார். அப்படிப்பட்ட TIDCO-வை வைத்துக்கொண்டு நீங்கள், 'மேலும் நாங்கள் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்துவோம், தொழில் வளத்தைப் பெருக்குவோம்' என்று சொன்னால் எந்தவிதத்திலே அது சாத்தியம் என்று தெரியவில்லை. அதேபோன்று, *2011*-லே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் *12* சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் நான்கிற்கு ஒப்புதல் வழங்கி, வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகச் சொல்லியிருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலிலே

[திரு. பி. தங்கமணி] [2014 பிப்ரவரி 17

நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பது மத்திய அரசு அறிவிக்க வேண்டிய அறிவிப்பு. எந்தெந்த அறிவிப்பை அறிவிக்கின்றார்களோ அதற்குப் பின்னால், அதனுடன் TIDCO இணைந்து அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும். MAT என்று சொல்லக்கூடிய Minimum Alternate Tax கொண்டுவந்ததற்குப் பின்னால், அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்திலே தொழில் தொடங்க தொழில் முனைவோர்கள் முன்வருவதில்லை. அதனால் அந்தப் பணிகள், அதாவது ஏற்கெனவே தொழில் முனைவோர் தொடங்கியதெல்லாம், இப்போது அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் MAT கொண்டு வந்ததற்கு பின்னால், தொழில்கள் சிறிது சுணக்கமாகிவிட்ட காரணத்தினால், அவர்களெல்லாம் 'எங்களுக்கு அது வேண்டாம், பொதுவாகவே நாங்கள் தொழில் தொடங்குகின்றோம். சிறப்புப் பொருளாதார மண்டலம் வேண்டாம்' என்று பல பேர் மத்திய அரசிலே விண்ணப்பித்திருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் இப்போது நிற்கின்றதேயொழிய, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்துவதற்கும், இதற்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குத் தெரியவில்லை. எதற்காக அதைக் கேட்கின்றார் என்றும் தெரியவில்லை. தொழில் முனைவோர் மாநாடு என்பது, பெரிய பெரிய தொழில் நிறுவனங்கள், அது வெளி நாடுகளிலிருந்து வருவதாக இருந்தாலும் சரி, உள் நாட்டிலிருந்து வருவதாக இருந்தாலும் சரி, அதற்கென ஒரு மாநாடு அமைத்து, அந்த மாநாட்டின் வாயிலாக யார், யார் என்னென்ன தொழில்கள் துவங்குகிறார்களோ, அவர்களுக்குத் தேவையான இடங்கள், தேவையான தண்ணீர் வசதியைக் கொடுப்பதுதான் அந்த மாநாட்டினுடைய நோக்கம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். வெங்கடேசன், புதிய சப்ஜெக்ட்டுக்கு போகாதீர்கள். நன்றி சொல்லி முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து அரை மணி நேரம் ஆகிவிட்டது.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவதற்கு காரணம் இருக்கிறது. அதாவது, 2011 இல் 26,625 கோடி ரூபாய் அளவிற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு, 10,660 கோடி ரூபாய் அளவிலான



2014 பிப்ரவரி 17] [திரு. எல். வெங்கடேசன்]

முதலீடுகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதிநிலை அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டுள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட அளவிலே 40 சதவிகிதம்தான். எப்போது இந்த அரசு முழுவதுமாக 100 சதவிகிதம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டவுடன் உடனடியாக அனைத்து முதலீடுகளும் வராது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுவது என்பது ஐந்தாண்டுகள் முதல் ஏழாண்டுகள் வரை அந்த முதலீடுகளைச் செய்யலாம் என்ற கால அளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஏழாண்டு காலத்திற்குள் 26,625 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் வரவேண்டுமென்ற நிலையில், இப்போது பத்தாயிரம் கோடி, இப்படி உடனடியாக இரண்டாண்டு காலத்திலேயே வந்திருக்கிறது என்று சொன்னால், அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராட்டுவதை விட்டுவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) பத்தாயிரம் கோடி, அதாவது 40 சதவிகிதம்தான் வந்திருக்கிறது. மீதி 60 சதவிகிதம் எப்போது வருமென்று கேட்டிருக்கிறார். புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நீங்கள் முதலில் முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். வெங்கடேசன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நேரம் இல்லை.

**திரு. எல். வெங்கடேசன்:** அமைச்சர் சொல்கிற மாதிரி எல்லாவற்றையும் புரிந்துகொண்டுதான் பேசுகிறோம்.

அடுத்ததாக, கூவம் நதியை சுத்தப்படுத்துவதற்கான நிதியை ஒதுக்குவதற்கான, (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள். (குறுக்கீடு) இன்னும் உங்களுடைய கட்சி உறுப்பினர் ஒருவர் பேச வேண்டும். நீங்களே அரைமணி நேரத்திற்குமேல் பேசிவிட்டீர்கள். இதற்குமேல் பேச முடியாது.

[பேரவைத் தலைவர்] [2014 பிப்ரவரி 17

உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.

**திரு. க. கோபால்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். வெங்கடேசன், அனுமதியில்லை. நீங்கள் உட்காருங்கள். பின்னர் உங்கள் கட்சி உறுப்பினர் பேசுவார். நீங்கள் பேச வேண்டியதை அவரிடத்தில் கொடுங்கள், அவர் பேசட்டும். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி.

**திரு. க. கோபால்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். வெங்கடேசன், அனுமதி இல்லாமல் நீங்கள் பேசக்கூடாது. நீங்கள் உட்காருங்கள். அனுமதி இல்லை, உட்காருங்கள். உங்கள் உறுப்பினர் பேசுவார், அவரிடத்தில் கொடுங்கள், பேசுவார். கடைசியாக உங்கள் உறுப்பினர் பேசுவார். அவரிடத்தில் கொடுங்கள். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புத் தாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்பெல்லாம் கிடையாது. திரு. க. கோபால்சாமி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

முற்பகல் 11-45

**திரு. க. கோபால்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலாய் வேர்விட்டு ஆயிரம் ஆயிரம் விழுதுகள் பரப்பி, கிளை விரித்து, இலை செழித்து பூத்துக் குலுங்கும் கழகம் என்னும் உலகப் பேரியக்கத்தை, நாளைய பாரதத்தை வழிநடத்தும் நல்வாய்ப்பை நோக்கி நடத்திச் செல்லும் அன்னை ஓர் ஆலயமே! ஆண்டாளின் மறு வடிவே! (மேசையைத் தட்டும் ஒலி) அரங்கத்துப் பெருமானின் ஆசிகொண்டு, அன்னைத் திருநாட்டை ஆளக் காத்திருக்கும் எங்கள் பதினாறாம் பாரதமே! கடல்சூழ் குமரி முதல் கார் தங்கு வடமலை வரை வளம் கொண்ட நாட்டுக்கு வறுமை தந்த அரசியலை சுத்திகரிப்பு செய்திடவே சூளுரைக்கும்



2014 பிப்ரவரி 17] [திரு. க. கோபால்சாமி]

சுடரொளியே! கடைக்கோடி தமிழ் மண்ணில் அமர்ந்திருந்து கார்கில் ஊடுருவலைக் கண்டறிந்து எச்சரித்த அரிமா பார்வையே! அறிவுக் கோர்வையே! நாஜிக்களையே மிஞ்சிய 2-ஜிக்களை மாஜிக்கள் ஆக்கிய மதிநுட்ப மாதரசே! (மேசையைத் தட்டும் ஒலி) தன்னலம் எண்ண மறந்து, தனி நலம் பேணத் துறந்து, வான்புகழ் தமிழருக்கே என் வாழ்வெல்லாம் அர்ப்பணம் என்று முத்தமிழர் வாழ்வுக்கு முக்காலம் உழைக்கின்ற முழுமதியே! தூய தமிழ் தொண்டுக்கே துடிக்கின்ற இதயமே! நற்றமிழர் வாழ்வுக்கே நடைபோடும் வெற்றித் தேரே! வாய்ப்பந்தல் போட்டே வாழுகின்ற கும்பலும், போர்ப்பந்தர் காந்தியின் புகழ் கெடுக்கும் ஸ்பெக்ட்ரம் கூட்டமும், அந்தரங்கத் திட்டமிட்டு அலைக்கற்றைக் கூட்டு வைத்து, தாய் ஆளும் தமிழகத்திற்குத் தடைகள் போட்டு மறித்தாலும், மாற்றான்தாய் மனப்பான்மை கொண்டு மலையளவு இடையூறுகளைத் திணித்தாலும், மதிகொண்டு போராடி, மக்கள் துணை கொண்டு விடை தேடி, ஆண்மைத் திறம் கொண்டும், அறிவாற்றல் தவம் கொண்டும், அகிலமே வியந்திட ஆட்சித் தேரைச் செலுத்துகின்ற கோடி சிங்கத்தின் தைரியம் குடியிருக்கும் வீரத் திருமகளே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அன்னையே! தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசின் நான்காவது நிதிநிலை அறிக்கை சட்டமன்றத்திலே 13-2-2014 அன்று தாக்கல் செய்யப்பட்டு, நிதிநிலை அறிக்கையைப் பற்றிய விவாதங்கள் சட்டமன்றத்திலே தொடங்குமுன் நாடெங்குமுள்ள நடுநிலையாளர்கள், தொலைநோக்குப் பார்வை கொண்டவர்கள், மாற்றுச் சிந்தனையுடையவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை மனதாரப் பாராட்டி வருகிறார்கள்.

1,62,000 கோடி ரூபாய் வரவு-செலவுத் திட்டத்தினை, 289.36 கோடி ரூபாய் வருவாய் உபரியுடன், மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகளாக வருவாய் உபரி உள்ள நிதிநிலை அறிக்கையை மக்களுக்கு வழங்கி வருகிறது. 2011-2012 ஆம் நிதியாண்டில் 1,364 கோடி ரூபாய் வருவாய் உபரி; 2012-2013 ஆம் நிதியாண்டில் 1,760 கோடி ரூபாய் வருவாய் உபரி; 2013-2014 ஆம் நிதியாண்டில் 244 கோடி ரூபாய் வருவாய் உபரி.

[திரு. க. கோபால்சாமி] [2014 பிப்ரவரி 17

“காக்கை கரவா கரைந்துஉண்ணும்; ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள”

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கேற்ப, படைக்கும் அன்னத்தை பரிவோடு குழந்தைகளுக்கு சமமாகப் பங்கிட்டு, ஊட்டி மகிழ்ந்து, பொருளாதாரக் கயிற்றில் லாவகமாக நடந்து, சாகசங்கள் புரியும் திறமை அம்மாவுக்குத்தான் உண்டு என்பதனை எங்கள் தமிழ் உலகம் வணங்கும் தாயும் தனது நிதிநிலை அறிக்கையின்வாயிலாக நிரூபித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பான இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்களும், திரு. மு.க. ஸ்டாலின் அவர்களும் “இது ஒரு பஞ்சுமிட்டாய் பட்ஜெட்” என்றும், “தனி நபர் கடன் கூடிவிட்டது” என்றும், “நிதி மேலாண்மை கெட்டுவிட்டது” என்றும் குறை கூறியுள்ளார்கள். எதிர்க்கட்சி இருக்கைக்கும் தகுதியற்ற கூட்டம் என, தமிழகத்து மக்களால் குப்பையில் தூக்கி வீசப்பட்ட கூட்டத்திற்கு, தக்க பதிலை இந்த நாட்டின் தலையாய அமைப்பான, நாணயத்தையே கையாளும் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவின் ஆய்வறிக்கையை இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

Reserve Bank of India 2013-2014 ஆம் நிதியாண்டில் இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்களுடைய நிதி மேலாண்மையை ஆய்வு செய்து, அந்த ஆய்வறிக்கையை அனைத்து மாநிலங்களுக்கும் அனுப்பியுள்ளது.

ஒரு மாநிலத்தினுடைய நிதி மேலாண்மை நன்றாக இருக்க வேண்டுமென்றால், மாநிலத்தினுடைய மொத்த உற்பத்தி மதிப்பில், அதாவது, Tax to G.S.D.P.ratio-ல், பெறுகின்ற வரி வருவாயை வைத்து கணக்கிட வேண்டும். அப்படி கணக்கிட்டு, Reserve Bank of India மொத்த உற்பத்தி மதிப்பில் அதிக வரி வருவாய் பெறுகின்ற மாநிலங்களைப் பட்டியலிட்டுள்ளது. அதிலே தமிழ்நாடு 10.3 சதவிகிதத்துடன் முதல் மாநிலமாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) குஜராத் 7.5 சதவிகிதத்துடனும், மகாராஷ்டிரா 7 சதவிகிதத்துடனும், உத்தரப்பிரதேசம் 8.4 சதவிகிதத்துடனும், ஆந்திரா 8.4 சதவிகிதம் என்ற அளவில் இருக்கின்றன. இதிலே அகில இந்திய அளவில் மொத்த வரி வசூல் 7.8 சதவிகிதம் என்ற அளவில் இருக்கிறது.



2014 பிப்ரவரி 17] [திரு. க. கோபால்சாமி]

இப்படி நிதி மேலாண்மையில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு விளங்குகிறது என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) Reserve Bank of India தனது ஆய்வு அறிக்கையிலே தெளிவாக எடுத்துச் சொல்லியுள்ளது.

முற்பகல் 11-50

அதேபோல, Reserve Bank of India 2013-2014 ஆம் நிதியாண்டிலே, ஒவ்வொரு மாநிலத்தினுடைய மொத்த நிலுவைக் கடன் அளவை ஆய்வு செய்து, அனைத்து மாநிலங்களுக்கும் அந்த ஆய்வறிக்கையை அனுப்பியுள்ளது. ஒரு மாநிலம் தனது மொத்த உற்பத்தி மதிப்பில், அதாவது G.S.D.P.-ல் 25 சதவிகிதம் வரை நிலுவைக் கடனாக வைத்துக்கொள்ளலாம் என்பது R.B.I.-யினுடைய விதி. தமிழ்நாடு 20 சதவிகிதமும், குஜராத் 23.2 சதவிகிதமும், ஆந்திரா 22.4 சதவிகிதமும், உத்தரப்பிரதேசம் 33.2 சதவிகிதமும் வைத்துள்ளன. இதிலே முக்கியமாக கவனிக்க வேண்டியது எதுவென்றால், 2009-2010 ஆம் நிதியாண்டில் R.B.I.-ன் ஆய்வறிக்கையில், தமிழகத்தினுடைய மொத்த நிலுவைக் கடன் 21.2 சதவிகிதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள், தன்னுடைய கடுமையான உழைப்பால், விடா முயற்சியால் இந்த மூன்று ஆண்டுகளிலே அதை 20 சதவிகிதமாகக் குறைத்துள்ளார்.

அதேபோல, இன்னோர் ஆய்வைப் பற்றி Reserve Bank of India தனது அறிக்கையில் சொல்லியிருக்கிறது. ஒரு மாநிலம் பெறுகின்ற வரி வருவாயிலே, அதாவது மொத்த வரி வருவாயிலே அதிகமான நிதியை வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவிடும் மாநிலங்கள் எதுவென்று அது கணக்கிட்டுள்ளது. அதிலே முதல் இடத்திலே தமிழ்நாடு 10.1 சதவிகிதத்துடனும் (மேசையைத் தட்டும் ஒலி) குஜராத் 9.3 சதவிகிதத்துடன் இரண்டாவது இடத்திலும், மகாராஷ்டிரா 7.9 சதவிகிதத்துடன் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

இப்படி மாநிலங்களினுடைய செயல்பாட்டை மதிப்பீடு செய்திருக்கின்ற ரிசர்வ் வங்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவார்ந்த வழிநடத்துதலில், அன்னைத் தமிழகம் பீடுநடை போடுகிறது என்பதனைக் குறிப்பிட்டு பெருமை சேர்த்திருக்கின்ற இந்த வேளையிலே, இரண்டு பீடைகள், இதை ‘பஞ்சு மிட்டாய் பட்ஜெட்’ என்று நஞ்சு கக்குகின்றன. அலைகற்றையிலே

[திரு. க. கோபால்சாமி] [2014 பிப்ரவரி 17

கொள்ளையடித்த பணத்திற்கு, 'நீங்கள் பால்வாவிடம் கடன் வாங்கினோம், அதையும் வட்டிக்கு வாங்கினோம், வட்டியோடு 31 கோடி ரூபாய் சேர்த்து திருப்பியும் கொடுத்து விட்டோம்' என்றெல்லாம் திருட்டுக் கணக்கை எழுதிய விவகாரம், இன்று உலகமெங்கும், இந்திய அரசியலில் முதல் முறையாக என்று எண்ணும்வகையில், ஊரெங்கும் ஒளிபரப்பாகி, அந்த டேப்பு உங்களுக்கு ஆப்பு வைத்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் குடும்ப மானம் சந்தி சிரிக்கிறது. அப்படி இருக்கும்பொழுது, பஞ்சு பஞ்சாகப் பறந்து கொண்டிருப்பது கருணாநிதி குடும்பத்தினுடைய கௌரவம்தான் என்பதை எடுத்துச் சொல்லவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் இந்தச் சிறப்பான நிதிநிலை அறிக்கையில், திட்ட ஒதுக்கீடுகளுக்காக (Plan Allocations) 42,185 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த ஒதுக்கீட்டில் 25 சதவிகிதமாகும். அதேபோல, சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக 47,968 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த ஒதுக்கீட்டில் 32 சதவிகிதமாகும். அதேபோல், பள்ளிக் கல்வித் துறைக்கு 17,731.71 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த ஒதுக்கீட்டில் 11 சதவிகிதமாகும். மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 7,005.02 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த ஒதுக்கீட்டில் 4.5 சதவிகிதமாகும். இப்படி இல்லாமையைத் தீர்க்க, கல்லாமையை மாய்க்க, வேலையில்லாமைக்கு விடை கொடுக்க, சமூக நீதியை சகலருக்கும் சமத்துவமாய் கொண்டு பகிர, அறிவார்ந்த ஒரு நிதிநிலை அறிக்கையை, எங்கள் நூறறிவு தாய் படைத்திருப்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வேளையில் அரசியல் மாச்சரியங்களைக் கடந்து அனைவரும் வரவேற்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட் என்றால் என்னவென்றே தெரியாத ஒரு படிக்காத போதை — படிக்காத மேதையில்லை தலைவரே — படிக்காத போதை, ஒன்று கேள்வி கேட்பவரின் முகத்திலேயே முழிக்க பயந்து கொண்டு பின் வழியே ஓடுவார், அப்படியும் விரட்டிச் சென்று பத்திரிகையாளர்கள் கேள்வி கேட்டுவிட்டால், பதில் சொல்லத் தெரியாத இயலாமையை மறைப்பதற்காக, பத்திரிகையாளர்கள்மீது அடிக்கப் பாய்வார். அப்படிப்பட்ட ஒரு ஆல்கஹால் தலைவன், நம் அன்னை திருமகளின் அறிவார்ந்த நிதிநிலை குறித்து



2014 பிப்ரவரி 17] [திரு. க. கோபால்சாமி]

சொல்லுகிறார், பட்ஜெட்டிலே ஒன்றுமே இல்லையென்று. பட்ஜெட் குறித்து விமர்சிப்பதற்கு உங்கள் மண்டையில்தான் ஒன்றும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) சாவு வீட்டில் போய், 'ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்ற இரண்டு வரி பேசத் தெரியாத உங்களுக்கு, வரி இல்லாத நிதிநிலையையும் தந்து, வாரித் தருவதில் வழக்கம்போல் குறைவில்லை என்று வரலாறு படைத்திருக்கும் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் பட்ஜெட் குறித்து விமர்சிப்பதற்கு அருகதை இல்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-55*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் யார் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அவர் யார் பெயரையும் சொல்லவில்லையே? (குறுக்கீடுகள்)

**திரு. க. கோபால்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் யார் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) இத்தனை பேர் எழுந்து நின்றால் எப்படிச் சபையை நடத்துவது? (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணை தலைவர் திரு. மோகன்ராஜ் அவர்கள், பேசுங்கள். மற்ற தே.மு.தி.க. உறுப்பினர்கள், அவரவர்களுடைய இருக்கைகளில் அமருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசுங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசுங்கள். (குறுக்கீடு) தேவைப்பட்டால் அதை ரெக்கார்டு செய்வேன். இல்லையென்றால் நீக்குவேன். (குறுக்கீடுகள்) அது தேவையில்லை. உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. வெங்கடேசன், உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2014 பிப்ரவரி 17

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, பட்ஜெட்மீது பேசி முடியுங்கள்.

**திரு. க. கோபால்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய முற்போக்கான சிந்தனைகள் முதன்முதலில் அவர் இந்திய நாடாளுமன்ற மேலவையில் 23-4-1984 அன்று உரையாற்றியபோதே மிகத் தெளிவாக வெளிப்பட்டது. யாருடைய பிரதிநிதியாக இந்த மக்கள் மன்றத்திற்கு நான் வந்துள்ளேன் என்று சொன்னார். "I have come here as the representative of the weaker sections of our society, the toiling masses, the crores of humble workers, farmers, poor agricultural labourers and women to give oral manifestations to their feelings, aspirations and legitimate desires and make them known to the rest of the country" அதாவது, சமூகத்தின் அடித்தட்டு மக்கள், பாட்டாளி வர்க்கத்தினர், கோடிக்கணக்கான சாதாரண தொழிலாளர்கள், விவசாயிகள், வறிய விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பெண்களின் எண்ணங்களையும், பெரும் எதிர்பார்ப்புகளையும், நியாயமான உள்ளக்கிடக்கைகளையும் எனது உரையின்மூலம் வெளிப்படுத்தவும், நாட்டின் பிற பகுதிகளுக்கு எடுத்து இயம்பவும் அவர்களின் பிரதிநிதியாக நான் இங்கு வந்துள்ளேன் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த நேரத்திலே சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் காவல் துறை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய கரங்களில் செங்கோல் அமர்ந்து இருக்கின்ற காலத்தில் எல்லாம் தமிழகத்தில் அமைதிப் பயிர் வளர்ந்து வருகிறது. அதற்குக் காரணம், அமைதியைக் குலைக்கின்ற தீய சக்திகளை ஒடுக்குகின்ற காவல் துறை நம் தாயினுடைய ஆட்சியில் மிடுக்கோடும், விழிப்போடும் இருப்பதுதான். சட்டம்-ஒழுங்கு என்றால், அதில் நம் அம்மா சமரசம் செய்துகொள்ளமாட்டார் என்பதை உலகமே அறியும். அதனால்தான், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2014 பிப்ரவரி 17] [திரு. க. கோபால்சாமி]

காலத்தில், நில அபகரிப்புகளே கிடையாது; ஆக்கிரமிப்புகளே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. மு.க. ஸ்டாலின்கூட, அவரது அப்பா முதலமைச்சராக இருந்தபோது மதுரை பக்கமே செல்லவில்லை. இப்பொழுது மாதம் ஒரு முறை மதுரை சென்று வருகின்றார். போவது மட்டுமல்ல, அங்கு நடைப் பயிற்சியும் செய்கின்றார் என்று பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. அந்த அளவிற்கு தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. நிலைமைகள் இப்படி இருக்க, ஒரு புரட்டொலி பத்திரிகையில், 'சட்டம்-ஒழுங்கு சரியில்லை' என்று தினசரி கட்டம் கட்டி, குழாயடி சண்டையையும், கணவன், மனைவி மோதல்களையும், இதைவிடக் கொடுமை என்னவென்றால், 'வேலூரில் மின்னல் தாக்கி இருவர் பலி' என்று ஒரு செய்தியைப் போட்டுக்கொண்டு, 'பாருங்கள், சட்டம்-ஒழுங்கு சரியில்லை' என்று சொல்கிறது. மின்னலை, காவல் துறையின் கட்டுப்பாட்டுக்குள் எப்பொழுது கருணாநிதி வைத்திருந்தார் என்பதை அந்தப் பத்திரிகையில் விளக்கினால் தெளிவாக இருக்கும். காவல் துறையை நவீனப்படுத்துவதற்கும், காவலர்களுக்கான வசதியை மேம்படுத்துவதற்கும், இந்த நிதிநிலை அறிக்கையில் 5,186.20 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள்.

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதி சமயமற்ற சமத்துவத்தை, சமூக நீதியை நிலைநாட்டிட, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து, உலகத்தில் சமநிலையை உருவாக்கும் ஒரே கருவி கல்விதான் என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களும், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களும் அன்று போதித்ததை, இன்று தமிழ் மண்ணில் சாதித்திருப்பது நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்தவொரு மாநிலமும் இப்படி கல்விக்குத் தலையாய முன்னுரிமை தந்தது கிடையாது. அள்ளி, அள்ளிக் கொடுக்கிறார், அதன்மூலம் உலகத் தரம் வாய்ந்த கல்வியை தமிழகத்திலே ஒவ்வொரு குழந்தையும் பெற வேண்டுமென்று உறுதிகொண்டு உழைக்கிறார். 14 வகையான

[திரு. க. கோபால்சாமி] [2014 பிப்ரவரி 17

உபகரணங்களை மாணவர்களுக்குப் பரிசாகத் தந்து, இடைநிற்றலே இல்லை என்ற புரட்சியை இந்தியாவில் முதல்முதலில் சாதிக்கப்போவதும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலமாகக் கல்விக்கு அதிபதி 'பூவில் வீற்றிருக்கும் கலைமகளா, இல்லை ஈரிலையில் வீற்றிருக்கும் எங்கள் ஈகைத் திருமகளா?' (மேசையைத் தட்டும் ஒலி) என்னும் வரலாற்றுப் பெருமையை எங்கள் அம்மா வடித்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே பள்ளிக் கல்வித் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் 17,731.71 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு ரெட்டைத் தாழ்ப்பாள்' என்பதுபோல, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய விரிவான காப்பீட்டுத் திட்டம் அரசினுடைய பொதுத் துறை நிறுவனமான United India Insurance நிறுவனம் மூலமாக அமலாக்கம் செய்தமையால் மக்களின் காப்பீடும் உறுதி செய்யப்பட்டதோடு, மக்களின் சொத்தாகிய பொதுத் துறை நிறுவனங்களும் வருமானம் கிடைத்து வளர்ச்சியடைந்தன.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக தமிழகத்திலே இதுவரை 5,80,000 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர். அதிலே 2,25,000 பயனாளிகள் அரசு மருத்துவமனைகளிலே சிகிச்சை பெற்று குணமடைந்திருக்கிறார்கள். இத்திட்டத்திற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் செலவழித்தத் தொகை 1,256 கோடி ரூபாய். இதன்மூலம் அரசு மருத்துவமனைகளுக்கு 447 கோடி ரூபாய்க்கும் அதிகமாக வருமானம் கிடைத்துள்ளது.

அதேபோல, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவி திட்டத்தின்கீழ் ரூ.6,000/- ஆக வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகத்தில்தான் ரூ.12,000/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக, முதலமைச்சராகப் பொறுப்பேற்ற மே 16, 2011 ஆம் ஆண்டு முதல் இதுவரை இத்திட்டத்தின்கீழ் 19 இலட்சம் கர்ப்பிணிப் பெண்கள் ரூ.1,708 கோடி அளவிற்குப் பயனடைந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



2014 பிப்ரவரி 17] [திரு. க. கோபால்சாமி]

மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய தலைமையின்கீழ் ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மருத்துவமனைகள்-CeMONC Centres மற்றும் குழந்தைகள் நல சிகிச்சை மையங்கள்—NICUs ஆகியவற்றால் மகப்பேறு கால தாய்-சேய் இறப்பு விகிதங்களில் இந்தியாவிலேயே குறைவான மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது. மகப்பேறு காலத்தில் தாய் இறப்பு விகிதம் இந்திய அளவிலே ஒரு இலட்சம் தாய்மார்களுக்கு 187 என்ற நிலை; தமிழகத்தில் அது ஒரு இலட்சம் பேருக்கு 73 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல, அகில இந்திய அளவிலே சிசு இறப்பு விகிதங்கள் 1,000 குழந்தைகளுக்கு 42 என்ற நிலை; அது தமிழகத்திலே சரி பாதியாக 1,000 குழந்தைகளுக்கு 21 என்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒவ்வொரு துறையிலுமே தன்னுடைய தனிக் கவனத்தை செலுத்தி, நிதிநிலை அறிக்கையை அகில இந்திய அளவில் போற்றுகின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்கள். இந்திய நாடாளுமன்ற மேலவையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்முறையாக உரை நிகழ்த்தியபோது எரிசக்தித் துறையைப் பற்றித்தான் தெளிவான ஓர் உரையை நிகழ்த்தினார்கள். முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக, தன்னுடைய தீர்க்கதரிசனத்தால், ஆழ்ந்த சிந்தனையால், எரிசக்தித் துறையில் செய்ய வேண்டிய முதலீடுகளைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள்.

கல்பாக்கம் அனல் மின் நிலையத்திற்குத் தேவையான கூடுதல் இட வசதியை ஏற்படுத்தித் தருவதற்கு அன்றைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையிலான அரசு தயாராக இருக்கிறது என்று சொன்னார்கள். வளர்ந்து வருகின்ற தமிழகத்திற்குக் கூடுதலாக மின் திட்டங்கள் தேவையென்ற கருத்தை ஆணித்தரமாக பதிய வைத்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, உரையை முடியுங்கள்.

**திரு. க. கோபால்சாமி:** மாண்புமிகு அம்மா அவர்கள் நாடாளுமன்ற மேலவையிலே அன்று இருந்த காங்கிரஸ் தலைமையிலான அரசு இப்பொழுது எப்படி மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்படுகிறதோ, அதேபோல அப்பொழுதும்

[திரு. க. கோபால்சாமி] [2014 பிப்ரவரி 17

செயல்பட்டு தமிழகத்தினுடைய திட்டங்கள் அனைத்தும் முழுமையாக புறக்கணிக்கப்பட்ட அந்த வேளையிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் இதனைத் தொடர்ந்து பல சவால்களைச் சந்தித்து, எதிர்ப்புகளைத் துணிவுடன் எதிர்கொண்டு, தான் தலைமை தாங்கிய இயக்கத்தையும், தமிழகத்தையும், தன்னலமற்ற தொண்டர்களையும் வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்ல தடைக் கற்களை தவிடுபொடியாக்கி, தடுத்தவர்களை வேரோடும், வேரடி மண்ணோடும் சாய்த்து, ஓராயிரம் சந்திரோதயமாய் திராவிட வானில் ஒளி வீசி, 1991-ல் முதல் முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ஐந்தாண்டு காலத்திலே 1,500 மெகா வாட் மின் உற்பத்தித் திறனை தமிழகத்திலே புதிதாக ஏற்படுத்தினார்கள்.

அதேபோல, 2001-2006 இல் இரண்டாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் 2,500 மெகா வாட் மின் உற்பத்தித் திறனை ஏற்படுத்தியிருக்கிறார்கள். 2011-லே மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இந்த 32 மாத கால ஆட்சியிலே 2,500 மெகா வாட் மின் உற்பத்தித் திறனை புதிதாக ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவின் அரசாட்சியைத்தான் இந்திய தேசமே பின்பற்றுகிறது. அம்மா இங்கே சைக்கிள் கொடுத்தால், கர்நாடகத்திலும் கொடுக்கிறார்கள்; பீகாரும் பின்பற்றுகிறது. மாணவர்களுக்கு மடிக் கணினி அம்மா கொடுத்தால், மிகப் பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசமும் பின்பற்றுகிறது. அம்மா உணவகத்தை ஆரம்பிக்க பாலைவனப் பிரதேசத்திலிருந்து அதிகாரிகள் குழு ஆய்வு செய்துவிட்டுப் போகிறது. அம்மா! உங்களுடைய அரசாட்சியைத்தான் இந்திய மாநிலங்களே பின்பற்றுகின்றன. அப்படியென்றால், இந்தியாவின் அரசாட்சி அம்மாவிடம்தானே இருக்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முடிவை இந்திய தேசம் எடுக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதத்தை பாகிஸ்தான் ஒருபோதும் பாராட்டி மகிழாது; பயிர்களைக் களைகள் ஒருபோதும் போற்றிப் புகழாது; களவாணி கும்பலுக்குக் காக்கிச் சீருடையைப் பிடிக்காது; போலீசைப் பாராட்டி திருட்டுக் கும்பல் தீர்மானம் இயற்றாது; அஹிம்சையைப் போற்றி ஆர்.டி.எக்ஸ். வாழ்த்துப் பா இசைக்காது; கண்ணக்கோல் திருடனுக்குக் காவலனைப் பிடிக்காது. அதுபோல, வரியில்லா நிதிநிலை; வாரித் தருவதிலோ குறைவில்லை என்ற எங்கள் வாஞ்சை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் வரியில்லா பட்ஜெட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) அலைக்கற்றைக் கும்பலுக்கு அறவே பிடிக்காது. அதனால்தான் கருணாநிதி கட்சி வெளிநடப்புச் செய்துவிட்டது; கருப்பு கருணாநிதி கட்சியோ வெளி மாநிலத்திற்கே சென்றுவிட்டது. இவ்விரு குடும்ப வெறிக் கூட்டத்தை வரப்போகின்ற நாடாளுமன்றத் தேர்தலோடு இந்திய அரசியலிலிருந்தே வெளியேற்றும் காரியத்தை எங்கள் வீரத் திருமகளின் விழியசைவில், வழிதிசையில் (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றரைக் கோடி தொண்டர் படை சத்தியமாய் செய்து முடிக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



2014 பிப்ரவரி 17] [திரு. க. கோபால்சாமி]

சீனப் பெருஞ்சுவர், தொங்கும் தோட்டம், தாஜ்மஹால், பிரமிடுகள், இப்படி மனிதனால் உருவாக்கப்பட்டவை உலக அதிசயங்கள் ஆனபோது, மனிதரே அதிசயமானது எங்கள் மாதவமாம் அம்மா ஒருவர்தான் என்பதைச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) எளியவன் எனக்கும் இந்த அறிவார்ந்த அவையிலே உரை நிகழ்த்தும் அரிய வாய்ப்பை வழங்கிய தாயின் பொற்பாதத்தில் என் தலைசாய்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பில் அளிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையினை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளால் ஏற்பட்ட பொருளாதார மந்தம் நீடித்து வருகிற நிலையில், மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு உரிய நிதிப் பங்கீட்டையும், மானிய உதவிகளையும் அளிக்க மறுத்து, பழிவாங்கும் போக்கில் செயல்பட்டு வருகிற நிலையிலேயும், புதிய வரிகள் இல்லாமல், ஏற்கெனவே தொடர்ந்துவரும் மக்கள் நலன் சார்ந்துள்ள திட்டங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கியுள்ளதுடன், சில புதிய திட்டங்களையும் அறிவித்துள்ள நிதிநிலை அறிக்கை வரவேற்கத்தக்கதாகும்.

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2014 பிப்ரவரி 17

மத்திய அரசு தனது மொத்த வரி வருவாயில் 30 சதமானத்தை மட்டுமே, அனைத்து மாநிலங்களுக்கும் பிரித்துக் கொடுத்துவிட்டு, மீதமுள்ள 70 சதமான நிதியினைத் தனது பயன்பாட்டுக்கு வைத்துக் கொள்வதால், மாநிலங்கள் போதிய நிதியாதாரமின்றி தவிக்கும் நிலை ஏற்படுகிறது. இதனை மத்திய, மாநில அரசுகளுக்கு முறையே 50 : 50 விழுக்காடு என பகுத்திடும் நிலைமை ஏற்பட நாம் வற்புறுத்த வேண்டிய தேவையிருக்கிறது. 2013-2014 ஆம் ஆண்டில், மத்தியிலுள்ள மன்மோகன் சிங் அரசு, மத்திய வரித் தொகுப்பிலிருந்து மாநில அரசின் பங்குக்கு எதுவும் இதுவரை அளிக்கவில்லை என்பதும், ஏற்கெனவே அளிக்கப்பட்ட 9,300 கோடி ரூபாயையும் இதுவரை அளிக்கவில்லை என்பதும் இந்த நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டபோது, நம்முடைய தமிழக அரசு மத்திய அரசிடம் 19,675 கோடி ரூபாய் நிவாரணம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தது. ஆனால், மத்திய அரசு யானைப் பசிக்கு சோளப்பொறியிட்டதைப்போல, வெறும் 670 கோடி ரூபாயை மட்டும்தான் நிவாரணமாக அளித்தது. அதுமட்டுமல்ல; இப்படி தமிழ்நாட்டைப் பழிவாங்குகிற படலத்தை மத்திய அரசு தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 12-10

குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையில் இன்னொன்றையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்தியாவில் தமிழ்நாட்டில் நடைமுறையில் இருக்கின்ற பயிர் காப்பீட்டுத் திட்டத்தை மத்தியிலே இருக்கின்ற மன்மோகன் சிங் அரசாங்கம் இப்பொழுது பாழ்படுத்திவிட்டது. ஏற்கெனவே இருக்கின்ற திட்டத்தின்படி விவசாயிகள் கட்ட வேண்டிய பிரீமியம் தொகையை 10 முதல் 20 மடங்கு உயர்த்தி இனி யாரும் பயிர் காப்பீடே செய்ய முடியாது என்கிற அளவுக்கு உயர்த்தியிருக்கிறது மத்திய அரசு.

உதாரணமாக உளுந்துக்கு ஒரு எக்டருக்கு பிரீமியம் தொகையாக 541 ரூபாய் கட்ட வேண்டும் என்று இருந்ததை இப்பொழுது மேம்படுத்தப்பட்ட பயிர் காப்பீட்டுத் திட்டம் என்ற பெயரில் கட்ட வேண்டிய பிரீமியம் தொகையினை 5,071 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். ஏற்கெனவே மரவள்ளிக் கிழங்குக்கு ஏக்கருக்கு 10,143 ரூபாய் பிரீமியம் தொகையாகக் கட்டினால் போதும். இதை இப்பொழுது 79,142 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். எந்த மரவள்ளிக் கிழங்கு பயிரிடும் விவசாயியும் இனிமேல் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் என்று சொன்னாலே பயந்து ஓடுகின்ற நிலையை இது ஏற்படுத்தியிருக்கிறது.



2014 பிப்ரவரி 17] [திரு. க. பாலகிருஷ்ணன்]

அதுமட்டுமல்லாமல், இப்படி அடுக்கடுக்கான தாக்குதலை இந்திய நாட்டு விவசாயிகள், தமிழ்நாட்டு விவசாயிகள்மீது தொடுத்திருக்கின்ற அரசு மன்மோகன் சிங் அரசு. தமிழ்நாட்டுக்கு உணவு அளவைக் குறைப்பது, மண்ணெண்ணெய் அளவை வெட்டிக் குறைப்பது, அனைத்திற்கும் மேலாக அரிசிக்கு 12 சதவிகித சேவை வரி விதிப்பதன்மூலம் தமிழ்நாட்டு மக்களுடைய வயிற்றில் அடிக்கின்ற அரசாக மத்திய அரசு இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இப்படி மத்திய அரசு, மன்மோகன் சிங் அரசு தமிழகத்தை, தமிழக மக்களை வஞ்சித்துக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், சிலர் இன்று மத்தியில் இருக்கின்ற மன்மோகன் சிங் அரசுடன் கை குலுக்குகிறார்கள், அவர்களை ஆர கட்டித் தழுவுகிறார்கள். 7 கோடி தமிழ் மக்களைச் சார்ந்த இப்படிப்பட்டவர்கள் செய்யக்கூடிய காரியம் என்பது, ஏழு கோடி தமிழ் மக்களுக்கும் இழைக்கப்படும் துரோகம் என்பதைத் தவிர வேறில்லை என்பதை இங்கே நான் எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மக்கள் விரோத, தமிழக விரோத, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது சொல்லலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். உட்கார்ந்துகொண்டு பேசக்கூடாது. (குறுக்கீடு)

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மன்மோகன் சிங் அரசோடு கூடிக் குலாவுகிறவர்கள் யாராக இருந்தாலும், நடைபெறவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களுக்கெல்லாம் தமிழக மக்கள் முகவரியே இல்லாமல் செய்யப்போகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த கடுமையான நிலைமைகளையெல்லாம் சமாளித்து, திட்டச் செலவுகளுக்காக 42,150 கோடி ரூபாய் ஒதுக்கீடு, உணவு

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2014 பிப்ரவரி 17

மானியத்திற்கு ரூ.5,300 கோடி, மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு மழைக் கால உதவி நிதி, வறட்சிக் காலத்தில் குடிநீர் மற்றும் தீவனப் பற்றாக்குறையைப் போக்க ரூ.681 கோடி, முதன்முறையாக பல்கலைக்கழக வளர்ச்சிக்கு மானியமாக ரூ.979 கோடி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட ரூ.1,500 கோடி, மாநிலத்திற்குள் நதிகளை இணைப்பதற்கான நிதி ஒதுக்கீடு, 770 நடமாடும் மருத்துவக் குழுக்களை அமைப்பது, சென்னையில் சாலைகள், மேம்பாலங்கள் கட்டுவதற்காக ரூ.2,000 கோடி, தஞ்சையிலும், திருநெல்வேலியிலும் பல்நோக்கு மருத்துவமனைகள், மன வளர்ச்சி குன்றியோருக்கு உதவித் தொகை ரூ.1,500/- ஆக உயர்வு போன்ற பல திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கின்ற இந்த அறிவிப்புகள் பாராட்டத்தக்கவை என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிதிநிலை அறிக்கையில் பற்றாக்குறையும், கடன் அளவும் தீர்மானித்த கட்டுப்பாட்டுக்குள்ளேயே நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதேசமயம், மாநிலத்தின் வரி வருவாய் குறைந்துள்ளதை ஈடுகட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கனிம வளங்களை அரசே ஏற்று நடத்துவது உட்பட புதிய வருவாய்க் கூறுகளை ஆய்வு செய்வது அவசியம் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தை அரசின் முழு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து நடவடிக்கை எடுத்தது ஒரு வரலாற்றுச் சாதனை என்பதை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இந்த நடவடிக்கையை மேற்கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு கோடி ரூபாய், ஒன்றரை கோடி ரூபாய் பணம் கொடுத்துதான் எம்.டி., எம்.எஸ்.. வகுப்புகளில் சேர வேண்டும் என்ற நிலைமையை மாற்றி, இன்று ஒரு ரூபாய்கூட நன்கொடையாகக் கொடுக்காமல் யாரும் சேர முடியும் என்ற நிலைமையை உருவாக்கியிருப்பது (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பிடத்தக்கதாகும்.



2014 பிப்ரவரி 17] [திரு. க. பாலகிருஷ்ணன்]

இந்த நிதிநிலை அறிக்கையில் பல்கலைக்கழகங்களுக்கான மானியமாக 961 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை வரவேற்கின்ற அதேநேரத்தில் தொடர்ந்து நிதி நெருக்கடியில் சிக்கித் திணறிக் கொண்டிருக்கின்ற அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் 13,500-க்கும் மேற்பட்ட பேராசிரியர்களுடைய, ஊழியர்களுடைய வாழ்வைப் பாதுகாப்பதற்காக இப்பல்கலைக் கழகத்திற்கு கூடுதலான மானிய நிதியை ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-15

1,250-க்கும் மேற்பட்ட அதிகமான படுக்கை வசதிகளைக் கொண்டிருக்கிற பல நூறு உயர் மருத்துவர்களைக் கொண்ட அண்ணாமலை பல்கலைக்கழக மருத்துவமனைக்கு முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தை விரிவுபடுத்தவும், மேலும் அம்மருத்துவமனைக்கு மருந்துகள், உபகரணங்கள் வழங்கிடவும் அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டது. வரலாற்றிலேயே முதன்முறையாக வறட்சி நிவாரணத்தை நம்முடைய அரசு வழங்கி சாதனை படைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு உதவி செய்திருந்தால், அந்த வறட்சினுடைய பாதிப்பிலிருந்து தமிழ்நாட்டு மக்களை காப்பாற்றியிருக்க முடியும். ஆனால், மத்திய அரசு வஞ்சித்துவிட்டது. இந்த ஆண்டு இப்போதும் வறட்சி ஏற்பட்டு மிகக் கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கவும், மாட்டு தீவனப் பற்றாக்குறையைப் போக்கவும் நிதி ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். அதேநேரத்தில், இப்போது வறட்சியினாலே பயிர்கள் காய்ந்து கருகிக் கொண்டிருக்கின்றன. தென்னை, கொய்யா, மா போன்ற மரங்கள் எல்லாம் இன்றைக்கு காய்ந்து கொண்டிருக்கின்ற இப்படிப்பட்ட நிலையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பாதிக்கப்பட்ட அந்த நில உரிமையாளர்களுக்கு வறட்சி நிவாரண உதவிகளை அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஏரி, குளங்களை ஆழப்படுத்தி, தூர் வாரும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். வழங்கப்பட்டிருக்கிற கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் திரு. மன்மோகன் சிங் தலைமையிலான மத்திய அரசு, அந்த மக்கள் விரோத அரசாங்கம், டீசல், உரம், பூச்சி மருந்து உள்ளிட்ட இடுபொருட்களின் விலையை கடுமையாக உயர்த்தி விட்ட காரணத்தினால், நம்முடைய அரசு நெல்லுக்கும், கரும்புக்கும் விலை உயர்வை அறிவித்த பிறகும்கூட விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுகொடுக்க முடியவில்லை. எனவே, மேலும் முடிந்த அளவு விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, நெல் கொள்முதல் விலையை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு வங்கிகளில் நகைக் கடன் வழங்கப்படுகிறது. ஒரு சவரனுக்கு இன்றைக்கு 10,000 ரூபாய், 12,000 ரூபாய் மட்டுமே வழங்குகிறார்கள். தனியார் வங்கியில் 18,000 ரூபாய், 20,000 ரூபாய் என வழங்கி வட்டியை உயர்த்திக் கொள்ளை அடிக்கிறார்கள். எனவே, கூட்டுறவு வங்கிகளிலே ஒரு சவரனுக்கு 18,000 ரூபாய் வரையில் நகைக் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் அரசு முனைப்பு காட்டி வருவது பாராட்டுக்குரியது. இதற்கான அரசு ஆணையை நீட்டிப்பதுடன், மேலும் பட்டா வழங்குவதில் முனைப்பு காட்டவேண்டும். புதுக்கோட்டை நகராட்சியிலுள்ள ஒரு பகுதியில் 600 வீட்டுமனைப் பட்டா வழங்கி, 18 ஆண்டுகளான பிறகும், இன்னும் நிலம் அவர்களுக்கு ஒப்படைக்கப்படவில்லை. இது போன்று வழங்கப்பட்டிருக்கிற பட்டாக்களுக்கான இடங்களை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கோயில் நிலங்களில் 10 இலட்சத்திற்கு மேற்பட்ட குத்தகை விவசாயிகள் சாகுபடி செய்து வாழ்ந்து வருகிறார்கள். வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கை பாதிப்புகளால் சாகுபடி செய்து, இழப்பு ஏற்பட்டு அழிந்த ஆண்டுகளுக்கு, குத்தகைப் பாக்கி என்று பல வழக்குகள் தொடுக்கப்பட்டு இவர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள். எனவே, இந்த 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட குத்தகை விவசாயிகளை பாதுகாக்க, இந்தப் பாக்கிகளை இரத்து செய்ய சட்டம் இயற்றி அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

கோயில் நிலங்களில் குடியிருக்கிற ஒரு கோடிக்கும் மேற்பட்ட ஏழை நடுத்தர மக்கள் இன்றைக்கு வாடகை உயர்வு போன்ற





காரணங்களால் அவதிப்படுகிறார்கள். அவர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஓர் உயர் மட்டக் குழுவை அமைத்து ஆய்வுசெய்து அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தொகுப்பு வீடுகள் தமிழகம் முழுவதும் கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆன காரணத்தினாலே, அவை சிதைந்து, சிதிலம் அடைந்து பயன்பாட்டிற்கு இலாயக்கற்றவையாக மாறி வருகின்றன. அவற்றைப் புதுப்பித்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோமாரி நோயினாலே பாதிக்கப்பட்ட மாடுகள், மரணம் அடைந்த கால்நடைகளுக்கு உதவித் தொகையை வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் பள்ளிகளை மேற்பார்வை செய்வதற்கென தனி இயக்குநரகம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசு அக்கறையோடு பரிசீலனை செய்ய வேண்டும். சிதம்பரத்திற்குப் பக்கத்திலுள்ள கூடுவெளி கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்காகக் கல்லூரி அமைப்பதற்கு 40 ஏக்கர் நிலத்தை தனியார் ஒருவர் முன்வந்து கொடுத்திருக்கிறார். ஆதி திராவிடர் துறையில் பள்ளிகள் மட்டும்தான் இன்றைக்கு இருக்கின்றன. கல்லூரிகள் இல்லை என்ற குறையைப் போக்க அங்கே கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்திலேயும், நீலகிரி மாவட்டத்திலேயும் பல இலட்சம் சாதாரண விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்துகிற தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்திலே இருந்து, அவர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறோம்.

முதியோர் உதவித் தொகையை இந்த அரசு ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கி சாதனை புரிந்திருப்பது உண்மையிலே பாராட்டப்பட வேண்டிய விஷயமாகும். ஆனால், சில இடங்களில் இன்றைக்கு அந்தப் பட்டியலை சரிபார்க்கிறோம் என்கிற பெயரிலே, அந்தப் பணத்தை வழங்குவதிலே தாமதப்படுத்துகிறார்கள். இதைப் போக்கி அனைவருக்கும் தொடர்ந்து உதவித் தொகையை வழங்கிட வேண்டும். மன வளர்ச்சி குன்றியவர்களுக்கு உதவித் தொகையை உயர்த்தியது

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2014 பிப்ரவரி 17

போல, அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் அந்த உதவித் தொகையை உயர்த்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு வீடு கட்டும் கடன் சங்கத்தில், கடன் வாங்கி, தவணை தவணையாக கட்டிக்கொண்டே இருக்கிறார்களே தவிர, அந்த அசலும், வட்டியும் தீராமல் நிலுவையில் இருந்துகொண்டு வருகிறது. எனவே, அந்தக் கடன் பாக்கிகளை அரசு தள்ளுபடி செய்து, அவர்களைக் காப்பாற்ற முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *12-20*

அடுத்து, காவல் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு காவல் துறையிலேயும், சிறைத் துறையிலேயும் *20* ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு S.S.I. என்கிற பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தீயணைப்புத் துறையிலே அவ்வாறு அது அமலாக்கப்படவில்லை. எனவே, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிலே இருக்கிறவர்களுக்கும் அந்தப் பதவி உயர்வை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம், ஆயுதப் படையிலே பணிபுரிந்த தெய்வகுமார் என்ற காவலருடைய சடலம் சில நாட்களுக்கு முன்னாலே படுகாயங்களோடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. அது கொலையாக இருக்குமென்று அங்கே கருத்து நிலவுகிறது. எனவே, தனிப் புலன் விசாரணைக் குழு அமைத்து அதை விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பணியின்போது மரணமடைந்த காவல் துறையினருடைய வாரிசுகள் *2,178* பேருக்கு *2006* ஆம் ஆண்டு முதல் பணி வழங்கப்படாமல் நிலுவையிலே இருக்கிறது. அவர்களுக்கு பணி வழங்கிட வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

குடிநீரைப் பாதுகாப்பதற்கு இந்தத் திட்ட அறிக்கையிலே முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அது நல்ல அம்சம். அதுவும் வறட்சிக் காலங்களிலே குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு போர்க்கால அடிப்படையிலே செயல்படுகிற முறையிலே இந்த



2014 பிப்ரவரி 17] [திரு. க. பாலகிருஷ்ணன்]

நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது. அதேசமயம், குறிப்பாக கொள்ளிடம் ஆற்றில் இருந்து *15*-க்கும் மேற்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் சில ஆயிரம் கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஆனால், கடல் நீர் உட்புகுந்த காரணத்தினால் அங்கே உப்பு நீராக மாறி அந்தத் திட்டங்கள் எல்லாம் எதிர்காலத்திலே பாதிக்கப்படும் என்கிற ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, கடல்நீர் உள்ளே புகுந்து உப்புநீராக மாறுவதைத் தடுப்பதற்கு கொள்ளிடம் மற்றும் வெள்ளாற்றின் குறுக்கே தடுப்பணைகளைக் கட்டுவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டினைப் பின்பற்ற, மத்திய அரசு நிறைவேற்றாமல் தொடர்ந்து காலங்கடத்தி அடம் பிடித்து வருகிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை வற்புறுத்த வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலில் நிச்சயமாக அங்கே ஆட்சி மாற்றம் ஏற்படுகிறபோது அந்தத் திட்டத்தை நாமே நிறைவேற்றுகிற ஒரு நிலைமை உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, சிந்தனை சிற்பி சிங்காரவேலருக்கு மணி மண்டபம் அமைக்க அரசு உத்தரவிட்டிருக்கிறது. வெலிங்டன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அமைந்துள்ள அவர் வாழ்ந்த இடத்திலேயே அதை அமைப்பதற்கு நீங்கள் முன்வர வேண்டும். வள்ளலார் சென்னையிலே வாழ்ந்த வீட்டை அவரது நினைவகமாக மாற்றித் தருவதற்கு அரசு முன்வரவேண்டும்.

அரசுப் பணியாளர் தேர்வு குரூப்-*1* சர்வீசுக்கு இன்றைக்கு உச்ச வயது வரம்பு *35* ஆக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். உரையை முடித்து விடுகிறேன். எனவே, அந்த வயது வரம்பை *45* ஆக உயர்த்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வன விலங்குகள் தாக்கி ஒருவர் உயிரிழந்தால் அதற்கு 3 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. ஆனால், பாம்பு கடித்து ஒருவர் மரணமடைந்து விட்டால் அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய்தான் வழங்கப்படுகிறது. கடித்தது வேண்டுமானால் விலங்காக இருக்கலாம், பாம்பாக இருக்கலாம், ஆனால், சாகிற உயிர், போகிற உயிர் மனிதனுடையது. எனவே, அதை 3 இலட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடைசியாக இஸ்லாமிய மக்களுக்கான இட ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன். மத்திய அரசாங்கம் பல்வேறு மக்கள் விரோத நடவடிக்கைகளின்மூலம் இன்றைக்கு உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் என்கிற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, சிறு வியாபாரிகளை எல்லாம் அவர்களது வியாபாரத்தை நடத்த முடியாமல் செய்திருக்கிறது. அந்தச் சட்டத்தை எதிர்த்துக் குரல் கொடுப்பது, அந்தச் சட்டத்தை, எப்படிப் பன்னாட்டு கம்பெனிகளை சிறு வணிகத்திலே அனுமதிக்க மாட்டோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்தாரோ அதேபோல, இந்தச் சட்டத்தை அமலாக்க மாட்டோம் என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரே ஒரு கோரிக்கை, கும்பகோணத்திற்கு அருகிலே, பட்டாசு வெடி விபத்திலே உயிரிழந்த 10 பேர்களுடைய குடும்பத்தினருக்கும், பொங்கல் பண்டிகையின்போது கடலில் குளிக்கும்போது மரணமடைந்த சிதம்பரம் நகரத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்களின் குடும்பத்தினருக்கும், ஐயப்பன் கோயிலுக்குப் போகும் வழியிலே சாலை விபத்திலே மரணமடைந்த சிதம்பரம் வட்டம், சிவபுரி கிராமத்தைச் சேர்ந்த மூன்று ஆதி திராவிட குடும்பங்களுக்கும், கழிவுநீர்த் தொட்டியைச் சுத்தம்செய்யும்போது விஷ வாயு தாக்கி மரணமடைந்த சிதம்பரத்தைச் சேர்ந்த இரண்டு தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும், வீட்டுச் சுவர் இடிந்து விழுந்து மரணமடைந்த T.S. பேட்டையை சேர்ந்த மீனவர் குடும்பத்திற்கும் மாண்புமிகு





தமிழக முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகைகளை வழங்க வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பளித்தற்காக தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

தமிழகத்தில் பாடல்களின் மூலமாக புரட்சியை ஏற்படுத்திய பாரதியார் அவர்கள், "அன்னசத்திரம் ஆயிரம் கட்டல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், பின்னருள்ள தருமங்கள் யாவும் பெயர்விளங்கி ஒளிர நிறுத்தல், அன்னயாவினும் புண்ணியம்கோடி, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்று பாடினார். ஆனால், அவருடைய பாடலுக்கு இலக்கணமாக, அதைவிடக் கூடுதலாக நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1.84 கோடி குடும்பங்களுக்கு விலையில்லாமல் அரிசியைக் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல தமிழகம் முழுவதிலும் அம்மா உணவகம் திட்டத்தினைச் செயல்படுத்தியும், ஆலயங்களில் அன்னதானத் திட்டத்தினை உருவாக்கியும், எங்கு பார்த்தாலும் அன்ன சத்திரங்களையும் ஆலயத்திற்கு பெருமையும் சேர்த்ததோடு மட்டுமல்லாமல், தமிழகத்தில் உள்ள பல கோடி ஏழையெளிய, நடுத்தர குடும்ப மாணவர்கள் தன்மானத்தோடும், தன்னம்பிக்கையோடும் எதிர் காலத்தில் தங்களுடைய வாழ்வாதாரத்தை உருவாக்கிக்கொள்வதற்காக பள்ளிக் கல்வித் துறைக்கு கிட்டத்தட்ட 18,000 கோடி ரூபாய் நிதியையும், உயர் கல்விக்கு ரூ.3,627 கோடி ஒதுக்கீடு செய்து மிகப் பெரிய சாதனையை இந்திய மாநிலங்களிலேயே தமிழகத்திற்கு உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

கடந்த வாரம் நடைபெற்ற கவர்னர் உரை மீதான விவாதத்தின் முடிவில் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்

[திரு. சு. குணசேகரன்] [2014 பிப்ரவரி 17

சிறப்பானதொரு பதிலுரையை ஆற்றினார்கள். அந்த உரையில் கூறியதுபோல இந்த அரசு கொள்கை தடுமாறாமல் சில குறைகள் இருந்தாலும், அந்தக் குறைகளைப் போக்குவதற்கான ஜனநாயக வழிமுறையில் திட்டங்களையும், நிதி ஒதுக்கீடுகளையும் செய்துகொண்டிருக்கின்றது என்று சொன்னதை மெய்ப்பிக்கின்ற விதமாக, இந்த வரவு-செலவுத் திட்டம் என்பது ஏழையெளிய மக்களுக்கு தொலைநோக்குப் பார்வையோடு அவர்களுடைய எதிர்காலத்தை உருவாக்குவதற்கான திட்டங்களில் கூடுதலான முதலீடுகளைச் செய்திருப்பது பாராட்டத்தக்கது. அவற்றை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம். மக்கள் நலத் திட்டங்களுக்கு இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு சுமார் ரூ.*43,000* கோடியளவில் நிதி ஒதுக்கீடுசெய்து, முக்கியமாக இன்று பொருளாதார மந்தநிலை ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலையிலும் தொடர்வது என்பது, அவருடைய மக்கள் நலன் சார்ந்த அந்த நிலையான கொள்கைக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கின்றது. மக்கள் நலத் திட்டங்கள் என்பது ஏனோ, அரசினுடைய புகழுக்காக இல்லாமல், மக்களுடைய நலன் சார்ந்து இருக்க வேண்டும் என்ற அந்தச் சீரிய நோக்கத்தோடு, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் நெசவாளர்களையும் பசுமை வீடுகள் திட்டத்தில் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தவுடன், தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய நெசவாளர்கள் பசுமை வீடுகள் திட்டத்தில் இணைக்கப்பட்டு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். பசுமை வீடுகள் திட்டம் என்று சொன்னால், *300* சதுர அடியில் ரூ.*2,10,000* என்று சொன்ன நேரத்தில், நெசவாளர்களின் வாழ்வாதாரத்திற்காக தறி வைக்க வேண்டும். எனவே, கூடுதலான பரப்பளவில் வீடு கட்ட வேண்டும் என்பதை உணர்ந்து, இன்றைக்குக் கூடுதலான பரப்பளவில் வீடு கட்டுவதற்கு ரூ.*2,60,000* என்று நிதியை ஒதுக்கீடு செய்து, நலத் திட்டம் என்று சொன்னாலும், மக்களுடைய வாழ்வாதாரம், அவர்களுடைய தேவைக்கான திட்டமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், கூடுதலாக நிதியை ஒதுக்கீடு செய்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் இன்றைக்கு நாங்கள் வரவேற்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதைப்போல, நமது சென்னை மாநகரம் தமிழகத்தின் தலைநகர், எல்லோராலும் போற்றப்படுகின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நகரம். நம்மால் மட்டுமல்ல, வரலாற்றில் ஆங்கிலேயர்கள்கூட, இந்தியாவில் எத்தனையோ நகரங்கள்



2014 பிப்ரவரி 17] [திரு. சு. குணசேகரன்]

இருந்தாலும், சென்னையின் மீதுதான் அவர்களது மோகம் இருந்தது. அப்படிப்பட்ட ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நகரம். இந்தச் சென்னையைச் சிங்காரச் சென்னையாக மாற்றுவோம் என்றெல்லாம் பல பேர் கூறிக்கொண்டிருந்தார்கள். ஆனால், அப்படிச் சொன்ன திட்டங்களில் இன்றைக்கும் இந்தச் சென்னைக்கு நடுவிலே ஓடிக்கொண்டிருக்கின்ற கூவம் நதி—அந்த நதிக்கு அருகிலே செல்கின்ற நேரத்தில்—யாராக இருந்தாலும் முகம் சுளிக்கின்ற ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்ற நிலையில், நாதியற்று நாறிக்கிடந்த இந்தக் கூவம் நதியைச் சீரமைத்து, மீட்டெடுப்பதற்காக ஒரு பெரும் திட்டம், அதற்காக ரூ.*3,835.62* கோடிக்கு திட்ட மதிப்பீடு வரவேற்கத்தக்கது. இந்த மதிப்பீட்டில் கம்யூனிஸ்டுகளாக இருக்கக்கூடிய நாங்கள் பார்க்கக்கூடிய பார்வை—ஒரு திட்டம் என்று சொன்னால், அது மக்களுக்கானதாக இருக்க வேண்டும். இந்தத் திட்டத்தின் மூலமாக மக்கள் யாரும் பாதித்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருப்பவர்கள். இன்றைக்கு அந்த நதிக்கரையின் ஓரத்தில் இருக்கக்கூடிய ஆயிரம் ஆயிரம் சாதாரண மக்கள், அந்த மக்களைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு, கவலைகொண்டு அவர்களை மறு குடியமர்த்துவதற்காக திட்டத்தினுடைய மதிப்பீட்டில் கிட்டத்தட்ட *70* விழுக்காடு தொகையை ரூ.*2,077* கோடி அளவில் மறுகுடியமர்த்துவதற்காக ஒதுக்கியிருப்பது என்பது, இந்த அரசு திட்டங்களைத் தீட்டுவது மக்களுக்காகவே என்பதை மீண்டும் நிலைநிறுத்தியிருக்கிறது. அதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *12-30*

அதைப்போல, இன்றைக்கு மக்கள் பெருக்கம் தமிழகத்தில் அதிகரித்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில், மக்கள் பெருக்கத்திற்கு அதிகமா வாகனங்களின் எண்ணிக்கையும் கூடிக்கொண்டிருக்கின்றது. ஆனால், இருக்கிற சாலைகளில் எங்கு பார்த்தாலும் விபத்துகள், அந்த விபத்துகளைச் சவாலாக ஏற்று தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நெடுஞ்சாலை உள்ளிட்ட அனைத்துச் சாலைகளிலும் இருக்கக்கூடிய விபத்துப் பகுதிகளை கரும்புள்ளிகளாக ஏற்று, இந்தியாவிலேயே விபத்துகளைக் குறைப்பதற்காக ரூபாய் *215* கோடியை ஒதுக்கி தமிழ்நாட்டு மக்களுடைய உயிருக்கு உத்தரவாதத்தை ஏற்பாடுத்தியிருக்கிற ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதையும்

[திரு. சு. குணசேகரன்] [2014 பிப்ரவரி 17

வரவேற்கிறோம். அதைப்போல, கிராமப்புற சாலைகள் நீண்ட நெடிய காலமாக 1996 ஆம் ஆண்டிலிருந்து மேம்படுத்தப்படாமல் அதிலும் குறிப்பாக, அந்தக் கிராமப்புற சாலைகளுக்கு ஒதுக்கப்படக்கூடிய நிதி என்பது நெடுஞ்சாலைத் துறைகள் நிதியிலிருந்து சற்றுக் குறைவாக இருக்கின்ற காரணத்தால், அந்தச் சாலைகளெல்லாம் இன்றைக்கு இருக்கக்கூடிய நாகரிகமான போக்குவரத்திற்கு வசதியில்லாமல் இருந்த நிலையில், கிராமப்புறத்திற்கு இருக்கக்கூடிய முக்கியமான பஸ் போக்குவரத்து உள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கு 9,235 கிலோ மீட்டர் சாலைகள், ரூபாய் 2,308 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேம்படுத்தப்பட்டு அதை நெடுஞ்சாலைத் துறையினுடைய ODR scheme-லே சேர்ப்பது என்பது, நீண்ட காலமாக இன்றைக்கு அல்ல, கடந்த சட்டப் பேரவைக் கூட்டத் தொடரிலும் நாங்கள் வைத்த கோரிக்கை. அதை ஏற்றுச் செயல்படுத்தியதற்காக இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, அரசினுடைய திட்டங்களை இன்றைக்கு அடுக்கிக் கொண்டே செல்லலாம். திட்டங்களை அடுக்கிக் கொண்டே செல்கிற நேரத்தில் காலம் ஓடிக்கொண்டிருக்கிறது. துணைத் தலைவரும் என்னைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறார். எனவே, அனைத்து நலத் திட்டங்களையும் நான் வரவேற்பதோடு, இன்றைக்கு மத்திய அரசைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டில் ஒரு பழமொழி சொல்லுவார்கள் 'குதிரை கீழே குப்புற தள்ளியதோடு, குழியையும் பறிக்கிறது' என்று. அதைப்போல இன்றைக்கு மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கை என்பது இந்திய நாட்டிற்கே ஒரு மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியை உருவாக்கியிருக்கிறது. அதன் மூலமாக கட்டுப்படுத்த முடியாத பணவீக்கம், விலைவாசி உயர்வு ஏற்பட்டிருக்கிற இந்த நிலையில் தமிழ்நாட்டிற்கு என, மாநிலத்திற்குக் கொடுக்கவேண்டிய நிதியைக்கூடக் கொடுக்கவில்லை. உறுதி செய்யப்பட்ட நிதியைக்கூட கொடுக்காமல் தவிர்த்திருப்பது எவ்வளவு பெரிய மோசமான செயல் என்பதை நாம் உணரவேண்டும். இன்றைக்கு விற்பனை வரிக்கு இழப்பீடாக 9,300 கோடி ரூபாய் நமக்குக் கிடைக்கவில்லை. இது தமிழ்நாட்டை வஞ்சிக்கிற எத்தகைய ஒரு செயல். காங்கிரஸ் கட்சி தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது. மாற்றாந்தாய் மனப்பான்மையுடனே நடத்திக்



2014 பிப்ரவரி 17] [திரு. சு. குணசேகரன்]

கொண்டிருக்கின்றது. குறிப்பாக ஈழத் தமிழர்கள் பிரச்சினை, கச்சத் தீவு, தமிழக மீனவர்கள், புதிய இரயில் பாதைகள் போன்றவை. (குறுக்கீடு) இன்னும் கொஞ்சம் கேட்டுக்கொள்ளுங்கள். காவேரிப் பிரச்சினை.

தெலுங்கானாவிலே கிருஷ்ணாவுக்கும் கோதாவரிக்கும் நதிநீர்ப் பிரச்சினை வரக்கூடும் என்பதற்காக (குறுக்கீடு) மேலாண்மை, அந்த நீர்ப் பங்கீட்டை நிர்ணயிப்பதற்கு மத்திய அரசு கண்ட்ரோலில் கொண்டு போகிறார்கள். ஆனால், உச்ச நீதிமன்றம் சொன்னதற்குப் பின்னால்கூட காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்காமல் இருக்கிற ஓர் அரசுதான் இந்தக் காங்கிரஸ் கட்சி தலைமையிலான அரசு. அங்கே அமைச்சர்களாக இருந்து பிரயோஜனமில்லை. தமிழ்நாட்டு மக்களுடைய தேவைகளை, நலனை உணர்ந்து, கோரிக்கை வைத்து, குரல் கொடுத்து, நிதிகளை, திட்டங்களை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத்தான் இந்த நாட்டு மக்கள் உங்களுக்கு வாக்களித்து, தேர்ந்தெடுத்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பினார்கள். ஆனால், அங்கே சென்றதற்குப் பின்னால், தமிழகத்தினுடைய பொருளாதாரக் கோரிக்கைகளை, தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளை, தமிழ்நாட்டு மக்களுடைய தேவைகளைப் புரிந்து குரல் கொடுக்காமல், அங்கே இருக்கிற உங்களுடைய எஜமானர்களுடைய திட்டங்களை ஏற்றுக்கொண்டு செயல்படுத்துவது என்பது தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கிற போக்கு ஆகும். அதற்கு 2014-ல் நடைபெறுகிற நாடாளுமன்றத் தேர்தல் உங்களுக்குப் பதில் சொல்லும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, யார் தமிழ்நாட்டு மக்களுக்குச் சிறந்தவர்கள், நல்லவர்கள் என்பதைத் தேர்ந்தெடுத்து இடதுசாரிக் கட்சிகளோடு கூட்டணியை அமைத்து, எங்களுடைய கூட்டணி வலுவாக, பலமாக, மக்கள் ஆதரவோடு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இப்போது உங்கள் கட்சியெல்லாம் யாரோடு யார் கூட்டணி சேர்வது 'அவள் வருவாளா வர மாட்டாளா' என்ற பாடல் மாதிரி, இன்றைக்கு ஒரு நாளைக்கு ஒரு கூட்டணி செய்தி. இது எவ்வளவு பெரிய அசிங்கம்? இது எவ்வளவு பெரிய அசிங்கம்; இங்கே அது சேருமா அங்கே இது சேருமா? இது இதோடு சேர்ந்ததா? சேர்ந்துவிட்டதா? (குறுக்கீடு) ஒரு கூட்டணியைக் கூட....

[2014 பிப்ரவரி 17

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் வருமா, வராதா? அதை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ் சொல்லுங்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆடு நனைகிறதே என்று ஓநாய்க்கு என்ன வருத்தம்? (குறுக்கீடு) நான் பதில் சொல்கிறேன். கூட்டணியைப் பற்றி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பேசவில்லை. (குறுக்கீடு) தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இதுவரை எந்தக் கட்சியுடனும் கூட்டணியைப் பற்றிப் பேசவில்லை. அதைத்தான் தெளிவுபடுத்திக் கொள்கிறேன். கூட்டணி பற்றிப் பத்திரிகைகள் பலவிதமாகப் பேசும். (குறுக்கீடு) நாங்கள்...*

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ராகுல் காந்தி மற்றும் திருமதி சோனியா காந்தி உட்பட யாருமே தமிழக காங்கிரஸ் கமிட்டியை ஒரு கமிட்டியாகவே மதிப்பதில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தமட்டில் வெற்றியும் பெற்றிருக்கிறது. ஆட்சியும் அமைத்திருக்கிறது. தோல்வியும் பெற்றிருக்கிறது. ஆட்சியையும் இழந்திருக்கிறது. எதிர்க்கட்சியில் இருந்திருக்கிறது. அதை மக்கள் முடிவு செய்வார்கள். ஜனநாயக நாட்டில் வெற்றியும் உண்டு, தோல்வியும் உண்டு. (குறுக்கீடு) ஆனால், கொஞ்ச நாட்களாக நம்முடைய காம்ரேட்ஸுக்கு என்ன சந்தோஷம் என்று தெரியவில்லை. இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி இல்லை என்றால் இவர்களுடைய நிலை என்ன? ** எங்களோடு கூட்டணி வைப்பதற்கு இஷ்டப்பட்ட கட்சிகள் வரும். அது அரசியல். எந்தக் கட்சி எப்போது கூட்டணி சேரும் என்பதை...*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*



2014 பிப்ரவரி 17]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. பிரின்ஸ், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், நீங்கள் பேசுங்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** *இடதுசாரி கட்சிகளைப் பொறுத்தவரையில் ஒரு கொள்கையை உருவாக்கி, கொள்கைக்காக அரசியல் நடத்தக்கூடிய ஓர் இயக்கம் என்பதை, இப்போது இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சி தலைமை சொல்ல வேண்டாம், உங்களுடைய காங்கிரஸ் கட்சியினுடைய முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு சொல்லியிருக்கிறார்கள். எனவே, எங்களுடைய கூட்டணி என்பது கொள்கைக்கான கூட்டணி. தமிழக மக்களுக்கான கூட்டணி. (மேசையைத் தட்டும் ஒலி) அதை வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலில் நிரூபிக்கப் போகிறோம். ஆனால், நான் கேட்பது, உங்களுக்கு ஏது கூட்டணி. கூட்டணி என்று கேட்டால் அதை விட்டு விட்டு வேறு ஏதோ பேசுகிறீர்கள். இன்றைக்கு இது வருமா வராதா, யாருக்கும் தெரியவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. சு. குணசேகரன், வேறு சப்ஜெக்ட் பற்றிப் பேசுங்கள். அவர் வரும் என்றும் சொல்லமாட்டேன் என்கிறார். வராது என்றும் சொல்லமாட்டேன் என்கிறார். நீங்கள் வேறு சப்ஜெக்டிற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பிரின்ஸ் ஒரு நிமிடம் உட்காருங்கள். தேர்தல் ஆண்டில் வரக்கூடிய கடைசி பாராளுமன்ற கூட்டத்தொடர் நடந்தது. அது இந்த நாட்டு மக்களுக்கு நம்பிக்கை அளிக்க வேண்டாமா? நான் கேட்கிறேன். காங்கிரஸ் கட்சிக்காரர்களே காங்கிரஸ் கட்சிக்காரர்கள்மீது மிளகு ஸ்ப்ரே அடித்து சபாநாயகரையே சபையை விட்டு விரட்டி ஓட விடுகிறீர்களே, இந்த நாட்டிலே நீங்கள் எதை சாதிக்கப் போகிறீர்கள்? எனவே, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அரசியல் கட்சிகள் சிந்திக்க வேண்டும். (குறுக்கீடுகள்) காங்கிரஸ் கட்சி குப்புறக் கவிழ்ந்த ஒரு குதிரை. அந்தக் குதிரைமீது நீங்கள் யார் ஏறினாலும் கண்டிப்பாக அது... (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *அடுத்து, நீங்கள்தான் பேசப் போகிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.*

[பேரவைத் துணைத் தலைவர்] [2014 பிப்ரவரி 17

(குறுக்கீடுகள்) அடுத்து நீங்கள்தான் பேசப் போகிறீர்கள். அப்போது உங்கள் பதிலைச் சொல்லுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மிளகுப் பொடி அடித்தது உண்மையா, இல்லையா? (குறுக்கீடுகள்) மிளகுப் பொடி அடித்தது உண்மையா இல்லையா? மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் உறுப்பினர் மிளகுப் பொடி அடித்ததைச் சொன்னார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து வாபஸ் பெற வேண்டுமாம். அதை உலகம் முழுவதும் ஊடகங்களில் பார்த்துவிட்டனர். (குறுக்கீடுகள்) பிறகு எதற்கு அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசுகின்றார். அவரைப் பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாராளுமன்ற விவாதத்திலே கலந்துகொண்ட காங்கிரஸ் கட்சி உறுப்பினர், காங்கிரஸ் கட்சியினுடைய பாராளுமன்ற உறுப்பினர்மீதே மிளகுப் பொடியை அடித்தது பத்திரிகையில் செய்தியாக வந்தது மட்டுமல்ல, நாடே சிரித்துக்கொண்டிருக்கிறது, காங்கிரஸ் கட்சியைப் பார்த்து. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, சொல்லுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரிசிக்கு போட்ட சேவை வரியைவிட அதிகமான காரம் இல்லை மிளகுப் பொடி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) அடுத்து, உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேச இருக்கிறார். அவர் பேசும்போது சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) என்னுடைய அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. உட்காருங்கள். அவர் அங்கே நடந்ததைச் சொல்கின்றார், உட்காருங்கள்.



2014 பிப்ரவரி 17]

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டினுடைய சட்டம்-ஒழுங்கு எப்படி இருக்கிறது என்பதற்கு இது ஓர் உதாரணம். பாராளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. ராஜகோபால் அவர்கள் ஸ்பிரே அடிக்கின்றார். வெளியே வந்ததற்குப் பின்னாலே, ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று கேட்டால் அவர் சொல்கின்றார், 'காங்கிரஸ் கட்சியினுடைய அமைச்சர்கள், உறுப்பினர்கள் என்னைத் தாக்க வந்தார்கள், தற்காப்பிற்காக நான் எப்போதும் ஸ்பிரே வைத்திருப்பேன்' என்று. தமிழ்நாட்டிலே நாங்கள் யாராவது ஸ்பிரே வைத்திருக்கிறோமா? நாங்கள் தைரியமாகப் போகிறோம், வருகிறோம். எதிர்த்துப் பேசுகின்றவர்களும் சட்டமன்றத்திற்கு வருகிறார்கள். ஆதரித்துப் பேசுகின்றவர்களும் வருகின்றார்கள். ஆளுங்கட்சிக்காரர்களும் பேசுகின்றார்கள், எல்லோருக்குமே பாதுகாப்பு இருக்கிறது. ஆனால், திரு. ராஜகோபால் சொல்கின்றார், 'எனக்கே பாதுகாப்பு இல்லை. பாராளுமன்றத்திற்கு மட்டுமல்ல, எங்கேயும் பாதுகாப்பில்லை. தலைநகரத்தில் எப்போதுமே பாக்கெட்டில் என்னுடைய பாதுகாப்பிற்காக மிளகுப் பொடி வைத்திருப்பேன். பாராளுமன்றத்திற்கு வெளியே தேவை என்று நினைத்தேன். உள்ளேயே என்னை அடிக்கின்றார்கள். எனவே, காங்கிரஸ் கட்சி அமைச்சர்கள் அடிக்க வந்த காரணத்தால் நான் இந்த ஸ்பிரே அடித்தேன்' என்று ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கின்றார். இதுதான் இந்த நாட்டிற்கு காங்கிரஸ் கட்சி கொடுத்திருக்கிற சட்டம்-ஒழுங்கு, தார்மீகக் கடமை, நாடாளுமன்ற ஜனநாயக நெறிமுறைகள். இந்த நாட்டில் காங்கிரஸ் கட்சியைக் கலைக்கவேண்டுமென்று காந்தி சொன்னார். அது இன்றைக்கு நிதர்சன உண்மையாக காங்கிரஸ் கட்சித் தலைவர்களால் நிரூபிக்கப்படுகிறது. (குறுக்கீடு)

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் நாட்டு நடப்பைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப்போல, இன்றைக்கு நமது நிதிநிலை அறிக்கை என்பது தொலைநோக்குத் திட்டங்களிலும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களிலும் சிறப்பாக நிதியொதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்தாலும்கூட, இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டினுடைய வணிக வரி வசூல் என்பது

[திரு. சு. குணசேகரன்] [2014 பிப்ரவரி 17

சற்று குறைந்து இருப்பதாக மேற்கோள் காட்டப்பட்டிருக்கிறது. எனவே, வணிக வரியை முழுமையாக வசூலிப்பதற்கான அந்தக் கட்டமைப்புகளைப் பலப்படுத்த வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு டாஸ்மாக்கினுடைய ஆயத்தீர்வையை அதோடு இணைத்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு வருவாய்க் குறைவு என்பது பெரும் பகுதி நிதி டாஸ்மாக் மூலமாக வருவதாகச் சொல்லிருப்பது என்பது ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும். (குறுக்கீடு) நீங்கள் அதிகமாகக் குறுக்கீடு செய்கிறீர்கள். நீங்கள் அமைதியாக இருக்கவும். (குறுக்கீடு) இனிமேல் நான் அனுமதித்து நீங்கள் பேசும்போதுதான் பேச வேண்டும். உட்காருங்கள். அவர்கள் யார் பேசும்போதும் நீங்கள் குறுக்கீடு செய்யக் கூடாது. நீங்கள் பேசும்போது மட்டும்தான் பேச வேண்டும். அமைதியாக இருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் இரண்டு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** இது பாராளுமன்றம் கிடையாது. இது தமிழ்நாடு சட்டமன்றம். அதனால் திருமதி விஜயதரணி அவர்கள் அமைதி காக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, டாஸ்மாக் மூலமாக வருமானத்தைப் பெருக்குவது என்பது தமிழ்நாட்டினுடைய எதிர்கால சமூக நலனுக்கு உகந்ததாக அமையாது என்பதை நமது அரசு உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இன்றைக்கு நமது கடன் என்பது அனுமதிக்கப்பட்ட அளவைவிடக் குறைவாக ரூபாய் 25 ஆயிரம் கோடி பெற்றதாகச் சொல்லியிருந்தாலும், ஆண்டுக்கு ஆண்டு கடனும், அதனுடைய வட்டி விகிதமும் கூடிக்கொண்டே இருப்பது தமிழ்நாட்டினுடைய எதிர்கால நலனுக்கு உகந்ததா என்பதைச் சிந்தித்து, அந்த மூலதன நிதிகளைப் பெருக்குவதற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். அதேபோல, பல திட்டங்களுக்கு இன்றைக்கு ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் உரையை முடித்துவிடுங்கள். நீங்கள்



2014 பிப்ரவரி 17] [பேரவைத் துணைத் தலைவர்]

எல்லோரையும்விட கூடுதல் நேரம் எடுத்துக்கொண்டீர்கள். நீங்கள் பாராளுமன்றம் வரை போய் வந்துவிட்டீர்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** இவ்வளவு நேரம் பொது அரசியல் பேசினேன். இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், இரண்டு நிமிடம் எல்லாம் கிடையாது. ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** வேளாண்மைத் துறைக்கு இந்த பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு என்பது மிகக் குறைவாக இருக்கிறது. எனவே, பதிலுரை அளிக்கும்போது, வேளாண்மைத் துறைக்குக் கொஞ்சம் கூடுதலான நிதிகளை ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிற இந்த நிலையில், நிலத்தடி நீர் மிகவும் பாதிப்படைந்திருக்கிறது. எனவே, விவசாயிகளுக்கான கடன்களை கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும். எனவே, விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கும், நிலத்தடி நீர் தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகளிலிருந்து விவசாயிகளைக் காப்பதற்கும், வேளாண்மைக்குக் கூடுதலாக திருத்திய நிதி ஒதுக்கீட்டை அறிவிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இன்றைக்கு நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள ஊராட்சிகளில் அதிக அளவில் மக்கள் குடியிருப்பதற்கான, வீடுகள், சாலைகள், மின் விளக்குகள் போன்றவை அமைக்க பெரும் நிதிநெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. எனவே, அத்தகைய நகரத்தை ஒட்டி இருக்கிற ஊராட்சிகளுக்கு சிறப்புச் சலுகையாக நிதியை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாட்டில் நரிக்குறவர்கள் சுமார் ஐந்தாயிரத்திலிருந்து பத்தாயிரம் குடும்பங்களுக்குள்ளாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை இதுவரை எந்தவிதமான மேம்பாடும் அடையாத நிலையில் அவர்களுடைய குடியிருப்புகள் இன்றைக்கு மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. எனவே, தயவுசெய்து அவர்களை பசுமை வீடுகள் திட்டத்தில் இணைத்து,

[திரு. சு. குணசேகரன்] [2014 பிப்ரவரி 17

அவர்களுக்குப் பசுமை வீடுகள் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கூட்டுறவுத் துறையில் அரசுப் பணியாளர்கள் நலன் சங்கத்திற்குக் கடன்கள் வழங்காமல் அந்தச் சங்கம் இன்றைக்கு நலிவடைந்திருக்கிறது. எனவே, அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய கடன்களுக்கான நலச் சங்கத்திற்குக் கூடுதலான நிதிகளை, கடன்களை ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உரையை முடித்துவிடுங்கள். ஒரேயொரு கோரிக்கையை மட்டும் வைத்துவிட்டு உட்காருங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நிமிடங்கள் வாய்ப்பு இல்லை. ஒரேயொரு கோரிக்கையோடு முடித்துவிடுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** அதைப்போல, இன்றைக்கு 2010 ஆம் ஆண்டு 1,861 செவிலியர்களுக்கு மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகத்தால் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு, 23-2-2011 அன்று 969 பேர் பணியில் அமர்த்தப்பட்டு, 892 செவிலியர்கள் பணிக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களை இப்போது இருக்கக்கூடிய சட்டத்திற்குள் கொண்டுவராமல், அவர்களுக்கும் ஒரே G.O.-வில் வந்தவர்கள் என்ற அடிப்படையில் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டிருக்கின்றன என்ற அடிப்படையிலும், 892 செவிலியர்களுக்கும் பணி நியமனம் வழங்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற செவிலியர்களுடைய நியமனம் குறித்து, சென்னை உயர் நீதிமன்ற அமர்வில் 8-1-2014 அன்று சீராய்வு



2014 பிப்ரவரி 17] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவை விசாரணைக்கு அனுமதிப்பது குறித்து 24-2-2014 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. ஆகையினால், உறுப்பினர் அவர்களுடைய அந்த கருத்து குறித்து எடுக்கக்கூடிய முடிவு என்பது சென்னை உயர் நீதிமன்றம், மதுரை கிளை மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்கு அவமதிப்பாக அமையக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்பதை நான் உறுப்பினர் அவர்களுக்கு கனிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சர் குறிப்பிடும் வழக்கு பதிவு செய்யப்படுவதற்கு முன்னரே, சென்ற ஆண்டிலே, அவர்களுடைய சான்றிதழ்களெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டுவிட்டன. ஆகவே, அந்த நர்சுகளை வேலைக்கு அமர்த்துவது இந்த வழக்குக்குப் பாதகமாக வராது. ஆகவே, அவர்களுக்குப் பணியைத் தர வேண்டுமென்றுதான் கோருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உங்களுக்கு ஒரு நிமிட நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. அரசுத் தரப்பிலே சொல்லியிருப்பது—அது ஒரே G.O.-வில்— Reference No. 11190, 25-2-2011 அன்று வழங்கப்பட்ட, G.O.-வின் அடிப்படையில், அரசுத் தரப்பில் சொல்கிற நேரத்தில் அவர்களுக்கு பணி வழங்கப்படும் என்று சொன்னால், அதற்கு உயர் நீதிமன்றம் தடையாக இல்லை. எனவே, அரசு தன்னுடைய கருத்தாக அவர்களை பணி நியமனம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, அரசுப் பள்ளிகளின் கட்டமைப்புகளை வலுவாக்குவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 16,549 பகுதிநேர ஆசிரியர்களை காலமுறை ஊதியத்தில் பணியமர்த்தி இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் காலமுறை ஊதியத்தில் நியமித்து, இரண்டு ஆண்டுகள் ஆன பிறகும், அவர்களுக்கு வெறும் 5,000/- ரூபாய்தான் சம்பளம் என்பது போதுமானதாக இல்லை.

[2014 பிப்ரவரி 17

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், இந்த ஒரு கருத்தோடு உரையை முடியுங்கள். அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்கப் போகிறேன். நீங்கள் இத்துடன் தங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** எனவே, அவர்களுடைய பணியை முழுமையாக நிரந்தரம் செய்து, ஊதியத்தையும் அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல இன்றைக்கு அரசு ஆசிரியர் தேர்விலே 2013 ஆம் ஆண்டு—இந்த ஆண்டுக்கு—ஐந்து மதிப்பெண்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சலுகையாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு இந்தத் தேர்விலே புதிதாக weightage என்ற முறையில் ஆசிரியர்களுக்கான பணி நியமனம் செய்வதற்கான ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த weightage என்று கணக்கிடும்போது பதிவு மூப்பு அடிப்படையில்—தேர்விலே வெற்றி பெற்றவர்களுக்கும் பணி கிடைக்காத ஒரு சூழல் ஏற்படுகிற நிலைமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள். (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், உரையை முடித்துவிடுகிறீர்களா?

**திரு. சு. குணசேகரன்:** எனவே, கடந்த ஆண்டு எப்படி பதிவு மூப்பு அடிப்படையில் அவர்களுக்கு பணி நியமனம் செய்தார்களோ, அதைப்போல இந்த ஆண்டும் அந்த weightage முறையை எடுத்துவிட்டு, அவர்களைப் பணி நியமனம் செய்ய வேண்டும். அதன்மூலம் ஏற்கெனவே நீண்டகாலமாக பணி கிடைக்காமல் இருப்பவர்களுக்கெல்லாம் பணி கிடைக்கும். எனவே, அதை உறுதி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் உரையை முடித்துவிடுகிறீர்களா? (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். அவர் உரையை முடித்துவிடட்டும்.

**திரு. சு. குணசேகரன்:** அரசு உதவிபெறும் பள்ளிகளில் கடந்த மூன்று ஆண்டுகளாகப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. எனவே, அப்பணியிடங்களுக்கும், இந்தத் தகுதி தேர்வில் வெற்றி



2014 பிப்ரவரி 17] [திரு. சு. குணசேகரன்]

பெற்றவர்களை நியமனம் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** 13 ஆண்டுகளாக கணினிப் பயிற்றுநராக இருந்து 2008 ஆம் ஆண்டு பள்ளிக் கல்வித் துறைக்குத் தேர்வு செய்யப்பட்டு, பணியாற்றி வரும் கணினி ஆசிரியர்கள் இன்றைக்கு 652 பேர், 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறைவாக எடுத்திருக்கிறார்கள் என்று சொல்லி பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்கள் இன்றைக்கு மிகப் பெரிய நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு இந்தத் துறையிலாவது அல்லது வேறு துறையிலாவது பணி கிடைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி, பேசுங்கள். (குறுக்கீடு) பேசியது போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) உரையை முடித்துவிடுகிறீர்களா? (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** என்னுடைய தொகுதி குறித்து பல கோரிக்கைகள் இருக்கின்றன. காலத்தின் அருமை கருதி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை எழுதிக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு)

**திரு. சு. குணசேகரன்:** அதை நான் எழுதிக்கொடுத்து விடுகிறேன் என்றுதான் சொல்கிறேன். நான் அதை அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை என்னிடம் கொடுங்கள், அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூவிரித்து பூவிரித்து பொங்கிவரும், காவேரிக் கரையோரம் அரங்கநாதர், துயில் கொண்டிருக்கும் ஸ்ரீரங்கத்தில் அவதரித்து. . .

[2014 பிப்ரவரி 17

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் *12-50*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் பேசுகின்றபொழுது வேளாண்மைத் துறைக்கு இவ்வருடத்திற்கு துறை வாரியாக ஒதுக்கப்பட்ட நிதி குறைக்கப்பட்டிருக்கின்றது என்ற ஒரு கருத்தை இங்கே பதிவு செய்திருக்கின்றார், அது தவறு.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

*2012-2013* ஆம் ஆண்டு வேளாண்மைத் துறைக்கு *4,323* கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. அது *2013-2014* ஆம் ஆண்டு, நடப்பு வருடத்தில் வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி *5,174* கோடி ரூபாய் எனக் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. வருகின்ற *2014-2015* ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு *5,360* கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுத்தான் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூவிரித்து, பூவிரித்து, பொங்கிவரும் காவேரிக் கரையோரம் அரங்கநாதர் துயில் கொண்டிருக்கும் ஸ்ரீரங்கத்தில் அவதரித்து, ஸ்ரீரங்கத்தில் வெற்றிச் சரித்திரம் படைத்து, தரணி போற்றுகின்ற எங்கள் தங்கத் தாரகை மாண்புமிகு தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களே, கரைசேர முடியாத உலகத் தமிழினத்திற்கு காலமும், கடவுளும் வழங்கிய கலங்கரை விளக்கு, பத்து கோடி தமிழினத்தை கண் இமை காப்பதுபோல் பொத்திப் பாதுகாத்திடும் உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவியே, எதிர்வரும் 16-வது நாடாளுமன்றத் தேர்தலில் பாரதப் பிரதமராக மகுடம் தரிக்கப் போகும் எங்கள் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களை வழிநடத்தி வாழ வைக்கும் மனித புனித தெய்வமே, மீனவர்கள், நெசவாளர்கள், நலிவடைந்தோர், விவசாயிகள், ஏழைகள்,



2014 பிப்ரவரி 17] [திரு. ஆர்.என். கிட்டுசாமி]

முதியோர், மாற்றுத் திறனாளிகள், மாணவர்கள் ஆகியோர் வாழ்வில் ஒளியேற்ற 2014-2015 வரியில்லா நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து அனைவருக்கும் வாழ்வளித்து, இந்தியாவிற்கே வழிகாட்டியாய் விளங்கும் எங்கள் அன்னையே, பள்ளிகளில் சத்துணவு, பகவான் உறைவிடங்களில் அன்னதானம், பாமரர்களுக்கும் அம்மா உணவகம் தந்து, பாரதத்திற்கே வழிகாட்டியாய் பகைவரும் அஞ்சும்வண்ணம் அரியணையில் வீற்றிருக்கும் எங்கள் அன்னையே, எளியோன் எனக்கு ஒன்றிய அம்மா பேரவைச் செயலாளர், ஒன்றிய கழகச் செயலாளர், மாவட்ட அம்மா பேரவைச் செயலாளர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர், மாவட்ட அண்ணா தொழிற்சங்கச் செயலாளர், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பதவிகளைக் கொடுத்து, எனக்கு முகவரி கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் இன்று ஈரோடு மாநகர் மாவட்டக் கழகச் செயலாளராக நியமித்து, கழகப் பணியாற்ற வாய்ப்பளித்த அம்மா அவர்களை நன்றியோடு வணங்குகின்றேன். அம்மா நானும், எனது குடும்பமும், தலைமுறையும் தங்களுக்கு விசுவாசத்தோடும், நன்றியுடனும் இருப்போம் தாயே!

நிதிநிலை அறிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த நித்தமும் நான் வணங்குகிற தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது கோடானுகோடி நன்றிகளை அம்மா உங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சந்தி சிரித்தது. எங்கும் கொலை, கொள்ளை, தனது குடும்ப பத்திரிகை அலுவலகங்களுக்கே தீ வைப்பு. அதில் தன் குடும்பத்திற்காக உழைத்த மூன்று தொழிலாளர்கள் தீயில் கருகி சாவு. தன் மகனை தலைவராக ஏற்காததால் தன் கட்சியின் முன்னாள் அமைச்சரே கொலையான காட்சி.

தமிழகத்தில் ரேஷன் அரிசி கடத்தல், ஆள் கடத்தல், அடுத்தவர் சொத்து அபகரிப்பு, கட்டப் பஞ்சாயத்து, கந்துவட்டிக் கொடுமை, இத்தனைக்கும் மேலாக காவல் துறை அதிகாரியையே வெட்டிச் சாய்த்த கொடுமை. இப்படிப்பட்ட சம்பவங்கள்தான் நாள்தோறும் நடந்தன. ஆட்சி அதிகாரத்தில் இருந்த அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதியோ இதைத் தடுக்க வக்கில்லாமல், நேரமில்லாமல்

[திரு. ஆர்.என். கிட்டுசாமி] [2014 பிப்ரவரி 17

கடந்த ஐந்தாண்டு காலத்தையும் 'மானாட மயிலாட' பார்ப்பது, சினிமா பார்ப்பது, சினிமாவிற்கு கதை எழுதுவது போன்ற நிகழ்ச்சிகளிலேயே காலத்தைக் கழித்தார். இன்று மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கைச் சரிபடுத்தியுள்ளார். கடந்த காலங்களில் திரு. கருணாநிதி வீட்டு ஏவல் துறையாக இருந்த காவல் துறையை நாட்டு மக்களைப் பாதுகாக்கும் உண்மையான காவல் துறையாக உருவாக்கி தமிழக மக்களின் காவல் தெய்வமாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்கி வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் காவல் துறைக்கு 3,184.47 கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீடு, 2014-2015 இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 5,186.20 கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்து காவல் நிலையக் கட்டடங்கள், காவலர் குடியிருப்பு, காவல் துறைக்கு அதிநவீனக் கருவிகள், ஆயுதங்கள் வாங்கி, காவல் துறையை நவீனப்படுத்த பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. சாலை விபத்துகளில் இருந்து மக்களைப் பாதுகாக்க இந்த ஒரே நிதியாண்டில் மட்டும் 2,015 கோடி ரூபாயை ஒதுக்கி இருப்பது இந்தியாவிலேயே இதுதான் முதல் முறை என்கின்ற சரித்திர சாதனையை உருவாக்கி இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-55

அதேபோல்தான், கிராமப்புறச் சாலைகளை மேம்படுத்த அனைத்து முக்கிய மண் சாலைகளையும் தரம் உயர்த்தி தார்ச் சாலைகளாக அமைக்கவும் இவ்வாண்டில் 2,308 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சித் துறைக்குட்பட்ட பேருந்துப் போக்குவரத்து அதிகம் உள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டு இதர மாவட்ட சாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டு நெடுஞ்சாலைத் துறையின்கீழ் கொண்டுவரப்படும் என அறிவித்திருப்பது மிகச் சிறப்பானதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் மக்கள், அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோரிடம் சென்று மனு கொடுக்க, தங்கள் குறைகளைச் சொல்ல அரசு அலுவலகங்களுக்குச்



2014 பிப்ரவரி 17] [திரு. ஆர்.என். கிட்டுசாமி]

சென்று, பலநாள் கால் கடுக்க நின்று, அதிகாரிகளைப் பார்க்காமல் திரும்பி வந்த காலம் உண்டு. இன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் மக்களைத் தேடி வருவாய்த் துறை என்ற "அம்மா திட்டம்" அறிவிக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் இருப்பிடங்களுக்கே அதிகாரிகள் செல்கின்றார்கள். அந்த இடத்திலேயே மனுக்களைப் பெற்று பட்டா மாறுதல், வருமானச் சான்றிதழ், வாரிசுச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் வழங்குதல் உட்பட பல்வேறு வகையான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சில தலைவர்கள், தான் தான் தமிழர்களைக் காப்பாற்றுவது போலவும், தான் தான் தமிழர் தலைவர் என்றும், தமிழ் மொழிக்காக தாங்கள்தான் போராடுவதாகவும் வாய் கிழிய வக்கணை பேசி வருகின்றார்கள்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின்போதுதான், இலங்கையில் இனப்படுகொலை நடந்தது. இங்கேயும் இவர்கள் ஆட்சி, மத்தியிலும் இவர்கள் துணையோடு ஆட்சி, ஈழத் தமிழ் மக்களைக் காப்பாற்றுகிறேன் என்று காலையிலே சாப்பிட்டுவிட்டு கடற்கரையோரம் உண்ணாவிரதம் என்ற நாடகத்தை நடத்தி மூன்று மணி நேரத்தில் பகல் உணவுக்கு வீடு செல்லும் வேளையில் ஈழத் தமிழர் பிரச்சினை தீர்ந்துவிட்டது எனப் பேட்டி கொடுத்தவர் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி. அதற்குப் பின்னால்தான் ஈழத் தமிழர்கள் கொத்துக் கொத்தாக குண்டுமழை பொழிந்து கொல்லப்பட்டார்கள். இன்று தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ் மொழிக்காக, தமிழ் வளர்ச்சிக்காக 39.29 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து தமிழ் மொழி காத்த வீராங்கனையாக விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டின் முதுகெலும்பு விவசாயம். அந்த வேளாண் துறையை முதன்மைத் துறையாக உருவாக்கிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். கடந்தாண்டு கூட்டுறவுத் துறைமூலம் விவசாயிகள் பயிர்க் கடன் பெற 4,500 கோடி ரூபாய் வழங்கினார்கள். இவ்வாண்டு அதனை 5,000 கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளார்கள். குறிப்பிட்ட காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டிச் சலுகையாக 200 கோடி

[திரு. ஆர்.என். கிட்டுசாமி] [2014 பிப்ரவரி 17

ரூபாயை அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள். வேளாண்மைத் துறையை நவீனப்படுத்த திருந்திய நெல் சாகுபடித் திட்டம், நவீன கரும்பு சாகுபடி முறை ஆகியவற்றை அறிமுகப்படுத்தி குறைந்த நீரில் அதிக மகசூல் என்ற அற்புதத் திட்டத்தை அறிவித்து அதைச் செயல்படுத்த, சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க மானியங்களை வழங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். வேளாண் தொழில்களுக்கு தொழிலாளர் பற்றாக்குறையைச் சமாளிக்கவும், செலவினங்களைக் குறைக்கவும் வேளாண் இயந்திரங்கள் வாங்க 100 கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுடைய பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்திற்காக புதிய இன்சூரன்ஸ் திட்டத்தை உருவாக்கி அதற்காக 342.54 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் என்ற பெரும் திட்டம் தொடங்கப்படும் என அறிவித்திருப்பது விவசாயிகளுக்கு ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

விவசாயிகளின் உபதொழில் கால்நடை பராமரிப்பு. அந்தக் கால்நடையைப் பராமரிக்க பல்வேறு மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கிளை மருத்துவமனைகள், அதற்கு கட்டடங்கள் போன்றவற்றைக் கட்டி கால்நடைத் துறை மிகச் சிறந்த துறையாக மாறியுள்ளது. சாதாரண அடித்தள மக்களுக்கு விலையில்லா கறவை மாடுகள், விலையில்லா ஆடுகள், வெள்ளாடுகள் வழங்கி அடித்தட்டு மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றி வைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தமிழகம் இருளில் மூழ்கிக்கிடந்தது. மின்சாரம் இல்லாமல் மக்கள் பெரும் அவதியுற்றார்கள். தொழிற்சாலைகள் மூடப்பட்டன. தொழிலாளர்கள் வேலை இழந்தனர். விவசாயிகள் பாசனம் செய்ய முடியாமல் பரிதவித்தனர். அன்று எந்தப் புதிய மின் திட்டங்களும் அவர்கள் தொடங்கவில்லை. மத்திய அரசில் அங்கம் வகித்த அவர்கள் மத்திய அரசை நிர்ப்பந்தப்படுத்தி தி.மு.க. தலைவர் கருணாநிதி தன் மகனுக்கும், மருமகனுக்கும், தன் பேரனுக்கும் மத்தியில் வளம் உள்ள இலாகாக்களைப் பெறுவதிலேயே குறியாக இருந்தார். அவர்கள் பெற்ற இலாகாமூலம் தமிழக மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை. ஆனால், அதன்மூலம் தன் குடும்பத்தின் வருவாயைப் பெருக்கிக் கொண்டார்கள். மூன்றாவது முறையாகத் தமிழக



2014 பிப்ரவரி 17] [திரு. ஆர்.என். கிட்டுசாமி]

முதல்வராகப் பொறுப்பேற்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடனில் மூழ்கிப்போன மின் வாரியத்தைக் காப்பாற்றி, கடனுக்காக கடந்த ஆண்டு 1,000 கோடி ரூபாயும், இந்த ஆண்டு 2,000 கோடி ரூபாயும் ஒதுக்கியுள்ளார்கள். மேலும், மின் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு புதிய திட்டங்களும், வெளி மாநிலங்களில் இருந்து மின்சாரம் பெற புதிய மின் வழித்தடங்களையும் உருவாக்கியுள்ளார்கள். இருண்ட தமிழகத்தை ஒளி பெறச் செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1-00*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் போக்குவரத்துத் துறையும் கடனில் மூழ்கியது. பல்வேறு பேருந்துகள் நிறுத்தப்பட்டன. விபத்து நிவாரணம் வேண்டி பல நூறு பேருந்துகள் வழக்கு மன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டன. இப்படிச் செயல்படாத போக்குவரத்துத் துறையை செயல்பட வைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* 2011 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 19,167 ஆக இருந்த பேருந்துகளின் எண்ணிக்கையை, 2014 ஜனவரியில் 20,634 ஆக உயர்த்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* மூன்றாண்டுகளில் 3,994 புதிய பேருந்துகள் வாங்க 697.96 கோடி ரூபாயை அள்ளிக் கொடுத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இவ்வாண்டு, 1,000 புதிய பேருந்துகள் வாங்க 200 கோடி ரூபாயை அளித்துள்ளார்கள். போக்குவரத்துத் துறையில் இருந்த சீர்கேடுகளைச் சீர் செய்து, செம்மைப்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறையையும் இவர்கள் விட்டு வைக்கவில்லை. பல மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இல்லாமல் இருந்தார்கள். மருத்துவர்கள் இருந்தால் மருந்துகள் இல்லை. பல மருத்துவமனைகளில் மருத்துவப் பரிசோதனை கருவிகளும் பழுதாகிக் கிடந்தன. அந்தத் துறையிலும் நிருவாக சீர்கேடுகள். அதனையும் சீர்படுத்தி புதிய மருத்துவர்கள்,

[திரு. ஆர்.என். கிட்டுசாமி] [2014 பிப்ரவரி 17

செவிலியர்கள் மற்றும் பணியாளர்களை நியமித்தும், மருத்துவமனைகளைத் தரம் உயர்த்தியும், அரசு மருத்துவமனைகளில் மக்களுக்குச் சிறந்த மருத்துவம் பெறவும், மருந்துகள் வழங்கவும் உறுதி செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் 15 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அளவிற்கு தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. இந்த மருத்துவமனைகளுக்கு 351 மருத்துவப் பணியிடங்களும், 918 பிற பணியிடங்களும் நிரப்பப்படும் என்றும் 78 கோடி ரூபாய் மதிப்பில் கட்டடங்களும், கருவிகளும் வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளார்கள். தற்போது ஏழை மக்கள் மருந்துகளும், மாத்திரைகளும் வாங்க மலிவு விலை 'அம்மா மருந்தகம்' அமைத்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நல்வாழ்வுத் துறையில் மகத்தான திட்டங்களை அறிவித்து, சாதனைகள் பல படைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். கருவில் உள்ள சிசுக்களும் காப்பாற்றப்பட வேண்டும், பிறக்கின்ற குழந்தைகள் ஆரோக்கியத்துடன் பிறக்க வேண்டும், எடை குறைவில்லாமல் பிறக்க வேண்டும் என்று கர்ப்பிணிப் பெண்களுக்கு பேறு கால உதவியாக 12,000 ரூபாயை வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில தலைவர்கள் ஓட்டுக்காக மக்களுக்கு திட்டங்களைத் தீட்டுவார்கள். ஆனால் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாட்டு மக்களின் வளர்ச்சிக்காக திட்டங்களை தீட்டுபவர். மக்களின் வரிப் பணத்தில் தன் குடும்ப மக்களுக்காக திட்டம் போட்டவர் முன்னாள் முதல்வர் கருணாநிதி. மக்களின் வரிப் பணம் மக்களுக்கே முழுமையாகச் செல்ல வேண்டும் என்று நினைப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்களுக்கு தான் அறிவித்த திட்டங்கள் அனைத்தும் நேரடியாகக் கிடைக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழகத்தில் ஒரு கோடியே 83 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் விலையில்லாமல் 20 கிலோ அரிசி கொடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஏழை



2014 பிப்ரவரி 17] [திரு. ஆர்.என். கிட்டுசாமி]

மக்களின் பசி தீர்த்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். முதியோர், அனாதைகள், ஆதரவற்றோர், கணவனால் கைவிடப்பட்டவர்கள், விதவைத் தாய்மார்கள், கடும் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் வழங்கி அவர்களின் எஞ்சிய காலத்திற்கு உயிர் வாழ உறுதியளித்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது மாற்றுத் திறனாளிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் என்பதை 1,500 ரூபாயாக அதிகரித்து அவர்களுக்கு ஏற்றத்தைக் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பள்ளிக் கல்வித் துறையிலே புரட்சி, உயர் கல்வித் துறையிலே வளர்ச்சி பள்ளி மாணவ, மாணவிகளின் நலனைக் கருத்திலே கொண்டு ஒன்றாம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை காலில் அணிகின்ற செருப்பிலிருந்து மேலுக்கு அணியும் சீருடைகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், பேனா, பென்சில், ரப்பர், இங்க் பாட்டில், ஜியோமெட்ரி பாக்ஸ், கலர் பென்சில் ஆகியவற்றை எடுத்துச் செல்ல புத்தகப் பை. 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு 1,500 ரூபாய், 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு 2,000 ரூபாய், விலையில்லா மிதி வண்டி, விலையில்லா மடிக்கணினி வழங்கி தாழ்த்தப்பட்ட பழங்குடி மாணவ, மாணவிகளுக்கும் தொழில் சார்ந்த உயர் கல்வி பெற அனைத்துச் செலவுகளையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களைக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்கள், நாட்டின் விடுதலைக்காகப் போராடிய தியாகிகளுக்கும் சிறப்புச் செய்துள்ளார்கள். தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சிக்காக பாடுபட்ட தலைவர்களையும், தியாகசீலர்களையும் மாண்புமிகு அம்மா அவர்கள் மறவாமல் அவர்களுக்கும் மரியாதை செய்துள்ளார்கள். அந்தவகையில், எங்கள் மாவட்டத்தில் உள்ள எனது தொகுதியில் (மணியடிக்கப்பெற்றது) விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலைக்கு ஓடாநிலையில் மணிமண்டபம், சங்கரியில் நினைவு மண்டபம் ஆகியவற்றைக் கட்டி மாண்புமிகு

[திரு. ஆர்.என். கிட்டுசாமி] [2014 பிப்ரவரி 17

அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைத்துச் சிறப்பு சேர்த்துள்ளார்கள்.

750 ஆண்டுகளுக்கு முன்னால் ஈரோடு— பவானியில் அணைகட்டி, கொடுமுடி நொய்யல் தாண்டி கரூர் வரை வாய்க்கால் வெட்டியவர் காளிங்கராயன். அந்தத் தியாக சீலருக்கு சிறப்பு செய்ய பவானி காளிங்கராயன்பாளையத்தில், காளிங்கராயன் அவர்களின் திருவுருவச் சிலையும், பூங்காவும் அமைக்க ஆணை பிறப்பித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். காளிங்கராயன் வெட்டிய கால்வாயில் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் சாயக்கழிவு நீர் கலந்தது, விவசாயம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. விவசாயத் தொழிலாளர்கள் வேலை செய்ய முடியாமல் தவித்தார்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டுசாமி, உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதல்வராக மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்றவுடன்தான் காளிங்கராயன் பகுதி விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, காளிங்கராயன் வாய்க்காலில் சாய நீர்க் கழிவு கலப்பதைத் தடுக்க துரித நடவடிக்கை எடுத்து, வாய்க்காலைச் சீரமைக்க முதலிலே 50 கோடி ரூபாயும், மீண்டும் 41 கோடி ரூபாயும், மொத்தம் 91 கோடி ரூபாயைக் கொடுத்து சீரமைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாநகர மக்களின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும்வண்ணம், ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை அருகிலே ரவுண்டானா அமைக்க 11 கோடி ரூபாயும், மேம்பாலம் அமைக்க முதல்கட்ட மற்றும் ஆய்வுப் பணிக்காக 22 கோடி ரூபாய் கொடுத்து ஆணை பிறப்பித்தவர் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மொடக்குறிச்சி தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியைக் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மொடக்குறிச்சி தொகுதியிலே அவல்பூந்துறை பகுதியில் சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பிலுள்ள குளத்தைத் தூர் வாரி படகு இல்லமும், பூங்காவும் அமைக்க ஆணை பிறப்பித்தவர் புரட்சித் தலைவி



2014 பிப்ரவரி 17] [திரு. ஆர்.என். கிட்டுசாமி]

அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஈரோடு மாவட்ட மக்கள் என்றைக்கும் அம்மா அவர்களுக்கு நன்றியுணர்வோடு இருப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்வதோடு மட்டுமல்ல, (மேசையைத் தட்டும் ஒலி) மொடக்குறிச்சி தொகுதி மக்களின் சார்பாகவும், ஈரோடு மாவட்ட மக்களின் சார்பாகவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்து, எனக்கு இந்த நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

***திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் நிதியாண்டின் தமிழக நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பாக மன வளர்ச்சி குன்றியோருக்கான மாதாந்திர உதவித்தொகை 1,500 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு மழைக் கால உதவித் தொகையாக ரூ.4,000/- வழங்கியிருப்பது பாராட்டுக்குரியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள், மாண்புமிகு பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் குறித்து பல்வேறு கருத்துகளை இங்கே தெரிவித்தார்கள். மன்மோகன் சிங் அரசு, மன்மோகன் சிங் அரசு என்று தெரிவித்தார். அவரையே நாங்கள் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் என்று மரியாதையாகக் குறிப்பிடுகின்றோம். நாட்டின் பிரதமரை மாண்புமிகு என்று அவர் மரியாதையாகப் பேச வேண்டுமென்று நான் நினைக்கிறேன். மூத்த உறுப்பினர், அவருக்கு நான் சொல்லித் தர வேண்டிய அவசியமில்லை. அந்த விதத்தில் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

[2014 பிப்ரவரி 17

**செல்வி கே. பாலபாரதி:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரையில் எந்த தலைவர்களையும், தனிப்பட்ட முறையிலே எப்பொழுதும் விமர்சனம் செய்த வரலாறோ, நிகழ்வுகளோ கிடையாது. மரியாதைக்குரிய இந்திய நாட்டினுடைய பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களை, மன்மோகன் சிங் அவர்கள் என்றுதான் எங்களது அருமைத் தோழர் பாலகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்தார். மற்றபடி மத்திய அரசினுடைய மக்கள்விரோதக் கொள்கைகள்மீதுதான் எங்களுக்குக் கோபமே தவிர, தனிப்பட்ட முறையில் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள்மீது எங்களுக்கு எந்தவொரு கோபமும் கிடையாது. ஆகவே, தனி நபர் மீதான புகழ்ச்சியோ, பாராட்டோ அல்லது விருப்பு வெறுப்போ எங்களுக்கு எப்பொழுதும் கிடையாது. கொள்கைகளை மட்டும்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி விமர்சனம் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதை கொடுத்தால் சந்தோஷம். அந்த விதத்தில், தனி நபர் விமர்சனத்தை மீறி ஒருவரை, நாட்டின் பிரதமரை, மரியாதையோடு address செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் தவறு ஒன்றும் இல்லை. நாங்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் என்று மரியாதையோடு அழைக்கிறோம். அதுபோல எதிர்க்கட்சித் தலைவரை மரியாதையோடு அழைக்கிறோம். அதுபோல். . .

பிற்பகல் *1-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் தெரிவித்த கருத்துக்குப் பதில் அளித்தாகிவிட்டது. திரும்பவும், அதையே நீங்கள் பேசிக்கொண்டிருந்தால், உங்களுடைய நேரம்தான் குறைகிறது. அதனால் நீங்கள் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதை தருகிறோம் என்ற அளவில் இருக்கிறார்கள்.



2014 பிப்ரவரி 17] [திருமதி எஸ். விஜயதரணி]

அதற்கு சந்தோஷம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் கூட்டணி குறித்து நிறைய விமர்சனங்கள் செய்தார்கள். நான் அவரைக் கேட்க விரும்புகிறேன். ** கூட்டணியைக் குறித்து, இவர்கள் எங்களைக் குறித்து விமர்சனம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் அனுமானத்தோடு தெரிவித்த அந்தக் கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் கூட்டணி குறித்து தெரிவித்த கருத்துகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், நீங்கள் உட்காருங்கள். அவர் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் காங்கிரஸ் கூட்டணி குறித்து கூறியவற்றையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பேசிய பேச்சை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அந்த விதத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** இருக்கட்டும், வரும் காலம் பதில் சொல்லும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அவையில் பேசும்போது, ஒழுங்குமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். இதுபோல, தனிப்பட்ட முறையில் விமர்சனம் செய்வது சரியல்ல. நீங்கள் சப்ஜெக்ட்டில் பேசுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பேச்சு தனி நபர் விமர்சனம் கிடையாது. அவர்கள் எங்களைக் குறித்து விமர்சனம் செய்தார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திருமதி எஸ். விஜயதரணி] [2014 பிப்ரவரி 17

அப்பொழுது நான் பாயிண்ட்டை raise செய்தபோது, எனக்கு வாய்ப்பளிக்கப்படும் என்று நீங்கள் சொன்னீர்கள். அந்த வகையில், நான் நிச்சயமாக அதற்குப் பதில் கேட்கிறேன். அவரிடம் நான் அந்தப் பதிலைக் கேட்டேன். ஏனென்றால், அவருடைய கூட்டணியைப் பற்றி விமர்சனம் செய்ய அவருக்கு அனுமதி கொடுக்கும்போது, எனக்கும் அந்த அனுமதி நியாயமாகத் தரப்பட வேண்டும் என்பதுதான் எனது கோரிக்கை. அது தவறில்லை என்று நான் நினைக்கிறேன்.

*(தே.மு.தி.க. உறுப்பினர்கள் சிலர் மேசையைத் தட்டினர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் சொன்ன கருத்துக்கு மறுப்புச் சொன்னார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னவுடனேயே, தங்களை அறியாமலேயே அவர்கள் மேசையைத்தட்டி, ஆரவாரம் செய்து, நாங்கள் உங்களோடு வரவிருக்கிறோம், வரவிருக்கிறோம் என்று ஆரவாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர்களின் கைதட்டலிலிருந்து பூனைக் குட்டி வெளியே வந்துவிட்டது என்பது தெளிவாகத் தெரிகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும், உங்களுடைய கட்சியின் துணைத் தலைவர் எழுந்திருக்கிறார். மாண்புமிகு திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள், சொல்லுங்கள்.*

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், பேசும்போது 'எனக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும்' என்று தெரிவித்தது நியாயமான கோரிக்கை.



2014 பிப்ரவரி 17] [திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்]

அதற்கு மேசையைத் தட்டினோம். *(குறுக்கீடுகள்)* ஆனால் நாங்கள் காங்கிரஸ் கட்சியுடன் சேருகிறோமா என்பது வேறு. பூனைக் குட்டி வெளியே வரவில்லை, புலி வெளியே வரப் போகிறது. அன்றைக்குத்தான் உங்களுக்குத் தெரியும். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் புலியா, பூனையா என்பது தேர்தலுக்குப் பின் தெரியும். இவர்கள் புலியல்ல, பூனை. இது நாட்டு மக்களுக்குத் தெரியும். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புலி, பூனையெல்லாம் இருக்கட்டும். பொதுத் தேர்தல் முடிந்து, ஆறு மாதம் கழிந்தவுடனே, உள்ளாட்சித் தேர்தல் வந்தது. அந்த உள்ளாட்சித் தேர்தலில் புலியா, பூனையா என்று ஓடினார்கள். அப்பொழுது புலி யார் என்றும், பூனை யார் என்றும் ஏற்கெனவே மக்கள் தீர்ப்பு கொடுத்துவிட்டார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* புலி, அனைத்திந்திய அண்ணா தி.மு.க., பூனை என்றுகூட இவர்களைச் சொல்ல முடியாது. பூனைக்குக்கூட சில திறமைகள் இருக்கின்றன. *(குறுக்கீடுகள்)* அதனால், பூனையோடுகூட ஒப்பிடமுடியாத நிலையிலே இருக்கின்றவர்கள் இவர்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.*

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தலைப் பற்றி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். *2006*-லே தோற்ற வரலாறு, *2009*-லே தோற்ற வரலாறு, *2004*-லே நூற்றுக்கு நூறு, நாற்பது தொகுதிகளிலும் தோற்ற வரலாறும் இருக்கிறது. *(மணியடிக்கப்பெற்றது)*

[2014 பிப்ரவரி 17

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூழ்கிக் கொண்டிருக்கக்கூடிய காங்கிரஸ் கப்பலுக்கு யாராவது கேப்டன் ஆக முடியுமா? ஆவதும் சரியா? *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு பூனைக்கும், புலிக்கும் வித்தியாசம் தெரியாமல் இருக்கிறது, அவர்களுக்கு யார் எது என்ற வித்தியாசமே தெரியாது. ஓர் உதாரணம் சொல்லவேண்டுமென்று சொன்னால் அவர்களுடைய தலைவர் பிரதம மந்திரியைப் பார்த்துவிட்டு, ஜனாதிபதியைப் பார்த்தேன் என்று சொன்னார். வெளியில் நிருபர்கள் கேட்கிறார்கள். “நீங்கள் பார்த்துவிட்டு வந்தது ஜனாதிபதி அல்ல, பிரதம மந்திரிதானே” என்று. “ஏய், உனக்கு என்ன தெரியும்? ஏதும் பேசாமல் இரு.” என்கிறார். *(குறுக்கீடுகள்)* டி.வி.-யில் வருகிறது.

*(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். வெங்கடேசன், உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். இல்லை, எல்லோரும் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** நீங்கள், முதலில் நிதானத்தை உருவாக்கிக்கொள்ளுங்கள். யாரைப் பார்க்கிறோமென்றே தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் இருக்கைக்குச் சென்று உட்காருங்கள். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்தவர் வீட்டுக்குச் சென்று இரங்கல் தெரிவிக்காமல், நன்றி தெரிவிப்பவர் உங்கள் தலைவர். இரங்கல்



2014 பிப்ரவரி 17] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

உரைக்கும், நன்றி உரைக்கும் வித்தியாசம் தெரியாதவர். நீங்கள் போய் உங்கள் தலைவரைப் புலி என்றும். . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரும்பத் திரும்ப பேசிக்கொண்டே இருந்தால் எப்படி? உட்காருங்கள், அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இரங்கலுக்கே செல்வதில்லை என்று சொன்னார்கள். எங்களுக்குக் கொள்கை இருக்கின்றது. எங்களுக்குக் கொள்கை இருக்கின்ற காரணத்தினால்தான், அந்தக் கொள்கையின் அடிப்படையிலே, யார், யார் வீட்டுக்குச் செல்ல வேண்டுமென்று எங்களுக்குத் தெரியும். அவர்கள் வீட்டுக்குச் சென்று கொண்டிருக்கிறோம். அப்படி வீடு இல்லாதவர்கள் எங்கெல்லாமும் செல்லலாம், எங்கெல்லாம் வாய்ப்பு கிடைக்கிறதோ அங்கெல்லாம் ஓடிக்கொண்டிருக்கின்ற வீடு இல்லாதவர்கள்தான் இவர்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மோகன்ராஜ், சொல்லுங்கள். திரு. சு. குணசேகரன், உட்காருங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது நாங்கள் எந்த வீட்டுக்குப் போகப்போகிறோம், என்ன செய்யப்போகிறோம் என்ற பயம் உங்களுக்குத்தான். எங்களுக்கு அல்ல. நாங்கள் தெளிவாக இருக்கிறோம். எங்களுடைய தலைவர் தெளிவான முடிவெடுப்பார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மோகன்ராஜ், உங்களுடைய கருத்தை நீங்கள் சொல்லிவிட்டீர்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 பிப்ரவரி 17

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயம் என்ற வார்த்தையே அகராதியிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருப்பவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். உங்களைப் பார்த்து பூனை என்று சொன்னார்கள். பூனை என்று சொல்வதற்குக்கூடத் தகுதியில்லை. எலிக் குட்டி என்று வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். உங்களைப் பார்த்து யார் பயப்படுவார்கள்? உங்களைப் பார்த்து நீங்களே பயந்துகொண்டிருந்தால்தான் உண்டு. உங்கள் தலைவரைப் பார்த்து நீங்கள் பயப்பட வேண்டியதுதான், உங்களைப் பார்த்து உங்கள் தலைவர் பயப்பட வேண்டியதுதான். எந்த நேரத்தில் அடி விழுமோ, எந்த நேரத்தில் அடி விழுமோ என்று நீங்கள் வேண்டுமானால் பயப்படலாமே தவிர நாட்டு மக்கள், மற்ற கட்சியினர் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். விவாதம் வேறு எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள். *(குறுக்கீடு)* திரு. சு. குணசேகரன், உங்களுக்கு வாய்ப்பு கொடுத்துவிட்டேன், உட்காருங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திற்கு இத்தோடு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்களைப் பேச அழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, பட்ஜெட்மீது பேசுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்த இந்த சப்ஜெக்ட்டை எடுத்தால் குழப்பம்தான் வரும். மதச் சார்புடைய கட்சிகள் ஒன்றிணையும்போது, பொதுவுடைமைக் கட்சிகள் எங்கே கூட்டணி வைத்துக்கொள்வார்கள் என்று அவர்கள் தெரியப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதை விடுத்து, அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போய்விடலாம். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.



2014 பிப்ரவரி 17]

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சி.பி.ஐ.(எம்.), சி.பி.ஐ. ஆகிய இடதுசாரிக் கட்சிகள் மதவாத கட்சிகளோடு எந்தச் சூழ்நிலையிலும் கூட்டணி வைக்காது என்று தெளிவாக அறிவித்திருக்கிறோம். நாங்கள் அறிவித்ததிலிருந்து மாறிய பழக்கமும், வழக்கமும் எங்களுக்கு இல்லை. அது காங்கிரஸ் கட்சியினுடைய குணம். அதோடு காங்கிரஸ் கட்சியோடு கூட்டு இல்லை. *(குறுக்கீடு)* காங்கிரஸ் கட்சியோடும் கூட்டணி இல்லையென்று தெளிவுபடுத்தியிருக்கிறோம். ஆகவே, காங்கிரஸ் அல்லாத, பி.ஜே.பி. அல்லாத கட்சிகளோடு கூட்டு என்ற எங்களுடைய கொள்கைக்கேற்ப தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் மிக முன்கூட்டியே இரண்டு தலைவர்களும் சந்தித்துப் பேசி தெளிவாகக் கூட்டணி அறிவித்துவிட்டார்கள். இங்கே குழப்பமும் இல்லை, கூச்சலும் இல்லை, சிக்கலும் இல்லை, விக்கலும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். விஜயதரணி, பேசி முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி 4.1 சதவீதமாகக் காணப்பட்டுள்ளது. இது தேசிய வளர்ச்சி விகிதத்தில் மிகவும் குறைவாக இருக்கிறது. இதற்குக் காரணங்களைக் கண்டறிய வேண்டும். பின்தங்கிய மாநிலமாகக் கருதப்பட்ட பீகார் மாநிலம் 24.9 சதவீதம் வளர்ச்சியை அடைந்துள்ளது. தமிழகத்தின் வளர்ச்சிக் குறைவைச் சரிசெய்வதற்குள்ள நடவடிக்கைகளில் தமிழக அரசு மென்மேலும் ஈடுபட வேண்டும். தொடர்ந்து பல்வேறு திட்டங்கள், மின் திட்டங்களாக இருக்கட்டும், அனைத்து வளர்ச்சித் திட்டங்களையும் மென்மேலும் ஊக்குவித்து, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் மக்கள்தொகை சுமார் 7 கோடி ஆகும். நமக்குத் தேவையான உணவு உற்பத்தி செய்யும் விளைநிலங்களின் பரப்பளவு தற்பொழுது குறைந்துள்ளது. 2012 ஆம் ஆண்டு நெல் விவசாயப் பரப்பு கடந்த ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 19.02 இலட்சம் எக்டேரிலிருந்து தங்கள் ஆட்சியில் 21.35 இலட்சம்

[திருமதி எஸ். விஜயதரணி] [2014 பிப்ரவரி 17

எக்டேராக உயர்ந்துள்ளதாக அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், நடைமுறையில் நிலைமை தலைகீழாக உள்ளது. நெல் விவசாயப் பரப்பளவு அதிகரிக்கவில்லை, பிளாட்டுகளாக வகைமாற்றம் ஆகியுள்ளது. எனவே, இதைத் தடுக்கும்பொருட்டு, தமிழக அரசு, கேரளாவைப்போல நன்னீர் நிலம் மற்றும் நெல் சாகுபடி பரப்பளவு பாதுகாப்புச் சட்டத்தினை நிறைவேற்ற வேண்டுமென்று கோருகிறேன்.

தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட அம்மா திட்டத்தின்கீழ் ஓய்வூதியம், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், முதியோர், மாற்றுத் திறனாளிகளுக்கு ஓய்வூதியத் திட்டம் அறிவிக்கப்பட்டு, மத்திய அரசு 500 ரூபாயும், மாநில அரசின் பங்களிப்பாக 500 ரூபாயும் சேர்த்து ஆயிரம் ரூபாய் ஓய்வூதியத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது இந்தத் திட்டத்தின்கீழ். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் தவறான தகவல்களை இந்த அவையிலே தந்து கொண்டிருக்கிறார்கள். இதே அவையிலே பல முறை இதுசம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கும்போதே நாங்கள் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான் இந்தியாவிலேயே அதிகமாகத் தந்து கொண்டிருக்கிறது. மத்திய சர்க்கார் தரக்கூடியது 200 ரூபாய். அதுவும் மாநிலம் வாரியாக மாற்றி, மாற்றி தந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிற்கு அவர்கள் வெறும் 200 ரூபாய்தான் தருகிறார்கள். அதனுடன் மேலும் 800 ரூபாய் சேர்த்து ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருப்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) இதுகுறித்துப் பல முறை இந்த அவையிலே பேசப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். முழுப் பூசணிக்காயைச் சோற்றுக்குள் வைத்து அமுக்குவதுபோல மத்திய அரசு 500 ரூபாய் தருகிறது என்று சொல்வது எந்த விதத்தில் நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.



2014 பிப்ரவரி 17]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் பேசுகிறபோது தமிழகத்தினுடைய நிதிநிலையைக் குறிப்பிட்டு, பீகார் மாநிலத்தினுடைய பொருளாதார வளர்ச்சியைப்பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள், கூடுதலாக இருக்கிறதென்று சொன்னார்கள். இந்தியா என்ற நாட்டில் மாநிலங்கள் அனைத்தும் மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில், மத்திய அரசு எடுக்கின்ற முடிவுகளின்படி, அதனுடைய பரிணாம வளர்ச்சி, மாநிலங்களுடைய பொருளாதார வளர்ச்சி இருக்கும் என்று கணிக்கப்படுகிறது. மத்திய அரசு தமிழகத்தைத் தொடர்ந்து வஞ்சித்துக் கொண்டிருக்கின்றது. ஒவ்வோர் ஆண்டும் மத்திய நிதித் தொகுப்பிலிருந்து நிதியொதுக்கம் செய்யப்படுகிறபோது நமது மாநிலத்திற்கு வழங்க வேண்டிய வரையறைக்கு உரிய நிதியை அவர்கள் கொடுப்பதில்லை. நமது மாநிலத்திற்கு வருடாந்திர மானியமாகத் தர வேண்டிய நிதியையும் அவர்கள் தருவதில்லை. தொடர்ந்து குறைந்த அளவிலேயே அவர்கள் கொடுக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. மத்திய அரசினுடைய தவறான பொருளாதாரக் கொள்கையினால் இன்றைக்கு இந்தியாவில் ஒரு மிகப் பெரிய மந்த சூழ்நிலை, பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த வீழ்ச்சி இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களையும் பாதித்திருக்கின்றது.

பீகார் மாநிலத்தை இவர்கள் இங்கே உதாரணமாகச் சொன்னார்கள். பீகாரைப் பொறுத்தவரையில், அங்கே கூட்டணி அமைக்க வேண்டுமென்ற நினைப்பில் மத்திய அரசு மாநில அரசுக்குப் போதிய நிதியை மட்டுமல்லாமல், ஆயிரம் கோடி ரூபாயை அதிகமாகக் கொடுத்து, அங்கு கூட்டணிப் பிச்சை கேட்கின்ற சூழ்நிலைதான் இருக்கின்றது. நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அம்மா அவர்கள் மாநிலத்திலிருந்து பெறுகின்ற நிதியை, நம்முடைய சொந்த வரி வருவாயில், மிகவும் சிக்கனமாக, ஒதுக்க வேண்டிய அனைத்து நலத் திட்டங்களுக்கும் ஒதுக்குகிறார்கள். பொருளாதார மந்த சூழ்நிலை என்று சொன்னால், அந்தப் பொருளாதார மந்த சூழ்நிலையால் நம்முடைய மாநிலம் பாதிக்கப்படுவதற்கான சூழ்நிலை இருந்தாலும், அந்தப் பாதிப்பினால் ஏழையெளிய மக்கள் எந்தவிதத்திலும் பாதிப்பு அடையாத அளவிற்கு, 49,000 கோடி ரூபாயை சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு மட்டும் மாண்புமிகு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 பிப்ரவரி 17

அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-25

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு மட்டும் என்று சொன்னால், ஒரு மனிதனுக்குத் தேவையான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம், இதனை நல்ல ஆட்சியாளர்கள் அனைத்துத் தரப்பட்ட மக்களுக்கும் குறிப்பாக, வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களுக்கு உறுதி செய்யவேண்டும். அதைத்தான் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் தங்களுடைய ஆட்சியின் இலட்சியமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

மத்திய அரசு எவ்வளவு வஞ்சித்தாலும், மாநிலத்தினுடைய சொந்த நிதியாதாரத்தைக் கொண்டு, இவ்வளவு சிறந்த ஒரு நிதிநிலை அறிக்கையைத் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக மாண்புமிகு அம்மா அவர்கள் தந்து கொண்டிருக்கின்றார்கள். நான்காம் ஆண்டாக, வரப்போகின்ற நிதியாண்டிற்கும் ஒரு சிறப்பான நிதியொதுக்கத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் செய்திருக்கின்றார்கள். அதற்காக எந்தத் துறைக்கும் நிதியைக் குறைக்கவில்லை. அதேசமயத்தில் மாநில மக்கள் பயன் அடையும் வகையில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கி, முழுப் பாதுகாப்பினையும் மாண்புமிகு அம்மா அவர்கள் உறுதி செய்து இருக்கின்றார்கள் என்பதனை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காங்கிரஸ் அரசு தனக்கு வேண்டிய மாநிலங்களுக்கு சுயநலத்திற்காக அதிகமான நிதியை ஒதுக்குகின்ற காரணத்தினால் அங்கே பொருளாதார வளர்ச்சி அடைந்திருக்கலாம். அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள்தான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் நான் அவர்களுக்கு இந்தப் பதிலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .



2014 பிப்ரவரி 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் பேசும்போது, நெல்லின் சாகுபடிப் பரப்பு குறைந்ததாக ஒரு குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறார்கள். அதாவது, வடகிழக்குப் பருவமழை இந்த ஆண்டும் 33 சதவிகிதம் குறைந்திருந்தது. இதனால் 27 மாவட்டங்களிலும் இயல்பான மழையைவிடக் குறைவான மழையே பெய்தது. இருந்தாலுங்கூட, நெல்லின் சாகுபடிப் பரப்பளவு குறையாத அளவிற்கு சாகுபடி செய்யவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு உண்டு. குறுவைப் பயிரைப் பொறுத்தவரையிலே, தமிழகத்திற்குத் தரவேண்டிய தண்ணீரை கர்நாடக அரசு தராமல் வஞ்சித்தது. உரிய காலத்தில், உரிய நேரத்தில் காவேரியில் தண்ணீரைத் திறந்து விடாததால், டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி செய்யத் தேவையான நீரை நிர்ணயம் செய்யப்பட்ட தேதியில், அதாவது ஜூன் 12 ஆம் தேதியன்று மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்க இயலாத நிலை ஏற்பட்டது. கடந்த ஆண்டு மேட்டூர் அணையின் தண்ணீர் இருப்பு சுமார் 79 அடி ஜூன் 2012-லே. நடப்பு ஆண்டில் 16.97 அடி தண்ணீர் மட்டும் ஜூன் மாதம் 13 ஆம் தேதி இருந்தது. இருந்தாலுங்கூட, மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டெல்டா மாவட்ட விவசாயிகளின் நிலையினை அறிந்து, டெல்டா மாவட்டங்களிலே 12 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்க கனிவுடன் ஆணையிட்டதோடு, ரூ.18 கோடி மதிப்பீட்டில் சிறப்பு குறுவை சாகுபடித் திட்டத்தினை காவேரி டெல்டா விவசாயிகளுக்குக் கருணையோடு வழங்கினார்கள். அதனால், இன்றைக்கு அந்த விவசாயிகள் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். இதன் பயனாக குறுவை சாகுபடிப் பருவத்தில், இயல்பான சாகுபடி பரப்பான 3.25 இலட்சம் ஏக்கருக்கு, 2 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. டெல்டா அல்லாத இதர மாவட்டங்களில் 3.472 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு, ஆக மொத்தத்தில் கார் குறுவை சொர்ணவாரி பருவத்தில் 5.522 இலட்சம் ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

சம்பா பருவத்தைப் பொறுத்தவரையிலே, டெல்டா மாவட்ட விவசாயிகள் சம்பா சாகுபடியை முன்கூட்டியே துவங்குவதற்கு

[திரு. செ. தாமோதரன்] [2014 பிப்ரவரி 17

மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் ஆகஸ்ட் 2 ஆம் தேதியன்று திறக்க நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதோடு, நடப்பாண்டிலே மேட்டூர் அணையின் நீர் மட்டத்தின் இருப்பினைக் கண்காணித்து வர அறிவுறுத்தியதின் அடிப்படையிலே, டெல்டா மாவட்டங்களில் நீர்ப் பங்கீட்டு முறையினைக் கடைப்பிடிக்க முடிந்தது. அனைத்துப் பகுதிகளுக்கும் சீராக பாசன நீர் கிடைத்தது. இதனால் நடப்பாண்டிலே சம்பா, தாளடி நெல் சாகுபடி 13.43 இலட்சம் ஏக்கர் பயிரிடப்பட்டு, கடந்த ஆண்டைவிட 76,000 ஏக்கர் கூடுதலாகப் பயிரிடப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஓய்வூதியத் திட்டத்தில் பலருக்கும் உத்தரவுகள் வழங்கப்பட்டு, 4 அல்லது 5 மாதங்கள் ஆகியும் இதுவரை அவர்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னொரு செய்தியையும் மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். மாநிலத்தினுடைய நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்கிறபோது ஓர் இலக்கினை நாம் நிர்ணயம் செய்கின்றோம். அந்த இலக்கினை நாம் அடைய முடியாததற்கான காரணங்களை நான் ஏற்கெனவே இங்கே தெளிவுபடுத்தியிருந்தேன். மிகப் பெரிய பொருளாதார மந்த சூழ்நிலை, அது நமது மாநிலத்தைப் பாதித்திருக்கிறது என்று. அதனால் வரி வருவாய் குறைந்திருக்கிறது. ஆனால், நம்முடைய மாநிலத்தினுடைய வருவாய் வளர்ச்சி ஒரே சீராக இருக்கிறது. 2011-லிருந்து 2012-க்கு வளர்ச்சியடைந்திருக்கிறது; 2012-லிருந்து 2013-க்கு வளர்ச்சியடைந்திருக்கிறது; 2013-லிருந்து 2014-க்கு உறுதியாக வளர்ச்சி அடையும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2014 பிப்ரவரி 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், பலருக்கும் ஓய்வூதியம் பெறுவதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு 4, 5 மாதங்களாகியும் இதுவரை அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கவில்லை. அதேபோன்று, பத்தாண்டுகளுக்கு மேல் ஓய்வூதியம் வாங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், இவற்றை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'ஓய்வூதியத் தொகை கொடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது' என்று சொல்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஓய்வூதியத் தொகை, 500 ரூபாய் என்று இருந்ததை—2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஓய்வூதியம் 500 ரூபாய் மட்டும் பெற்று வந்த பயனாளிகளுக்கு—மாண்புமிகு முதல்வர் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு 1,000 ரூபாய் என்று இரட்டிப்புச் செய்து 1-5-2011 முதல் அனைத்துப் பயனாளிகளுக்கும் இன்று வரை வழங்கப்பட்டு வருகிறது. இதில், குறிப்பிட்டு ஏதாவது புகார் இருந்தால், ஆதாரத்தோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு தெரிவிக்க வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் இதுவரை மொத்தம் 36 இலட்சத்து 40 ஆயிரம் பயனாளிகள் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள். கடந்த கால ஆட்சியில் வெறும் 21 இலட்சம் பயனாளிகள்தான் ஓய்வூதியம் பெற்று வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த கால ஆட்சியில், 2011 ஆம் ஆண்டில் 1,200 கோடி என்று இருந்த ஓய்வூதிய ஒதுக்கீட்டுத் தொகை, மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராகப் பதவியேற்ற பிறகு சுமார் 4,200 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டு, 3,000 கோடி ரூபாய் அதிகமாக இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்கள் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2014 பிப்ரவரி 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியம் நிறுத்தி வைக்கப்பட்டோருடைய விண்ணப்பங்கள், விவரங்கள் போன்றவற்றை வாங்கியிருக்கிறோம். ரொம்ப வெயிட்டாக, நிறைய இருக்கிறது. அதனால், சட்டமன்றத்திற்குக் கொண்டுவர முடியவில்லை. 16,000 பேருக்குமேல் இப்போது ஆர்டர் வழங்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய நகலையும் அத்தாட்சிக்காக வாங்கிக் கொண்டிருக்கின்றோம். அதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவரகள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த ஆதாரங்களையெல்லாம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்துவிட்டுப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, பேசி முடியுங்கள், 22 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** அதில் நான் இரண்டு நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு என்ன செய்வது?

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியம் பெறுவதிலிருந்து விடப்பட்டவர்கள், இனி புதியதாகக் கிடைக்க வேண்டியவர்கள், உத்தரவு பெற்றவர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கி சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சாலைகள் மிகவும் பழுதடைந்து, போக்குவரத்திற்கு இலாயக்கற்ற சூழ்நிலையில் இருக்கின்றன. தற்போது NH-47 சாலையை மாநில அரசிடம் ஒப்படைத்து இருப்பதாக கூறியிருக்கிறார்கள். அதற்கும் நிதிகள் ஒதுக்கி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.



2014 பிப்ரவரி 17]

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியில் காங்கிரஸ் ஆட்சிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது, மத்திய அரசால் பராமரிக்கப்படுகின்ற சாலை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்த கட்சி, மத்தியில் ஆட்சியில் இருக்கின்ற காரணத்தால், அங்கே நிதியைப் பெற்று, தாராளமாக அந்தச் சாலையை அமைத்திருக்கலாம். ஆனால், அவர்கள் அமைக்க முடியாத காரணத்தினால்தான் மாநிலத்திற்கு அந்தச் சாலையை ஒப்படைக்கப் போகிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தமிழகத்திலே அந்தச் சாலை இருக்கின்ற காரணத்தினால், மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றபொழுது, அந்தச் சாலைப் பணியை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, வேறு சப்ஜெக்ட்டிற்குப் போகாதீர்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இன்னும் இரண்டு நிமிடங்கள் தாருங்கள். சாலைகள் அமைத்துத் தரப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் காடுகள் குறித்த பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இதுகுறித்து, தொடர்ந்து 2, 3 ஆண்டுகளாகச் சட்டமன்றத்தில் பேசியிருக்கிறோம். அனைத்துப் பட்டா நிலங்களையும் இதிலிருந்து விடுவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்ததன் அடிப்படையில், அந்தச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டு, ஒரு குழுவும் நியமிக்கப்பட்டு, அந்தக் குழு கன்னியாகுமரி மாவட்டத்தைப் பார்வையிட்டு சென்றது. அந்தக் குழுவின் அறிக்கை இதுவரை தாக்கல் செய்யப்படவில்லை. அது விரைவில் தாக்கல் செய்யப்பட்டு, அதற்குண்டான பரிந்துரைகளை நிறைவேற்றி, அந்தச் சட்டத்திலிருந்து அனைத்துப் பட்டா நிலங்களையும் விடுவிக்கவேண்டும். அங்குள்ள மக்கள் மிகுந்த கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் ஏழை ஜனங்கள். அவர்களுக்கு கடன், குழந்தைகளின் திருமணம், படிப்பு போன்றவைகளுக்கெல்லாம் இந்தப் பணம் மிகவும்

[திருமதி எஸ். விஜயதரணி] [2014 பிப்ரவரி 17

*தேவைப்படுகிறது. அவர்களுடைய சிறிய நிலங்கள்கூட தனியார் காடுகள் என்று வகை செய்யப்பட்டுள்ளதால், அவர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இதிலிருந்து விடுவிப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அனைத்துப் பட்டா நிலங்களையும் இதிலிருந்து விடுவித்தால்தான் அது நியாயமாக இருக்கும். மக்கள் வாழக்கூடிய இடங்களை காடுகள் என்று கூறுவது சரியானதாக இல்லையென்று நான் கருதுகிறேன். இந்தச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கேரளாவில் இந்தச் சட்டத்தில் பெரிய அளவில் மாற்றம் செய்யப்பட்டு, காடுகள் என்ற பகுதிகள் மட்டுமே காடுகளாகப் பார்க்கப்படுகின்றன. மற்ற தனியார் நிலங்கள், பட்டா நிலங்கள் எதையுமே அதில் உள்ளடக்கவில்லை. அதுபோல, நம்முடைய சட்டத்தையும் மாற்றியமைக்கும் விதத்தில், எங்கள் மாவட்டத்தில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்று கோருகிறேன்.*

*ஆவின் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.*

*பிற்பகல் 1-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திருமதி எஸ். விஜயதரணி, உட்காருங்கள். (குறுக்கீடு)*

**திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள். (குறுக்கீடு) திருமதி ம. சக்தி, நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) 25 நிமிடங்கள் ஆகிவிட்டன. நீங்கள், பேசிக்கொண்டேயிருந்தால் அதற்கு நான் என்ன செய்வது? (குறுக்கீடு) நீங்கள்* controversial subject *பேசிக் கொண்டிருந்தால் குறுக்கீடு வரும்; அதற்கு நான் என்ன செய்வது? உங்களால் பேசி முடிக்க முடியவில்லையென்றால் அதற்கு நான் என்ன செய்வது? (குறுக்கீடு)*

*****மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் காடுகளில் பெருமளவில் முறையின்றி மரங்கள் வெட்டப்படுவதைத் தவிர்க்கவும், சூழல்*



2014 பிப்ரவரி 17] [திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்]

*சமன்பாட்டினைப் பாதுகாக்கவும் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தச் சட்டம், கன்னியாகுமரி மாவட்டத்திலே 1979 ஆம் ஆண்டு, இயற்கையாக மரங்களைக் கொண்ட தனியார் காடுகள் வனத்தைப்போல் தோற்றமளிக்கும் தனியார் பட்டா நிலங்களில், குறைந்தபட்சம் 2 ஹெக்டேர் பரப்பளவிற்கு மேற்பட்ட தொடர்ச்சியான இடங்கள் தனியார் காடுகள் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவிக்கை வெளியிடப்பட்டது. இச்சட்டத்தின்படி, எந்தத் தனியார் நில உரிமையாளரும் தனது நிலத்தினை மாவட்டக் குழுவின் முன்னனுமதியின்றி விற்கவோ, அடமானம் வைக்கவோ அல்லது பங்கிடவோ முடியாது. இதுசம்பந்தமாக, பொது மக்களிடையே இருந்துவரும் கொந்தளிப்பான சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, பொது மக்களின் இன்னல்களைக் களைய, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக, தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், 3-9-2012 அன்று வனத் துறை, நில நிருவாகத் துறை மற்றும் வேளாண்மைத் துறைகளைச் சார்ந்த 5 அலுவலர்களைக் கொண்ட உயர் மட்டக் குழுவினை அமைத்து, மேற்படி சட்டம் தொடர்பாக பொது மக்களிடமிருந்து ஆட்சேபணை மனுக்களைப் பெற்றனர். இம்மனுக்களின்மீது தொடர் நடவடிக்கையாக தனியார் காடுகள் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு, முழுமையாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. மிக விரைவிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்குத் தீர்வு காண்பார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

*****திருமதி ம. சக்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) கனியிடை ஏறிய சுளையும், முற்றல் கழியிடை ஏறிய சாறும், பனிமலர் ஏறிய தேனும், காய்ச்சுப் பாகிடை ஏறிய சுவையும், (குறுக்கீடு) நனிபசு பொழியும் பாலும், தென்னை நல்கிய குளிர் இளநீரும், (குறுக்கீடு) இனியன என்பேன், அம்மா தங்களை என்னுயிர் என்பேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2014 பிப்ரவரி 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். விஜயதரணி, உட்காருங்கள். 28 நிமிடங்கள் ஆகிவிட்டன, உட்காருங்கள். (குறுக்கீடு)

**திருமதி ம. சக்தி:** தங்கத் தாரகை, தமிழகத்துத் திருமகள்; மங்கா புகழ் விளக்கு; மனிதருள் மாமணி; நிமிர்ந்த நன்னடை; நேர்கொண்ட பார்வை; உயர்ந்த நோக்கம், (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி விஜயதரணி, நீங்கள் கிட்டத்தட்ட 30 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) குறுக்கீடு வந்தால் அதற்கு நான் என்ன செய்வது? (குறுக்கீடு) நீங்கள் குறுக்கீடு இல்லாமல் பேச வேண்டும். (குறுக்கீடு)

**திருமதி ம. சக்தி:** உரத்த சிந்தனை; அயராது உழைப்பு, அசராத நெஞ்சம்: குழந்தை மனது, குன்றாத கருணை உள்ளம் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடு வராமல் நீங்கள்தான் பேசியிருக்க வேண்டும். நீங்கள் குறுக்கீடு வருவது மாதிரி பேசினால், அதற்கு நான் என்ன செய்வது? (குறுக்கீடு) நான் சபையை நடத்த வேண்டும். (குறுக்கீடு) நான் அவையை நடத்த வேண்டும். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள், உட்காருங்கள். திருமதி ம. சக்தி, நீங்கள் பேசுங்கள்.

**திருமதி ம. சக்தி:** குன்றாத கருணை உள்ளம், ஒன்றாக உருவான ஒப்பற்ற காவியமே! இன்றைய தமிழகமே! நாளைய பாரதமே! தங்களது புனித பொற்பாதங்களை வணங்குகின்றேன் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். விஜயதரணி, நான் அவையை நடத்த வேண்டும். பின்னர் பேசிக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) திருமதி சக்தி, நீங்கள் பேசி முடியுங்கள்.

**திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்காக தன்னையும், தன் வாழ்நாளையும் அர்ப்பணித்துக்கொண்ட எங்கள் அம்மா தங்களுக்கு . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். விஜயதரணி, கோரிக்கைகளையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள்.



2014 பிப்ரவரி 17]

**திருமதி எஸ். விஜயதரணி:** கொடுத்துவிடுகிறேன்.

## தொகுதிக் கோரிக்கைகள்

தமிழ்நாட்டில் கன்னியாகுமரி உட்பட உள்ள சுமார் 36,345 திருக்கோயில்களில் தற்காலிக திருக்கோயில் பணியாளர்களான பூசாரிகள், நாதஸ்வரம், தவில் வாசிப்பவர்கள், துப்புரவுப் பணியாளர்கள், காவலாளிகள் சுமார் 9,000 பேர் தினமும் ரூ.40/- முதல் ரூ.150/- வரை சம்பளம் பெறுகிறார்கள். இவர்கள் சுமார் 10 முதல் 20 ஆண்டுகள் வரை பணியாற்றியுள்ளனர். தற்போதைய விலைவாசி உயர்வால் வாழ்க்கை ஓட்டுவது சிரமமாக உள்ளது. எனவே, தினக் கூலி தொகுப்பூதியத்தில் பணிபுரியும் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்க ஆவன செய்ய வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சமூக நலத் துறையின்கீழ் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு இல்லங்களில் பணிபுரியும் தொகுப்பூதிய மற்றும் மதிப்பூதிய பணியாளர்களுக்கு 3 மாதத்திற்கு ஒரு முறைதான் ஊதியம் வழங்கப்படுகிறது. அவர்களுக்கு மாதந்தோறும் ஊதியம் வழங்கிடவும், இவர்களை பணி நிரந்தரம் செய்து, காலமுறை ஊதியம் வழங்க ஆவன செய்ய வேண்டும்.

எல்லைப் போராட்டத் தியாகிகளுக்கு சுதந்திரப் போராட்ட தியாகிகள் போல உதவித் தொகை, அரசு வேலைவாய்ப்பு, கல்வியில் சலுகை, வீட்டு வசதி வழங்க வேண்டும்.

யானைக்கால் நோயின் மூன்றாம் நிலை உள்ளவருக்கு மாதாந்திர உதவித் தொகையும், இலவச பேருந்து பயண அட்டையும் வழங்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் இரப்பர் பால் ஷீட்டுகளை கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் வாங்கி, அரசு இரப்பர் தொழிற்சாலை நிறுவி ஏற்றுமதியை ஊக்கப்படுத்த வேண்டும். தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும்.

மார்த்தாண்டம் பேருந்து நிலைய பணியை விரைந்து முடிக்க வேண்டும்.

ஏ.வி.எம். கால்வாயை தூர் வாரிச் சீரமைக்க வேண்டும்.

எனது தொகுதிக்குட்பட்ட பத்துகாணி பகுதியில் அரசுப் பேருந்தில் Brake failure காரணமாக உயிரிழந்த மாணவி ஸ்வேதா குடும்பத்திற்கு நிவாரணத் தொகையாக அரசு வழங்கிய ரூபாய் ஒரு இலட்சத்தை, ரூபாய் 10 இலட்சமாக உயர்த்தி வழங்கவும், அந்தக் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலைவாய்ப்பும் வழங்க வேண்டும்.

எனது தொகுதிக்குட்பட்ட விரிகோடு பகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைக்க ரூ.65 கோடி மதிப்பீடு செய்து அரசின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது. அதை நிறைவேற்ற வேண்டும்.

குமரி மாவட்டத்தில் 71 கி.மீ. நீள கடற்கரையும், 45 மீனவ கிராமங்கள் நீரோடி காலனி முதல் ஆரோக்கியபுரம் வரை உள்ளது. நல்ல திறமையாக ஆழ்கடல் மீன்பிடித் தொழில் செய்யும் தைரியம் வாய்ந்த மீனவர்கள் வெளிமாவட்டம், வெளி மாநிலம் மற்றும் வெளிநாடு சென்று மீன்பிடித் தொழில் செய்கின்றனர். இவர்கள் நலன் காக்க குமரி கடற்கரையில் மீன் இறங்குதளங்கள், தூண்டில் வளைவுகள், கடல் அரிப்பிலிருந்து தடுக்க கடலரிப்புத் தடுப்புச் சுவர் அமைக்கப்பட வேண்டும்.

மீனவர்கள் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்க G.P.S. கருவி, லைஃப் ஜாக்கட் அனைத்து மீனவர்களுக்கும் இலவசமாக வழங்க வேண்டும்.

கடலில் காணாமல் போகும் மீனவர்களைக் கண்டுபிடிக்க அதிவிரைவு விசைப் படகு கன்னியாகுமரியிலும், குளச்சலிலும் நிறுத்த வேண்டும். மாயமாகும் மீனவர்களை கடலில் தேட குமரியில் ஹெலிகாப்டர் வேண்டும்.

குமரியின் இயற்கை எழிலை ரசிக்க வெளி மாநில, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க கன்னியாகுமரியில் பேட்டரி கார், ரோப் கார், சிலுவை நகரில் இருந்து சன்செட் பாயின்ட் வரை அலங்கார நடைபாதை அமைக்க வேண்டும். விளவங்கோடு தொகுதி, சிதறால் மலைக்கோயிலுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து டெலஸ்கோப், குடிநீர், கழிவறை, சாலை வசதி ஏற்படுத்த வேண்டும்.

தேங்காய்பட்டணம், முட்டம் கடற்கரைகள் மேம்பாடு, வட்டக்கோட்டையை மெருகூட்டி அழகுபடுத்தி, மாத்தூர் தொட்டிப்பாலத்தின் நீர்க் கசிவை சீரமைத்து, திற்பரப்பு குமரிக் குற்றாலத்தை மேம்பாடு செய்ய வேண்டும். தக்கலை புலியூர் குறிச்சி உதயகிரி கோட்டையில் மிருகக்காட்சி சாலை (zoo) அமைக்க வேண்டும்.





விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தேன் உற்பத்தி செய்யும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தேன் அறுவடை செய்யும் காலமான பிப்ரவரி-ஏப்ரல் மாதம் பருவம் அடைந்த காலமாகும். ஜனவரி மாதமே தேன் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். தேன் ஒரு கிலோவுக்கு ரூ.150/- விலை நிர்ணயம் செய்து, தேசிய தேன் வாரியத்தின் அறிவுறுத்தலின் அடிப்படையில் தேனி வளர்ப்போர் குழுமம் அமைத்து தேன் உற்பத்தியாளர்களுக்கு உதவ வேண்டும். நோய் தாக்குதல் கண்டறிந்து அதற்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

மார்த்தாண்டம் பேருந்து நிலையப் பணிக்காக 2009 நவம்பர் 2 ஆம் தேதி அடிக்கல் நாட்டப்பட்டு, 2010 ஜனவரி 27-ல் பணி தொடங்கி, 15 மாதங்களில் 2011 ஏப்ரல் 30 பணி முடிக்க வேண்டுமென்ற ஒப்பந்தம் போடப்பட்டது. ஆனால், இந்தப் பேருந்து நிலையம் ஐந்தாண்டுத் திட்டப் பணிபோல் நடந்து முடிந்துள்ளது. தற்போதுகூட 90% பணிகள்தான் நிறைவுபெற்றுள்ளன. முக்கியமாக பேருந்து ஏற வருபவர்களுக்கு இரண்டு சக்கர, நான்கு சக்கர வாகன காப்பகமும், ஆம்னி பேருந்து நிறுத்தமும் இன்னும் நிறைவடையவில்லை. எனவே, உடனடியாகப் பேருந்து நிலையத்தைத் திறந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டும்.

விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட களியக்காவிளை மீன் சந்தை, மார்த்தாண்டம் வெட்டுமணி மீன் சந்தைகளை நவீனப்படுத்த வேண்டும். இறைச்சிக் கழிவுகள், மீன் கழிவுகளை நகராட்சி நிருவாகம் உடனுக்குடன் அப்புறப்படுத்தி, நோய்த் தொற்று வராமல் பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டும்.

குமரி மாவட்டம், ஆரல்வாய்மொழியில் உற்பத்தி செய்யப்படும் காற்றாலை மின்சாரம் முழுவதையும் அரசு கொள்முதல் செய்து குமரி மாவட்டம் முழுவதும் விநியோகம் செய்ய வேண்டும். 10 ஆம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு பரீட்சை இன்னும் சில நாட்களில் நடைபெற உள்ளதால் தடையில்லா மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

[திருமதி எஸ். விஜயதரணி] [2014 பிப்ரவரி 17

விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட மலையோர கிராமங்களில் மின்னழுத்த குறைபாடு உள்ளது. எனவே, கடையாலுமூடு, ஆறுகாணி, அருமனை போன்ற பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டும்.

அரசு இரப்பர் கழகம் 1960 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு அரசு நிறுவனமாக இருந்தது. 1984 ஆம் ஆண்டு அரசு நிறுவனமாக வனத் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் இருந்து corporationகீழ் வந்துள்ளது. இதனால் இரப்பர் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் தினக் கூலிகளாக பணிபுரிகின்றனர். பால் வெட்டும் தொழிலாளி, பால் வடிப்பவர், இரப்பர் தொழிற்கூடத்தில் பணிபுரிபவர் என அனைத்துத் தொழிலாளர்களையும் பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

2012 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் தேதி முதல் அக்டோபர் 26 ஆம் தேதி வரை லே-ஆஃப் செய்த தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்காமல் உள்ளது. அவர்களுக்கு போனஸ் வழங்கவும், மாதாந்திர ஊதியம் வழங்கவும் அரசு ஆவன செய்ய வேண்டும்.

தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடத்திலிருந்து தேங்காய்பட்டணம், பரக்காணி, கல்பாலத்தடிகடவு, மங்காடு, முளமூட்டுக்கடவு, அஞ்சாலிக்கடவு, விளாத்துறை, கொடுவனந்தோட்டம், விளவங்கோடு, ஆற்றுக்கடவு ஆகிய இடங்களில் தாமிரபரணி ஆற்றில் தடுப்பணை (check-dam) கட்ட வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, திருவட்டாறு மேல்புறம் ஊராட்சி ஒன்றியங்கள் அணைக்கரை-அருவிக்கரை இடையே புதிய பாலம் கட்டப்பட வேண்டும். மேற்புறம் ஊராட்சி ஒன்றியம், கடையாலுமூடு பேரூராட்சி, பேச்சிப்பாறை ஊராட்சி இவற்றை இணைக்கும் விதமாக சக்கரபாணி பாலம் அருகே தாமிரபரணி ஆற்றில் புதிய பாலம் கட்ட வேண்டும்.

விளவங்கோடு ஊராட்சி, ஆற்றுக்கடவு பகுதியில் இருந்து விளாத்துறை ஊராட்சி காப்புக்காடு, விளாத்திவிளை போன்ற பகுதிகளை இணைக்க தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஆற்றுக்கடவு பகுதியில் புதிய பாலம் கட்ட வேண்டும்.



2014 பிப்ரவரி 17] [திருமதி எஸ். விஜயதரணி]

உண்ணாமலைக்கடை பேரூராட்சி, பயணம் வள்ளக்கடவு, வெள்ளாங்கோடு, ஊராட்சி திக்குறிச்சியில் தாமிரபரணி ஆற்றில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பாலப் பணியை விரைந்து முடிக்க வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, உண்ணாமலைக்கடை, பளுகல், களியக்காவிளை, குழித்துறை நகரத்தில் வாடகைக் கட்டடத்தில் செயல்படும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

அருமனை மருத்துவமனையில் முழுநேர மருத்துவர், மருந்தாளுநர், செவிலியர் பணியமர்த்தி வெளி மற்றும் உள் நோயாளிகளுக்குச் சிறந்த சிகிச்சையளிக்க வேண்டும். அருமனை மருத்துவமனையில் செயல்பாட்டு இடமான கடையாலுமூடு பேரூராட்சி, பத்துகாணி, ஆறுகாணி, கற்றுவா, பேணு, ஆலஞ்சோலை ஆகிய ஊர்கள் கேரளாவை ஒட்டியிருப்பதால் கேரளத்தில் உள்ள சிக்குன்குன்யா, டெங்கு போன்ற நோய்கள் எளிதில் மக்களை தாக்குகிறது. எனவே, இதற்கான அனைத்து மருந்துகளும் வழங்கப்பட வேண்டும்.

விளவங்கோடு தொகுதியின் தலையாய பிரச்சினையான தண்ணீர்ப் பிரச்சினை தீர களியக்காவிளை பேரூராட்சி, குழித்துறை நகராட்சிப் பகுதிகளில் திருந்துவபுரம் ஊரின் வடக்குப் பக்கம் உள்ள பெருங்குளம் சுமார் 5 ஏக்கர் பரப்பளவு உள்ளது. இந்தக் குளம் மாசு அடைந்து சேறு, சகதி, ஆகாயத் தாமரை சூழ்ந்து மண்மூடி மேடாக உள்ளது. இந்தக் குளத்தினை தூர் வாரி, மண் எடுத்து விவசாயப் பணிகளுக்குப் பயன்படுத்த வேண்டும். குளத்திற்குத் தண்ணீர் வரும் வழிகள், தண்ணீர் வெளியேறும் வழிகள், கால்வாய்களைச் சீரமைத்து, மடைகள், ஷட்டர்கள் ரிப்பேர் செய்து மக்கள் குளிப்பதற்கு வசதியாக படித்துறையும், கன்றுகாலிகளைக் குளிப்பாட்டுவதற்கு வசதியாக சாய்தளமும் கட்டி, குளத்தின் கரைகளைப் பலப்படுத்தி, குளங்களின் பக்கச் சுவர் கான்கிரீட்டால் கட்டப்பட வேண்டும்.

நாகர்கோவில் நகராட்சி, பெரியவிளை மற்றும் தட்டான்விளை ஊர்களில் ஏழைகளின் நிலத்தை கையகப்படுத்துவதைக் கைவிட வேண்டும்.

[திருமதி எஸ். விஜயதரணி] [2014 பிப்ரவரி 17

விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேவிகோடு ஊராட்சி, தேவிகோடு அரசு BFM உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்ய வேண்டும். இப்பள்ளியில் சுமார் 500 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இங்கு தேவையான இடவசதி உள்ளது.

விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இடைக்கோடு பேரூராட்சி, இடைக்கோடு அரசு H.M. தொடக்கப் பள்ளியில் 1982 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பழைய R.C.C. கட்டடம் பழுதடைந்து மேற்கூரைகள் சிமெண்ட் சிலாப்புகள் பெயர்ந்து, கம்பி வெளியே தெரிகிறது. மாடியில் வெயில் மற்றும் மழைக்காகப் போடப்பட்ட Weathering Course பாழடைந்துவிட்டது. இதனால் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மிகவும் வேதனையடைந்து உள்ளனர். புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும்.

இடைக்கோடு பேரூராட்சிக்குட்பட்ட அண்டுகோடு அரசு H.M. தொடக்கப் பள்ளிக்குத் தேவையான பெஞ்சு, டெஸ்க், கம்ப்யூட்டர், விளையாட்டுப் பொருட்கள் வழங்க வேண்டும். பள்ளிக்குத் தேவையான குடிநீர் வசதியைப் பூர்த்தி செய்ய ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, மின் மோட்டார் பொருத்தி, சின்டெக்ஸ் டேங்க் பொருத்த வேண்டும்.

விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட நட்டாலம் ஊராட்சி, நட்டாலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பழைய ஓட்டுக் கட்டடங்கள் உள்ளன. இந்தக் கட்டடங்கள் பலமின்றி ஓடு உடைந்தும், தரைகள் பெயர்ந்தும், பாதுகாப்பு இல்லாமல் உள்ளது. எனவே, புதிய வகுப்பறைக் கட்டடமும், ஆய்வுக் கூடமும் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும்.

திக்குறிச்சி அரசு மேல்நிலைப் பள்ளிக்கும் புதிய வகுப்பறை கட்டடமும், ஆய்வரங்கமும், ஆய்வுக் கூடமும் கட்ட வேண்டும்.

விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடையாலுமூடு பேரூராட்சியில் மலையோர கிராமங்களான பத்துகாணி, ஆறுகாணியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் மற்றும் வங்கி இல்லை. இங்குள்ள மக்கள் சுமார் 15 கிலோ மீட்டர் பயணம் செய்து அருமனைக்குச் செல்ல வேண்டியுள்ளது.



2014 பிப்ரவரி 17] [திருமதி எஸ். விஜயதரணி]

இதனால் வங்கிச் சேவையை பெறுவதற்கு மலையோர கிராம மக்கள் பெரும் அவதியுறுகின்றனர். பொதுமக்கள் நலன் கருதி அரசு மேற்கூறிய இடங்களில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வேண்டும்.

விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாகோடு பேரூராட்சியில் வெள்ளாங்கோடு ஊராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் குலசேகரம் செல்ல வேண்டுமென்றால் இரண்டு பேருந்துகள் ஏற வேண்டும். குலசேகரம், மார்த்தாண்டத்திற்கு அடுத்தபடியாக உள்ள தொழில் வர்த்தக நிறுவனங்கள் அடங்கிய நகரமாகும். இங்கு உயர் கல்விக் கூடங்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உள்ளது. எனவே, மார்த்தாண்டத்திலிருந்து நேசமணி பாலம், ஞாறான்விளை, திக்குறிச்சி, சிதறால், ஆற்றூர், திருவட்டாறு வழியாக குலசேகரத்திற்கு புதிய பேருந்து இயக்க வேண்டும்.

**திருமதி ம. சக்தி:** இறைவன் அருகிலிருந்து அனைத்து நலன்களையும் அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். விஜயதரணி, உங்களுடைய கொறடா, என்னிடம் வந்து உங்களுக்கு ஐந்து நிமிடங்கள் பேச வாய்ப்புக் கொடுங்கள் என்றுதான் சொன்னார். ஆனால், நீங்கள் 30 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். தொகுதிக் கோரிக்கைகள் பதிவு செய்யப்படும். அப்படியிருந்தும் நீங்கள் சபையை நடத்த விடாமல் குறுக்கீடு செய்வது சரியல்ல. நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடு) நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி சக்தி, பேசி முடியுங்கள். (குறுக்கீடு) 5 நிமிடங்கள் கேட்டுவிட்டு, நீங்கள் 30 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் முடியாது, உட்காருங்கள்.

**திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்காகத் தன்னையும், தன் வாழ்நாளையும் அர்ப்பணித்துக்கொண்ட எங்கள் அம்மா; தங்களுக்கு இறைவன் அருகிலிருந்து அனைத்து நலன்களையும் அள்ளிக்

கொடுத்துக்கொண்டிருக்கிறார். மேலும் கொடுப்பதற்குக் காத்துக்கொண்டிருக்கிறார்.

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்"

என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்கு மெய்யாகிக் கொண்டு வருகிறது அம்மா! (குறுக்கீடு)

பிற்பகல் *1-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். விஜயதரணி, உட்காருங்கள். (குறுக்கீடு) இது முறையல்ல. (குறுக்கீடு) இது முறையல்ல. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி செய்வது முறையல்ல, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் பேசிக் கொள்ளலாம்; நீங்கள் உட்காருங்கள். இது முறையல்ல. (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னவாயினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'

என்ற பாரதியின் கனவை நனவாக்கும் வகையில், இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பள்ளிக் கல்வித் துறைக்கு மட்டும் 17 ஆயிரத்து 731 கோடியே 71 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) கல்விக்கு முன்னுரிமை, கல்லாமை ஒழிந்திடவே, எந்நாளும் கற்பதற்கு ஏற்றம் மிகச் செய்தாய்; ஆசிரியர் நியமனமும், அழகான வகுப்பறையும், கல்விக் கருவிகளும், காலணிப் பையுடனே நோட்டுப் புத்தகமும், நோய் தொற்றா நாப்கினும், கல்வி உதவித் தொகை, கணினிப் பெட்டியும், மிதிவண்டி, சீருடையும், மேன்மைமிகு சத்துணவும், பலப் பல திட்டமுடன் பாங்குடனே அளித்தீர்கள் அம்மா! எத்தனை வசதிகள், ஏராளமான சலுகைகள், அம்மாவின் ஆட்சியிலே, மாணவர்களுக்கில்லை மனக் கவலை; இந்நாளில் மாணவியாய் இருந்திடவே என் ஆசை அம்மா! காவேரி தந்த கலைச் செல்வியே! காண்கின்றேன் கலைவாணியாய் அம்மா உங்களை!





மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளியோர்க்கு 24 மணி நேரமும் மருத்துவ சேவை கிடைத்திட இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 7 ஆயிரத்து 5 கோடியே 2 இலட்சம் ரூபாய் வழங்கி, உடற்பிணி போக்குவதற்கு உன்னதத் திட்டம் பல; உலகத் தரத்திற்கு உயர் சிகிச்சை மருத்துவர்கள், சின்னக் குழந்தைக்குச் சிறப்பான சிகிச்சை பல; ஏழை சிறுவர்களுக்கு விலையில்லா உயர் சிகிச்சை; வசதி குறைந்தோருக்கு மலிவு விலை மருந்தகங்கள்; எல்லோரும் இனி பெறலாம் இணையற்ற உயர் சிகிச்சை; அம்மா மருந்தகத்தில் இல்லாத மருந்து இல்லை; அம்மா மனதில் எந்நாளும் தீதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகையை 1,000/- ரூபாயிலிருந்து 1,500/- ரூபாயாக உயர்த்தி, 284 கோடியே 29 இலட்சம் ரூபாய் ஒதுக்கியதோடு, இரண்டு கால்களும் இழந்து நடக்க முடியாத மாற்றுத் திறனாளிகளுக்கு ஆண்டுக்கு 1,000 விலையில்லா ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டதாலும், (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு அங்கீகாரம் அளிப்பதில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக 2013 ஆம் ஆண்டு தேசிய விருதை தமிழகத்திற்குக் கிடைக்கச் செய்த ஒய்வறியா உத்தமியே, ஓங்கு புகழ் தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியே! அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) ஊற்றாகிப் பெருகிவந்த உங்களது கருணையால், மாற்றுத் திறனாளிகளும் மகத்தான வாழ்வு பெற்றார்கள் இந்நாளில்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் முதுகெலும்பாகச் செயல்படும் விவசாயம் செழிக்க கூட்டுறவு அமைப்புகள்மூலம் அனைத்து உதவிகளும் வழங்க 5,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, விவசாயம் காப்பதற்கு விரிவான காப்பீட்டுத் திட்டம், உழுவதற்கும், அறுப்பதற்கும் உயர்வான நவீன இயந்திரங்கள்; காலத்தில் பயிர் செய்ய கனிவான கடனுதவி; 'மக்களுக்காக நான்; மக்களால் நான்' என்னும் மாதவத்தில் வாழ்கின்ற நம் மாதரசியின் அரசு, கிள்ளித் தருவதை மறந்து, அள்ளி அள்ளிக் குறையாமல் கொடுப்பதை தரணியே அறியும் அம்மா!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இல்லை என்போர் இருக்கையிலே, இருப்பவர்கள் இல்லை என்பார்' என்ற புரட்சித் தலைவரின் தாரக மந்திரத்தை மனதில் கொண்டு, 1 கோடியே 84 இலட்சம் அரிசி அட்டைதாரர்களுக்கு விலையில்லா தரமான

அரிசி வழங்க இந்த நிதியாண்டில் 5,300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் 95 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு விலையில்லா ஃபேன், மிக்சி, கிரைண்டர் வழங்கப்பட்டதுபோல, வரும் நிதியாண்டிலும் 35 இலட்சம் ஃபேன், மிக்சி, கிரைண்டர் வழங்க 2,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், விலையில்லாக் கறவைப் பசுக்களை ஆண்டுக்கு 12 ஆயிரம் பயனாளிகளுக்கு வழங்க 43 கோடியே 65 இலட்சம் ரூபாயும், ஒன்றரை இலட்சம் பயனாளிகளுக்கு 198 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் விலையில்லா ஆடுகள் வழங்கவும், பல்வேறு திருமண உதவித் திட்டங்களுக்கு நடப்பாண்டில் 751 கோடியே 9 இலட்சம் ரூபாயும், பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்திற்கு 105 கோடி ரூபாயும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்திற்கு 716 கோடியே 77 இலட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்து, குறிப்பாக, இந்தத் திட்டத்தின்மூலம் கடந்த ஆண்டு 19 இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்கள் பயன்பெற்றுள்ளார்கள்.

பிற்பகல் 1-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி சக்தி, உரையை முடியுங்கள்.

**திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஏழைத் தாய்மார்களின் வாழ்க்கையில், அம்மா நீங்கள் ஏற்றி வைத்த தீபத்தால் எழிலாகிப் போனதம்மா, ஏற்றமும் கண்டதம்மா! மனமுடைய மாந்தர்களோ மனதார வாழ்த்துகிறார்கள். குணமுடைய பெரியோர்கள் குறைவின்றிப் போற்றுகிறார்கள். அனைவருக்கும் உணவளித்த அன்னபூரணியை அவனியிலே கண்டதுண்டோ, சந்தியத் தாய் பெற்றெடுத்த எங்கள் இந்தியத் தாய், இணையற்ற தனித் தலைவி, இவருக்கு நிகரில்லை இங்கு வாழட்டும் தமிழகமும், வையகமும் இவர் தயவிலே என்று தாலிக்குத் தங்கம் பெற்று மணம் முடித்த மாந்தர்கள் வாழ்த்துகிறார்கள் அம்மா.

பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண் குழந்தைகளின் பள்ளிச் சேர்க்கையை உயர்த்தவும், இடை நிற்றலைக் குறைக்கவும், 3 ஆம் வகுப்பு முதல்





5 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவியருக்கு ஆண்டுக்கு 500 ரூபாயும், 6 ஆம் வகுப்பு படிக்கும் மாணவியருக்கு ஆண்டுக்கு 1,000 ரூபாய் வழங்கி வந்ததை 7 ஆம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்பட்டு ஆண்டுக்கு 1,500 ரூபாய் வழங்க, ரூ.55 கோடியே 11 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, அரிய பல திட்டங்களை வழங்கி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஆதியும் அந்தமுமாக விளங்குகின்ற எங்கள் ஆதிபராசக்தியே, அம்மா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் தந்தை என்று உலக மக்களால் பாராட்டி, போற்றப்படுபவர் மகாத்மா காந்தி அவர்கள்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்திற்குச் சொந்தக்காரர், சமுதாய விழிப்புணர்வு, அரசியலில் புரட்சி செய்தவர் பேரறிஞர் அண்ணா; மேற்கு வங்காளத்தை 30 ஆண்டுகள் ஆட்சி செய்து மங்காப் புகழ் பெற்றவர் ஜோதி பாசு; ஏழைகளின் மனதில் இறைவனாகக் காட்சியளிப்பவர் மக்கள் திலகம், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர்; இந்தியாவின் இரும்பு மங்கை, தன்னிகரற்ற தானைத் தலைவி, சமூக நீதி காத்த வீராங்கனை, மாதர் குல மாணிக்கம், எதிலும் புரட்சி செய்யும் நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களுக்கெல்லாம் இந்திய அரசியல் வரலாற்றில் பேரும், புகழும் நிலைத்திருப்பதற்குக் காரணம் தன்னுடைய சொந்த பந்தம், உற்றார் உறவினர், மகன், மகள், மருமகன், மனைவி, மைத்துனன், பேரன் என்ற யாரையும் அரசியல் வாரிசு என்று அடையாளம் காட்டவில்லை. ஆனால், தற்போது தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் கருணாநிதிக்கும், * எதிர்க்கட்சித் தலைவருக்கும் இது பொருந்துமா? இந்த மாமன்றம் அவர்களை விரைவிலேயே புறக்கணிக்கப்போவதை அம்மா அவர்கள் பார்க்கத்தான் போகிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய கவி பாரதியை நான் கண்டதில்லை. . (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு)

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[2014 பிப்ரவரி 17

**திருமதி ம. சக்தி:** உலகப் பொதுமறை வடித்த வள்ளுவனை நான் பார்த்ததில்லை. ஆன்மிக சிற்பி சுவாமி விவேகானந்தரை நான் அறிந்ததில்லை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திருமதி ம. சக்தி:** உரையை முடித்துக்கொள்கிறேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெயரைச் சொல்லாமல் எதிர்க்கட்சித் தலைவர் என்று சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடு)

**திருமதி ம. சக்தி:** நன்றிதான் சொல்லப்போகிறேன். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் தானும் வாடிய அருட்பெருஞ்ஜோதி வள்ளலாரைப் பார்த்ததில்லை. உலகத்தில் சமதரும சமுதாயத்தை உருவாக்கிய பகவான் இராமானுஜரை நான் கண்டதில்லை. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திருமதி ம. சக்தி:** நன்றி சொல்லி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) யாருடைய பெயரையும் குறிப்பிடாமல் பேசுங்கள்.

**திருமதி ம. சக்தி:** பகவான் இராமானுஜரை நான் கண்டதில்லை. அவர்கள் வாழ்ந்த காலத்தில் நான் பிறந்ததில்லை. ஆனால், இவர்களின் ஒட்டுமொத்த ஓர் உருவ தெய்வமாக தமிழக முதல்வர், நான் அனுதினமும் வணங்கும் கடவுள், என் குடும்ப தெய்வம் என் தாயை நான் காண்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வரலாற்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ** என்று பெயர் குறிப்பிட்டதை மாற்றி எதிர்க்கட்சித் தலைவர் என்று

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2014 பிப்ரவரி 17] [பேரவைத் தலைவர்]

குறிப்பிடும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. அவர் பெயரைக் குறிப்பிட்டதைத்தான் நீங்கள் நீக்கச் சொன்னீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், சொல்லுங்கள். (குறுக்கீடு) என்ன சொல்ல வேண்டும் என்று சொல்லுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ** என்று தவறான தகவலைக் கூறினார். ஆகவே, அந்தப் பெயரை மட்டுமல்ல, எங்கள் தலைவரைப் பற்றிச் சொன்னதையே அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் ஒருமையில் சொன்னதால், பெயரைச் சொன்னார்கள். (குறுக்கீடு) ஒருமையில் பெயரைச் சொன்னார்கள். நான் எதிர்க்கட்சித் தலைவர் என்று மரியாதையாகக் குறிப்பிடச் சொன்னேன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் அவர் பெயரைத் தானே நீக்கச் சொன்னீர்கள்? (குறுக்கீடு) பெயரைத் தானே நீக்கச் சொன்னீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்? (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்? அதைச் சொல்லுங்கள்.

*பிற்பகல் 1-50*

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ** என்று தவறான தகவலைக் கூறுகின்றார். அந்தப் பெயரை மட்டும் அல்ல, எங்கள் தலைவரைப் பற்றி சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் தவறாக ஒன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடு) இல்லை, உறுப்பினர் ஒருமையில் பெயரைச் சொன்னதை மரியாதையாக சொல்லச் சொன்னேன். (குறுக்கீடு) இல்லை, உறுப்பினர் ஒருமையில் பெயரைச் சொன்னதை நான் எதிர்க்கட்சித் தலைவர் என்று மரியாதையாகக் குறிப்பிடச் சொன்னேன். (குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடு) அவர் ஒன்றும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தவறான வார்த்தைகளைச் சொல்லவில்லை. உறுப்பினர் குறிப்பிட்டது தவறான தகவலாக இருந்தால், அதனை மறுத்துச் சொல்லுங்கள். அனுமதி தருகிறேன். (குறுக்கீடு) இல்லை, மறுத்துச் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் சக்தி, உங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் சக்தி, உங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குப்த மன்னர்கள் காலத்தில் நாம் பொற்கால ஆட்சி என பள்ளிப் பாடங்களில் படித்திருக்கிறோம். ஆனால், இன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியை நாம் கண்ணாறக் காண்கிறோம். மேலும், Alexander the Great, . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சக்தி, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன். (குறுக்கீடு) உங்களுக்குப் பேச வாய்ப்புத் தரும்போது நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது, பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு) பேசும்போது அதற்குப் பதில் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது அதற்கு பதில் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை. தனிப்பட்ட முறையில் உங்களை ஒன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடு) தனிப்பட்ட முறையில் குற்றச்சாட்டு ஒன்றும் சொல்லவில்லை. பெயரை ஒருமையில் சொன்னார். நான் மரியாதையாக எதிர்க்கட்சித் தலைவர் என்று சொல்லச் சொன்னேன். அவ்வளவுதான். (குறுக்கீடு) மாற்றுக் கருத்து இருந்தால் சொல்லுங்கள். நான் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடு) மாற்றுக் கருத்து இல்லாதபோது அனுமதிக்கத் தேவையில்லை. அவர் தவறாக ஏதும் பேசவில்லை. (குறுக்கீடு) அவர் தனிப்பட்ட முறையில் பெயரை மட்டும் ஒருமையில் சொன்னார். ஒருமையில் சொன்னதை எதிர்க்கட்சித் தலைவர் என்று நான் மாற்றியிருக்கிறேன். (குறுக்கீடு) அவர் ஒருமையில் சொன்னார். (குறுக்கீடு) இல்லை. திரு. மோகன்ராஜ் பேசுவது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், சொல்லுங்கள். (குறுக்கீடு) இவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது, உட்காருங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) அவைக்கு முரணான கருத்துகள் ஒன்றும் சொல்லவில்லையே? (குறுக்கீடு) அவைக்கு முரணான கருத்து ஒன்றும் சொல்லவில்லை. எதை நீக்கச் சொல்கிறீர்கள் என்னை? (குறுக்கீடு) மாண்புமிகு திரு. சு. குணசேகரன் அவர்கள்.





**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உரையாற்றுகின்ற நேரத்தில், நாட்டைச் சீரழித்த காங்கிரஸ் கட்சியினுடைய பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராகவும், நாட்டை மதசார்போடு துண்டிக்கத் துடிக்கிற சக்திகளுக்கு எதிராகவும், ஒரு வலுவான கூட்டணியை உருவாக்கியிருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியை மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. பிரின்ஸ் அவர்கள் பேசுகிற நேரத்தில், அதை ** என்று சிறுமைப்படுத்துகிற வார்த்தைகளால் கூறியிருக்கிறார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன். (குறுக்கீடு) திருமதி சக்தி நன்றி சொல்ல வேண்டாம், நீங்கள் உட்காருங்கள். இப்போது போதிய நேரம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஆர். அருள்செல்வன். (குறுக்கீடு) தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கொஞ்சம் நீங்கள் ஒத்துழையுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நீங்கள் கொஞ்சம் ஒத்துழையுங்கள்.

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் விவாதத்தில் கலந்துகொள்வதற்கு எனக்கு வாய்ப்பைத் தந்த எங்களது நெஞ்சமெல்லாம் நிறைந்த தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) மரியாதைக்குரிய எங்கள் அன்புத் தலைவர் கேப்டன் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வேளாண்மைத் துறைக்கு நிதி ஒதுக்கப்படுகின்றபோது, வேளாண்மைத் தொழிலில் தொழிலாளர்கள் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினால், தொழிலாளர்களுக்கு உரிய, விஞ்ஞான ரீதியான கருவிகள் வழங்க வேண்டுமென்பதற்காக, அனைத்துக் கருவிகளும், நெல் அறுவடை இயந்திரங்கள் போன்ற கருவிகள் எல்லாம் வழங்குவதற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த இயந்திரங்கள் எல்லாம் பற்றாக்குறையின் காரணமாக அண்டை மாநிலங்களிலிருந்து வந்துகூட நமது மாநிலத்திலே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். மற்ற அனைத்துத் துறைகளிலும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு நீங்கள் ஒதுக்கியிருந்த அந்த 100 கோடி ரூபாய் போதாது என்ற காரணத்தினால், ஒவ்வொரு ஊராட்சிக்கும், ஊராட்சி வாரியாக இந்த இயந்திரங்கள் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே வைக்கின்றேன். ஆகவே, இதற்குரிய அந்த நிதியை அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று நான் கோரிக்கையாக வைக்கின்றேன்.

பிற்பகல் 1-55

அடுத்தபடியாக விவசாயிகளுக்குக் கூடுதல் வருவாய் தரக்கூடியவை, விவசாயிகளுக்கு மிக உதவியாக இருக்கின்றவை கால்நடைகள். அந்தக் கால்நடைத் துறைக்கு நிதி ஒதுக்கியிருந்தாலுங்கூட, குறிப்பாக கடந்த காலங்களிலே—அனைவருக்கும் நன்றாகத் தெரியும்—கோமாரி என்ற நோய் பாதிக்கப்பட்டு இலட்சக்கணக்கான மாடுகளை விவசாயிகள் இழந்து, பொருளாதார ரீதியாக தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோமாரி நோய் அக்டோபர் மாதம் தாக்க ஆரம்பித்து டிசம்பர் மாதமே முழுக் கட்டுப்பாட்டுக்குள்ளே வந்துவிட்டது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று ஏறக்குறைய 220 சிறப்புக் குழுக்களை அமைத்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக 1½ கோடி ரூபாய் மருந்துகளை அளித்ததால், அந்த நோய் டிசம்பர் மாதமே கட்டுக்குள் வந்துவிட்டது. அரசியல் கட்சித் தலைவர்கள் தான் அதிகப்படுத்துகிறார்களே தவிர, மொத்தமே





1,124 கால்நடைகள்தான் தமிழகம் முழுவதுமே இறந்தன என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தற்சமயம் கோமாரி நோய் இரண்டு மாத காலமாக ஓர் இடத்திலும் இல்லை என்பதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு) மொத்தமே 1,124 கால்நடைகள்தான். பத்திரிகைகளும், எதிர்க்கட்சிகளும்தான் அதிகப்படுத்துகின்றனவே தவிர, இலட்சக்கணக்கில் இல்லை, ஆயிரக்கணக்கில்கூட இல்லை. 1,124 கால்நடைகள்தான் இறந்திருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது இயந்திரங்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே இயந்திரங்கள் கடந்த ஆண்டிலும், இந்த ஆண்டிலும் போதுமான அளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டு 2012-2013 ஆம் ஆண்டிலே 90,931 இயந்திரங்கள் ரூபாய் 7,431.11 இலட்சம் செலவிலே வாங்கி, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, 2013-2014 ஆம் ஆண்டிலே இதுவரை 20,680 இயந்திரங்கள் ரூபாய் 2,801.48 இலட்சம் செலவிலே வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலே பற்றாக்குறை ஏற்பட்டாலுங்கூட, பல இடங்களிலே குறைந்த வாடகையிலே இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதை முறையாக நம்முடைய விவசாயிகள் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களே, . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன், நீங்கள் என்னைப் பார்த்து பேசுங்கள்.

**திரு. ஆர். அருள்செல்வன்:** நான் உங்களிடம் கோரிக்கையாக வைப்பதெல்லாம் ஊராட்சிக்கு ஊராட்சி அந்த அறுவடைக் கருவிகளை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையைத்தான்

உங்களிடம் வைத்திருக்கின்றேன். தயவுசெய்து அதை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன். மேலும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது இலட்சக்கணக்கான மாடுகள் இறக்கவில்லை, சில ஆயிரங்கள்தான் இறந்திருக்கின்றன என்று சொன்னார்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில ஆயிரங்கள் கூடக் கிடையாது. *1,124* மாடுகள்தான் இறந்திருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சார்ந்திருக்கின்ற நாகப்பட்டினம் மாவட்டத்திலே *447*. இதைவிட அதிகமாக இருந்தால் அவர்களால் அதை நிரூபிக்க முடியுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். நேரமாகிவிட்டது.

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலட்சக்கணக்கான மாடுகள் இறந்திருக்கின்றன என்று விவசாயச் சங்கங்கள் சொல்லியிருக்கின்றன. மேலும், இங்கிருக்கின்ற பல கட்சிகளும் இதற்குப் போராட்டங்கள் எல்லாம் நடத்தியிருக்கின்றன. ஆகவே, நீங்கள் அரசுக் கணக்கின்படி. . .

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொல்கிறேன். அரசியல் கட்சிகள்தான் இதைப் பெரிதுபடுத்தினவே தவிர, கோமாரி என்ற





நோய் மழைக் காலங்களில் வழக்கமாக வரக்கூடியதுதான். புதியதாக வந்த நோய் அல்ல. நாகப்பட்டினம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மாடுகள் மொத்தம் *12,350* தான். அதில் *447* மாடுகள்தான் அங்கே இறந்திருக்கின்றன என்பதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கின்றேன். அரசியல் கட்சித் தலைவர்களும், பத்திரிகைகளும்தான் அதைப் பெரிதுபடுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சீரிய நடவடிக்கையினால், இதுவரையில் இல்லாத அளவிற்கு *220* சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டதால், அந்த நோய் ஒரே மாதத்தில் கட்டுக்குள் வந்துவிட்டது என்பதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஆதாரத்தோடு இங்கு பேச வேண்டும். இப்படி ஆதாரம் இல்லாமல் இங்கே பேசக்கூடாது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *18-2-2014* (செவ்வாய்க்கிழமை) காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2-00 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*20. 2011-2012ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*3. 2014-2015 ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரை மற்றும் வரவு-செலவுத் திட்ட வெளியீடுகள் எண்கள் 56 முதல் 59 வரை (58 புத்தகங்கள்).*

*4. 2014-2015 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.*

*5. 2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை.*

[2014 பிப்ரவரி 17

*6. 2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு-பகுதி-I.*

*7. 2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு-பகுதி-II.*

*8. 2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்.*

*9. 2014-2015 ஆம் ஆண்டுத் திட்டம் (திட்டம்-வரவு செலவுத் திட்ட இணைப்பு) (2014-2015 ஆம் ஆண்டு விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு).*

*10. 2014-2015 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி-II திட்டங்கள்).*

*11. 2014-2015 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.*

*12. 2014-2015 ஆம் ஆண்டு செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.*

*13. 2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)*

*14. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)*

—